

# ஞானச்சுடர்




ஐப்பசி

2016

226 ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்**
**டென்னாற்றுங் கொல்லோ உலகு.**

**பொருள் :** தமக்கு நீரை உதவுகின்ற மேகங்களுக்கு உயிர்கள் என்ன கைம்மாற்றைச் செய்கின்றன. அம் மேகங்களைப் போன்றவர்கள் செய்யும் உபகாரங்கள் கைமாறு கருதிச் செய்யப்படுவனவல்ல. (211)

**தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

**பொருள் :** நல்லவர் முயன்று சேகரித்த பொருளெல்லாம் பிறர்க்கு உபகாரம் செய்தற்குப் பயன்படும். (212)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை
## முத்தி நல்குமே
## ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



தூதுசுந் தரர்க்காய்ச் சென்றாய் நள்ளிருட்
போதுசம் பந்தர்க்குப் பொற்கிழி கொடுத்தாய்
மாதுலர்க் காக வழக்குமுன் னுரைத்தாய்
சேது மேவிய செல்வா நீதுணை
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 80

தென்னவன் தீப்பிணி தீர்த்தாய் முன்னாள்
மன்னவ னாக மதுரையில் வாழ்ந்தாய்
அன்னந் தண்ணீ ரரசுக் கீந்தாய்
என்னநான் கேட்பே னெந்தாய் இரங்காய்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 81

தேவர் பிரான்பழி தீர்த்தாய் கூடலில்
சேவக னாகக் குதிரை செலுத்தினை
மூவர் தமிழ்மொழி கேட்டுகந் தாய்முன்
காவல னாகவும் நடித்தனை நீயே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 82

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 226

2016 ஐப்பசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஆறுபடை வீடு | கு. சோமசுந்தரம் | 01 -06 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 07 -09 |
| நீ கருணை வெள்ளமன்றோ...! | நா. நவராஜ் | 10 -11 |
| அகத்தை மாற்றியபின்... | செல்வி செ. ஜடா | 12 -13 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 14 -18 |
| முருகனும் வள்ளலாரும் | நீர்வை ராசுக்குருக்கள் | 19 -21 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 22 -25 |
| தாயினு நல்ல தலைவன் | அ. சுப்பிரமணியம் | 26 -28 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 29 -32 |
| அன்னதானக் கந்தன்... | இ. ஸ்ரீதரன் | 33 -34 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 35 -37 |
| தொண்டின் மகத்துவம் | பு. கதிரித்தம்பி | 38 -40 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 41 -46 |
| தமிழ் வளர்த்த தெய்வம்... | செல்வி ந. தில்லைநாயகி | 47 -48 |
| நித்திய அன்னப்பணிக்கு... | சந்நிதியான் ஆச்சிரமம் | 49 -50 |
| மாதா பிதா | யூ.பி. ஆனந்தம் | 51 -52 |
| கால்நடைகளைக் காக்கும்... | ஆர்.வீ. கந்தசுவாமி | 53 -54 |
| ஆச்சிரமம் கண்ட பெருவிழா | வல்வையூர் அப்பாண்ணா | 55 -70 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் புரட்டாதிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

225ஆவது ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை இளைப்பாறிய இசை ஆசிரியர் திரு சி. சிவஞானராஜா அவர்கள் நிகழ்த்தினார்கள். ஆசிரியர் புலமை சார்ந்தவராகவும், இசை விற்பன்னராகத் திகழ்வதாலும் தனது வெளியீட்டுரையினை கவிதை வடிவில் உருவாக்கி அதனைச் சபையில் உள்ள அடியார் மத்தியில் கவிதை நயத்தோடு பாடிப் பரவசப்படுத்தினார். அக்கவிதை இம்மாத மலரில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## மதிப்பீட்டுரை:-

புரட்டாதிமாத 225ஆவது ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உப அதிபர் திரு ச. லலீசன் அவர்கள் மேற்கொண்டார்கள்.

அன்றையதினம் ஆச்சிரம சுவாமிகள் கௌரவிப்பு, ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களை வழங்கியோரின் கௌரவிப்பு, 225ஆவது ஞானச்சுடர் மலர் வெளியீடு போன்ற நிகழ்வுகள் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றவேளை திரு ச. லலீசன் அவர்களது மதிப்புரையானது மிகவும் காத்திரமாக அமைந்திருந்தது.

அவரது மதிப்பீட்டுரை மதியம் தாண்டி இடம்பெற்றாலும் மண்டபத்தில் கணிசமான வகையில் ஆச்சிரமத்தோடும், ஞானச்சுடர் மலரோடும் தொடர்புபட்ட அன்பர்கள் வீற்றிருந்த காரணத்தால் அவரது நயமிக்க சொல்லாடல் அனைவரையும் கவரும் வண்ணம் அமைந்திருந்தது. குறிப்பாக ஆச்சிரம சுவாமிகளைக் கௌரவிக்கும் நிகழ்வினையொட்டியும் விழா இடம்பெற்ற வேளை சுவாமி அவர்களைப் பற்றியும், அவரால் ஆற்றப்படும் தொண்டுகள் பற்றியும் வெளியிடப்பட்ட 225ஆவது ஞானச்சுடர் மலர் பற்றிய மதிப்பீட்டுரையில் மலரின் உள்ளே அமைந்த கட்டுரைகள் அனைத்தும் ஆச்சிரமம் சார்ந்தவையாக அமைந்திருந்ததால் சுவாமிகளின் கௌரவிப்பு நிகழ்வு சார்ந்த மலர் எனும் கருத்தை மலரின் முன் அட்டையில் பதித்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும் எனும் தனது கருத்தினையும் கூறி மலரின் மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

நாம் பூர்வ ஜென்மத்தில் செய்த புண்ணிய, பாவத்திற்குத் தக்கபடி இறைவன் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நிலையில் பிறக்கும்படியாகச் செய்கின்றான்.

ஒருவன் செய்கின்ற நன்மையும் தீமையும் பல வகைப்படும். பிறர் அறியும்படி செய்வது, அறியாதபடி செய்வது, தான் உணர்ந்து செய்வது, உணராமற் செய்வது, பயன் கருதிச் செய்வது, பயன் கருதாது செய்வது, தீமையாகத் தோன்றியது - நன்மையாகப் பயன் கொடுப்பது, நன்மைபோலத் தோன்றியது - தீய பயனைக் கொடுப்பது என்பன அவ் வகைகளாகும். ஒருவன் இப்பிறவியில் செய்த நன்மைக்கும், தீமைக்கும் பயனாக இன்ப துன்பம் இவ்வுலகத்திலேயே அனுபவிப்பதும் உண்டு. ஒருவன் மற்றவனுக்கு செய்யும் நன்மைக்குப் பதிலாக அவனே இவனுக்கு நன்மை செய்து விடுவதையும், கூலி வேலை செய்பவன் வேலை செய்த பயனுக்கு உடனே அவ்வேலைக்குரிய கூலியைப் பெற்று நன்மை அடைவதை இவ்வுலகத்திலேயே நாம் செய்த வினையின் பயனைப் பெறுவதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ஒருவன் பிரதியுபகாரம் கருதாமல் பிறருக்கு நன்மையான காரியம் செய்தால் அது நல்ல காரியமாகப் பதிவு செய்யப்படுகின்றது. அச்செயற்பாடு மறுபிறவியில் முன் செய்த புண்ணியமாக வருகிறது. அதேபோன்று ஒருவன் செய்த தீய செயலின் பயனை இவ்வுலகில் அனுபவியாதிருந்தால் அது அவனுக்கு மறுபிறவியில் பாவமாக வருகிறது. பிறர் அறியாமல் மறைத்து செய்தாலும் அவையெல்லாம் தவறாமல் பதிவாகிவிடும். புண்ணிய பாவங்கள் மனத்தினாலும், வாக்கினாலும் நாம் செய்யும் செய்கையினாலும் உண்டாகின்றன. தனித்தனியாக புண்ணியத்திற்குரிய பலனையும், பாவத்திற்குரிய பலனையும் கடவுள் விதித்தபடியே அனுபவித்தே தீரவேண்டும். ஒன்றை ஒன்றிலிருந்து கழிக்க முடியாது. அதேபோன்று ஒருவர் செய்த வினையை மற்றவர் அனுபவிக்க முடியாது. அவரவர் செய்த பயனை அவரவரே அனுபவிக்க வேண்டும் என்பது எப்பவோ முடிந்த முடிவு.

நாம் செய்யும் காரியங்கள் எல்லாவற்றிற்கும் கடவுளே பொறுப்பு என்று கூறுதல் கூடாது. சகல காரியங்களையும் நமக்குக் கடவுள் வழங்கிய பகுத்தறிவின்மூலம் எது நல்லது? எது கூடாதது? என்று உய்த்துணர்ந்து அதனைக் கடைப்பிடித்து ஒழுகுவோமானால் எமது வாழ்வு புனிதமடையும். அதன் பலன் மறுபிறவியிலும் எம்மை நல்ல நிலைக்கு இட்டுச் செல்லும்.

# 225 ஆவது ஞானச்சுடர் இதழ் வெளியீடு

ஞானகுரு வானசந் நிதிமுருகன் பேறாக
ஆனபெரும் பீடமே சந்நிதியான் ஆச்சிரமம்
மோனஸ்ரீ ரமணமக ரிஷிமொழிந்த வாக்கினால்
தானமொடு தர்மங்கள் வான்முட்ட நடக்கிறது.

மௌனதவ முனிவர்மயில் வாகன சுவாமிகள்
மருவிய அறச்சாலை இன்றுபெருங் கோயில்
மோகன மாய்நின்று ஆற்றிவரும் சேவைக்கு
முதல்வராம் மோகன சுவாமியே முருகன்.

முன்பள்ளி தொடக்கம் மலையகம் வரைக்கும்
மேன்மைதரு பல்கலை மாணவர் சிறக்கவே
அன்பர்பணி செய்யமுதி யவர்கள்மனம் குளிர
அன்னையர் படுதுயரம் அகலவழி புரிகிறது.

மருத்துவ சேவைகள் மாணவர் உதவிகள்
மனிதாபி மானதாம் இலவச உபகாரங்கள்
கருத்துக்கள், விளையும் ஒரு, பல்கலைக் கழகமிது
கலைக்களஞ், சியமாக ஞானச்சுடர் ஒளிருது.

பதினெட்டு ஆண்டுகள் பக்கம் பதினாறாயிரம்
பார்ப்பவரை அள்ளும் கட்டுரை ஐயாயிரம்
அதிரும் நிகழ்வுகள் ஆயிரம் அரங்கேற்றம்
அன்னம் தானம் இரண்டும் அட்சய பாத்திரம்.

உரைநடைத் தமிழ்வளர்க்கும் ஒப்பற்ற சுடரிது
ஒருபோதும் எப்பிழையும் இருக்காத அழகிது
கரைசேரக் கையிலே வழிகாட்டும் நூலிது
கைகண்ட மருந்தாம் மாதமொரு (அரு)மருந்திது.

பல்கலைக் கழகமிதை ஆய்வாகக் கொண்டு
பரிந்துரை செய்யவே நூலாகக் கண்டு
நல்லறம் பெருக்கும் நம்நாட்டில் ஒன்று
"ஞானச்சுடர்" இன்று இருநூற்றி இருபத்தைந்து.

ஞானகுரு ஞானதரு ஞானதிரு ஞானவயல்,
ஞானமுகில் ஞானஇயல் ஞானத்தமிழ் ஞானஇதழ்
ஞானவொரு பீடமிது ஞான அருள் தோட்டமிது
ஞானச்சுடராலே (கலா) நிதிகளும் வரமாகுது.

மோகன நூலிது மோகன அழகிது
மோகனப் பாரமிது மோகனப் பிரசாதமிது
மோகனப் பொருளிது மோகன அறிஞரது
மோகன தாசனது மோகனப் படைப்பிது.

இதுவொரு ஆவணம் இதுவொரு பொக்கிஷம்
இதுவொரு அற்புதம் இதுவொரு நூதனம்
இதுவொரு மான்மியம் இதுவொரு ஆன்மீகம்
இதுவொரு வான்முகில் முதுபெரும் சுடரிது.

உரைநடை தந்ததமிழ் நாவலர் போல
உயர்சிவை தாமோதரம் பிள்ளை போல
நிரைகழல் மருதர் கதிர்காமர் வரம்போல
நிறைஞானச் சுடர்மோகன் சுவாமிபோல் வாழ்க.

பரிமளா துணையாக பிள்ளைகள் அரணாக
பாலிக்கும் சந்நிதி முருகனே பொருளாக
சரியான பாதையில் உலகினைச் செறிவாக்கும்
சந்நிதியான் ஆச்சிரமம் சந்நிதிபோல் வாழ்க.

-திரு கே.எஸ். சிவஞானராஜா-

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. சண்முகராஜா
(லண்டன்)

M. சதாசிவமூர்த்தி
(கனடா)

கனகராசா ஸ்ரீமோகனன்
(பிரதேச செயலர், தெல்லிப்பழை)

செ. ஞானசபேசன்
(கிராம அலுவலர், ஏழாலை)

சி. மகேஸ்வரன்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், புத்தூர் )

சி. உதயகுமார்
(கிராம அலுவலர், கைதடி)

தலைவர்
(ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி)

தி. இரவீந்திரநாதன்
(அதிபர், கலைமணி வீதி, கட்டைப்பிராய்)

திருமதி கமலாம்பிகை ஸ்ரீஸ்கந்தராசா
(சுண்ணாகம்)

ம. குகதாசன்
(வரணி)

சி. ஜெயபரன்
(மானிப்பாய்)

உரிமையாளர்
(நந்தினி என்ரபிரஸ், யாழ்ப்பாணம்)

சி. துளசிங்கம்
(சந்நிதி, தொண்டைமானாறு)

நா. செல்வராஜா
(கொக்குவில்)
சி. சேது
(அச்சுவேலி)
S. செல்வராசா (செல்வி)
(சேவிஸ் ஸ்ரேஷன், புலோலி)
மு. அப்புலிங்கம்
(கோண்டாவில் கிழக்கு)
S. தங்கசிவம்
(நல்லூர் யாழ்ப்பாணம்)
ந. சிவக்குமார்
(ராஜன் எலக்ரோணிக், அச்சுவேலி)
திருமதி சசிலேகா ஜெயராஜன்
(ஆசிரியர், தோப்பு, அச்சுவேலி)
ப. தியாகராஜசர்மா
(திருமகள் வாசா, ஆவரங்கால்)
மகாலிங்கம் செல்வமணி
(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)
K. முகுந்தன்
(ஞானபண்டிதர் பாடசாலை அருகில், கொக்குவில்)
நா. நாகராசா
(பக்கிஸ்லேன், மானிப்பாய்)
ந. மணிவண்ணன்
(இரும்புமதவடி, வதிரி)
இராதாகிருஷ்ணன் கிரிதரன்
(தம்பலடி, பொலிகண்டி)
யோகதாசன் ராஜனி
(பூதவராயர் கோவிலடி, உரும்பராய்)
செ. இராசநாயகம்
(காப்பாளர், இ.போ.ச, அல்வாய்)
K. சீவரெட்ணம்
(கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்)

வைரவன் கனகன்
(சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி)
வே. முருகவேள்
(நெடியகாடு, வல்வெட்டித்துறை)
க. சத்தியதாஸ்
(வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி)
வ. இராசநாயகம்
(கவிதா பொடி பில்லேர்ஸ், கரவெட்டி)
க. வசந்தகுமார்
(ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(ஸ்ரீதேவி தொலைத்தொடர்பகம், அச்சுவேலி)
விக்னேஸ்வரி கணேசநாதன்
(வேளாங்கண்ணி, ஏழாலை)
சி. பத்மராசா
(நவிண்டில், கரணவாய்)
T.R. இரத்தினவேல்
(அரசவீதி, உரும்பராய்)
A. முரளிகரன்
(ஊரெழு)
பா. இந்துராணி
(மல்ரி ஓயில், இணுவில்)
சு. சுந்தரலிங்கம்
(வேவில் லேன், வல்வெட்டி)
வீ. வடிவேலு
(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)
Dr தர்மலிங்கம்
(நீர்வேலி)
சிவலிங்கம் சுகந்திகா
(ஆதியாமலை, உடுப்பிட்டி)
த. கனகம்
(பன்னாலை, நீர்வேலி வடக்கு)

நவரத்தினம் இந்திரமோகன்
(சண்டிலிப்பாய் மேற்கு)

திருமதி சிவநிதி முருகானந்தன்
(கட்டுடை, மானிப்பாய்)

இராசரத்தினம் வேல்குமார்
(இணுவில்வீதி, மானிப்பாய்)

P. சபாநாதன்
(யாழ்வீதி, மானிப்பாய்)

M. செந்தூரன்
(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

க. முருகானந்தம்
(காளிகோவிலடி, மல்லாகம்)

த. சொக்கலிங்கம்
(இணுவில் தென்மேற்கு)

பா. சியாமளநாயகி
(சுண்ணாகம் கிழக்கு)

கிட்டிணன் ஜெயக்குமார்
(சிவன்வீதி, சிறுப்பிட்டி மேற்கு)

கு. ஜெகதீஸ்வரன்
(இராசவீதி, கோப்பாய் வடக்கு)

கி. ஜெயக்குமரபதி
(இடைக்காடு, அச்சுவேலி)

க. துரைராசா
(சுதுமலை தெற்கு)

அருச்சுனன் சுனோஜா
(தும்பளை தெற்கு)

சி. புஸ்பரதி
(கரணவாய் மத்தி)

இ. சிவபாதம்
(நீலயில் வாசா, அல்வாய்)

# ஞானச்சுடர் சந்தாதாரரின் கவனத்திற்கு...

வணக்கம்!

தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள். 2017ஆம் ஆண்டுக்கான உங்களுடைய சந்தாப் பணத்தினைச் செலுத்தி தங்கள் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். புதிய ஆண்டில் பிரதிகளைத் தவறாது பெற்றுக் கொள்வதற்கு வசதியாக தங்கள் சரியான முகவரியைத் தபால் மூலமோ - தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-

# அனைவருக்கும் அன்பான தீபாவளி வாழ்த்துக்கள்

சந்நிதியான் ஆச்சிரமத்து அனைத்துப் பணிகளிலும் நம்மோடு இணைந்திருக்கின்ற அன்பர்கள் - ஆதரவாளர்கள், "ஞானச்சுடர்" சஞ்சிகையின் கட்டுரை - கவிதையாளர்கள், வெளியீட்டுரை - மதிப்பீட்டுரை நிகழ்த்தும் அன்புள்ளங்கள், வாராந்த-மாதாந்த - விஷேட நிகழ்வுகளில் பங்களிப்புச் செய்வோர் அனைவருக்கும் எமது உள்ளன்பான தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக.

-சுவாமிகளும்,
சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரும்-

# ஆறுபடை வீடு

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே"

-கந்தரலங்காரம்.

செந்தமிழ்த் தெய்வமெனப் போற்றப்படுகின்ற முருகக்கடவுள், தமிழ் மக்களால் பண்டுதொட்டு வணங்கி வழிபாடு செய்யப்பட்டு வரும் தெய்வ மூர்த்தியாகும். பண்டைய சங்கத்தமிழ் இலக்கியங்களில் முருகன் குறிஞ்சிநிலக் கடவுள் எனக் குறிப்பிடப்படுகிறான். மலையும் மலைசார்ந்த இடங்களையும் குறிஞ்சி நிலம் எனப் பண்டைத் தமிழ் மக்கள் அழைத்தனர்.




"சேயோன் மேய மைவரை உலகம்"

என்கிறது தொல்காப்பியம். சங்ககால நூல் களைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என இரு தொகுதிகளுள் அடக்குவர். திருமுருகாற்றுப்படை என்னும் நூல், பத்துப் பாட்டில், முதன் நூலாக இடம்பெற்றுள்ளது. இந்நூல் சங்கப்புலவர்களுள் தலைமைப் புலவராக விளங்கிய நக்கீரரால் இயற்றப்பட்டது. இவ் ஆற்றுப்படை முருகப்பெருமான்மீது பாடப் பெற்றது. முருகனின் பெருமை, புகழ், சிறப்பு என்பன பற்றிப் பேசப்படுவதோடு, முருகன் விரும்பி உறையும் ஆறுபடை வீடுகள் பற்றியும் குறிப்புகள் இந்நூலில் உள்ளன. திருமுருகாற்றுப்படை சைவத் திருமுறைகளில் பதினொராந் திருமுறைப் பிரபந்தங்களுள் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பரிபாடல் என்னும் பண்டைத் தமிழ் இலக்கிய நூலிலும் முருகக் கடவுள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

முருகு என்றால் அழகு என்று பொருள். அழகினை ஆராதித்தவர்கள் பண்டைத் தமிழர்கள். இயற்கை அழகில் இறைவனைக் கண்டு தரிசித்தவர்கள். அந்த அழகுத்

தெய்வத்தை ஒரு கட்டிளைஞனாக, செந்நிறத்தனாக உருவகித்துப் பார்த்து மகிழ்ந்தனர். குமரன், முருகன் எனப் பெயரிட்டு அழைத்தனர்.

தமிழுக்கும் முருகனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழ் என்றால் இனிமை என்றும், அது என்றும் இளமையுடன் திகழ்வது என்றும் கூறப்படுகிறது. அவ்வாறுதான், முருகனும் என்றும் இளமையுடைய குமரன் ஆகவும், இனிமையுடைய அழகன் ஆகவும் விளங்குகிறான். அகத்திய முனிவருக்குத் தமிழ் உரைத்து, அம் முனிவர்மூலம் நமக்குத் தமிழ் தந்தவன் முருகன்.

"குறுமுனிக்குத் தமிழுரைக்கும் குமர" என்பது பாடலடி. "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்கிறது நிகண்டு நூல். தமிழ் என்ற சொல்லின் பொருள், இனிமையும் நீர்மையும் என்பது இதிலிருந்து புலனாகின்றது. முருகன் என்றாலும் அழகு, இனிமை, நீர்மை என்றே பொருள்படும். முருகன் வேறு தமிழ்வேறு அல்ல என்பதும் உணரற்பாலது. அமிழ்தினும் இனியது தமிழ்; தமிழ் தந்த முருகன் தமிழினும் இனியன் ஆக உள்ளான்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்;
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்பது திருமூலரின் மந்திரவாக்கு. நமக்கு இந்தச் சரீரமும் புலன் பொறிகளும், மனம் முதலிய உட்கரணங்களும் இறைவனால் அருளப்பட்டதன் காரணம், அவற்றின் துணைகொண்டு நன்றாகத் "தமிழ் செய்தலுக்கே"யாகும் என்று திருமூலர் கூறுகிறார். அப்படியாயின், "தமிழ் செய்தல்" என்னுந் தொடர், இனிமை செய்தல், நீர்மை செய்தல், அன்பு செய்தல், ஒப்புரவு செய்தல் என்பவற்றையே உணர்த்தி நிற்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த மானுடப்பிறவி எடுத்ததன் நோக்கம் தமிழ் செய்தலுக்காகும் என்பது தெளிவாகிறது. தமிழ் செய்தலை மறந்தால், இப்பிறவி எடுத்ததன் நோக்கம் நிறைவேறாமல் போய்விடுகிறது என்பது இதிலிருந்து வெளிப்படும் கருத்தாகும்.

தமிழும் முருகனும் வேறல்ல; தமிழே முருகன்; முருகனே தமிழ் என்பதன் கருத்தும் ஆழ்ந்து சிந்திக்கற்பாலது. "தமிழ் செய்தல்" உணர்த்துகின்ற அதே பொருளைத்தான், "முருகனை வழிபடுதல்" என்ற தொடரும் உணர்த்துகின்றது. முருகனை உபாசித்தல், வணங்குதல், வழிபாடு செய்தல் என்றால், சகல மனிதர்களுக்கும், மற்றும் சீவராசிகளுக்கும் அன்பு செய்தல், நீர்மை செய்தல், ஒப்புரவு செய்தல், இனிமை செய்தல் ஆகும்.

தமிழ் வாழும் மொழி. எம்மை வாழ வைக்கும் மொழி. "என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்" என்கிறார் கம்பநாடர். முருகன் வாழுந் தெய்வம்; கண்கண்ட தெய்வம்; என்றென்றும் எம்மை வாழ்விக்கும் தெய்வம். திருமுருக கிருபானந்த வாரியார், முருகனுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பினைப் பின்வருமாறு கூறுகிறார்.

| | |
|---|---|
| முருகனுக்குத் தோள்கள் 12; | தமிழில் உயிரெழுத்துக்கள் 12 |
| முருகனுக்குக் கண்கள் 18; | தமிழில் மெய்யெழுத்துக்கள் 18 |
| முருகனுக்கு முகங்கள் 6; | தமிழில் இன எழுத்துக்கள் 6 |
| முருகனுக்கு வேல் 1; | தமிழில் ஆய்த எழுத்து 1 |

"செந்தமிழ்ப் பெருமாள்" என்று அருணகிரிநாதர் முருகனை அழைக்கிறார். அந்தச் செந்தமிழ் முருகனே, தமிழையும் தந்துள்ளான் என்பதை,

*சினத்தை அடக்கினால் மனத்தை வெல்லலாம்.*

"அருணதள பாதபத்மம் அதுநிதமுமே துதிக்க
அரிய தமிழ் தானளித்த மயில்வீரா..."

என்று வரும் திருப்புகழ் அடியில் அருணகிரிநாதர் அழகாகக் குறிப்பிடுகிறார்.

அத்தகைய செந்தமிழ் முருகனுக்கு இன்று உலகம் முழுவதும் திருக்கோயில்கள் உள்ளன. எனினும், தமிழ் நாட்டில் ஆறு தலங்கள் மிக முக்கியமான தலங்களாகக் கொள்ளப்படுகின்றன. அவற்றை முருகனின் ஆறுபடை வீடுகள் எனத் திருமுருகாற்றுப்படை சிறப்பிக்கிறது.

அவையாவன:

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூர், திருவாவிநன்குடி என்னும் பழநி, திருவேரகம் என்னும் சுவாமிமலை, குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்பனவாகும்.

இந்த ஆறுபடை வீடுகளும் நமது உடம்பிலே உள்ள ஆறு ஆதாரங்கள் எனப்படுகின்றன.

மூலாதாரம் -திருப்பரங்குன்றம்
சுவாதிஷ்டானம் -திருச்செந்தூர்
மணிபூரகம் -பழநி
அநாகதம் -சுவாமிமலை
விசுத்தி -குன்றுதோறாடல்
ஆக்ஞை -பழமுதிர்சோலை

ஆறுமுகக் கடவுள், எம்முள் உள்ள மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களிலும் வீற்றிருக்கின்றான். அதனாலேயே நாம் உயிர்ப்புடன் இயங்குகின்றோம். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. அந்த வகையில் அகக்கண்ணினால் எம்முள்ளே ஆறுமுகனைக் கண்டு தரிசிக்கலாம். அதேவேளை, நம் புறக்கண்களாலும், முருகனைக் கண்டு தரிசிக்கவே, திருப்பரங்குன்றம் முதலிய ஆறுபடை வீடுகளிலும் அவன் எழுந்தருளியிருந்து அன்பர்களுக்குக் காட்சியளிக்கிறான்

இந்த ஆறுபடை வீடுகளிலும் எழுந்தருளியுள்ள ஆறுமுகப் பெருமானை வணங்கி, வழிபட்டு, ஓம் சரவணபவ என்னும் ஆறெழுத்து மந்திரத்தை அனுதினமும் ஓதி வரும் அடியவர்களின் மனக்கோயிலில் அந்த முருகப்பெருமான் நீங்காது உறைவான் என்பதைக் கந்தர் கலிவெண்பா பின்வருமாறு உணர்த்துகிறது.

"ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தை குடி கொண்டானே"

என்பது அப்பாடல் வரிகள்.

இலங்கையில் கதிர்காமம், மண்டூர், சித்தாண்டி, நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம் ஆகிய ஆறு கந்தன் ஆலயங்களையும் ஈழத்து ஆறுபடை வீடுகள் ஆகக் கொள்ளப்படும் வழக்கமும் உள்ளது.

பகைவர்களை ஒழிப்பதற்காக, வேந்தனும் அவனின் வீரர்களும் தங்கியிருக்கும் பாசறைகளைப், படை வீடுகள் என்று குறிப்பிடுவர். முருகன் தனது தேவ சேனைகளுடன்,

தேவசேனாதிபதியாக, இந்த ஆறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம் முதலிய தலங்களில் தங்கியிருந்து, சூரபத்மன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் முதலிய அசுரர்களை அழித்ததாகக் கந்தபுராணம் கூறுகிறது. இந்த மூன்று அசுரர்களும், ஆணவம் முதலிய மும்மலங்களையும் உருவகப்படுத்துபவர்களாக அமைந்துள்ளனர் என்பது அதன் உட்பொருள்.

முத்தி என்ற வடசொல்லிற்குத் தமிழில் வீடு என்று பொருள் கொள்ளப்படுகின்றது. அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அடைதல், வாழ்க்கைப் பயன்கள் அல்லது பேறுகள். இவற்றுள் இறுதியாக வருகின்ற வீடு, இறைவனை அடைந்து, இழக்காத பேரின்பம் பெறுதலைக் குறிப்பதாக உள்ளது. இத்தகைய வீட்டின்பத்தை அடையவேண்டு மானால், உலக இன்பங்கள் மற்றும் பந்த பாசங்கள், ஆசை அவாக்கள் என்பவற்றில் நாட்டம் செலுத்தாது அவற்றை விட்டுவிட வேண்டும். உலக இன்பங்கள், இடைக்கிடை வந்து மறையும் சிற்றின்பங்கள்.

"இன்பம், இன்பம், இன்பம்
இன்பத்திற் கோர் எல்லை காணில்
துன்பம், துன்பம், துன்பம்"

என்கிறார் மஹாகவி சுப்பிரமணிய பாரதியார்.

அவரும் ஒரு சித்தர். அவரின் வாக்கு உண்மையானது. உலகில் நிரந்தரமான இன் பங்களுமில்லை, நிரந்தரமான துன்பங்களும் இல்லை. நிலவும் இருட்டும்போல, உலக இன்ப துன்பங்களும் மாறி மாறி வரும். ஆனால் முத்தி இன்பம் எனப்படும் வீட்டின்பம் அப்படியில்லை. அது பேரின்பம். நிரந்தர இன்பம். முடிவில்லாத இன்பம். மரணமில் லாப் பெருவாழ்வு. இதனை எய்துவதுதான் மனிதப் பிறவியெடுத்ததன் இறுதி நோக்கம். எனவேதான் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப்பொருள்களுள் வீடு ஈற்றில் வைக்கப்பட்டுள்ளது.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது நாவலர் பெருமானின் நல்வாக்கு. எமக்குக் கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் நழுவ விட்டுவிடக்கூடாது என்பதை நாவலரின் வாசகம் நினைவுபடுத்து கிறது.

வீட்டின்பத்தை அடைவதற்கு எமக் குத் தடையாக உள்ளவை ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள். மும்மலங்கள் எம்மீது செலுத்தும் ஆதிக்கத் திலிருந்து நாம் விடுபட்டாலே, வீடு செல்ல முடியும். மும்மலங்களின் கட்டிலிருந்து விடுபடுதல், வீடு எனப்படும். இந்த விடுதலை யைப் பெற்றுத் தரக்கூடியவன் முருகப் பெருமான். ஆகவே வீடுபேற்றைப் பெறு வதற்கு நாம் முருகக்கடவுளை மனம், மொழி மெய்யினால் வழிபாடு செய்து அவன் துணையை நாடவேண்டும். இவ்வழிபாடு திரிகரண சுத்தியுடன் நிகழ்த்தப்பட வேண்டும் என்பது நிபந்தனை.

மும்மலங்களை அழிக்கவல்லவன் முருகனே. அவற்றை அதிட்டித்து நின்ற சூரன், சிங்கன், தாரகனை அழித்துச் சாதனை படைத்தவன் முருகன். எனவே அவனை நம்பி வழிபாடு செய்து வந்தால் எம்முள் காணப்படும் சூரன், சிங்கன், தாரகன் போன்ற அசுர சக்திகளைச் சங்காரஞ் செய்து அவற் றின் பிடியிலிருந்து எம்மை விடுவித்து, விடு தலை பெற்றுத்தருவான் என்பது உறுதி. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம்,

*அன்பும் அடக்கமும் கொண்டவன் துன்பத்தைக் கடப்பான்.*

மாற்சரியம் என்னும் ஆறு பகைவர்கள் எம் முடன் கூடவே இருந்துகொண்டு எமக்கு இடையூறுகள் செய்துகொண்டிருக்கின்றன. இவை அசுர சக்திகளின் தொழிற்பாடுகள். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்ற நான்கும் எமது பகைவர்கள் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. வீடுபேற்றை நாம் அடைவதற்குத் தடையாக இருப்பவை இவ் அசுர சக்திகள். இப் பகைவர்களையும் அசுர சக்திகளையும் அழிக்கும் வல்லமையுள்ள வன் கந்தன். கந்தன் என்ற சொல்லுக்குப் பகைவர்களின் ஆற்றலையும், வல்லமை களையும் நிலைகுலையச் செய்பவன் என்று பொருள் கூறப்படுகிறது.

எம்முடைய பகைவர்களையும் அவர் களின் அசுர சக்திகளையும் சங்காரஞ் செய்து, எம்மை விடுவித்து, விடுதலை பெற்றுத்தந்து வீடுபேற்றை நல்குவதற்காகவே முருகப் பெருமான் இந்த ஆறுபடை வீடுகளிலும் எழுந்தருளியிருக்கிறார். இந்த வகையில் திருப்பரங்குன்றம் முதலிய ஆறு தலங்களும் படைவீடுகள் எனப் பெயர் பெறுகின்றன.

சூரனால் சிறைப்பிடிக்கப்பெற்ற, தேவர் களை மீட்டு, அவர்களின் பதவிகளில் திரும் பவும் அமர்த்திய தேவசேனாதிபதியாம் முருகனுக்குத் தேவர்களின் தலைவன் தேவேந்திரன் தனது மகள் தெய்வயானை யைத் திருமணம் செய்து வைத்த திருத் தலம் திருப்பரங்குன்றம். தம் திருக்குமரனின் திருமணத்தின்போது பரம்பொருளாம் சிவ பெருமான் உமாதேவியாருடன் எழுந்தருளி முருகனுக்குத் திருவருள் புரிந்து, தேவர்க் கும் ஏனைய மானுடர்க்கும் காட்சி தந்தருளி யது திருப்பரங்குன்றத்திலாகும். இங்குள்ள ஒரு மலைக் குகையிலிருந்துதான், நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடினார். இங்குள்ள தீர்த்தம் சரவணப் பொய்கை.

திருச்செந்தூர் கடற்கரைத் தலமாக விளங்குகின்றது. அதனால் திருச்சீரலைவாய் எனப் பெயர் பெறுகின்றது. சூரனைச் சங்காரம் செய்வதற்கு முன்னும், அது முடிந்த பின்னும் முருகன் தங்கியிருந்த படைவீடு திருச்செந் தூர். ஆறுமுகசுவாமியாகக், கையிலே வேலேந்திய கோலத்தில், தேவசேனாதிபதி யாக இங்கு காட்சியளித்து, தீமையை அழித்து நன்மையைச் செய்பவராக அடியார் களுக்கு அருள்பாலித்த வண்ணம் இருக் கிறார். துன்பம் நீங்குமிடம் திருச்செந்தூர் என்று நூல்கள் கூறும்.

ஞான தண்டாயுதபாணியாக முருகன் காட்சியளிக்குந் தலம் பழநி. திருவாவிநன் குடி என்றும் அழைக்கப்படுகிறது. மாங்கனிப் போட்டியில் விநாயகர் வெற்றிபெற, முருகன் ஆண்டியாகச் சென்று அமர்ந்த இடம் பழநி. ஞானப்பழமாக பழநியில் திருவருள் பாலிக் கின்றான். "அதிசயம் அநேகம் உற்ற பழநி மலை" என்றும் "காசியின் மீறிய பழநி" என்றும் அருணகிரியார் புகழ்பாடுகிறார்.

திருவேரகம், சுவாமிமலை, என்று அழைக்கப்படுகிறது. தந்தையாகிய சிவபெரு மானுக்கு, முருகன் குருவாக அமர்ந்து ஓம் எனும் பிரணவப் பொருளை உபதேசித்த தலம் இதுவாகும். அதனால், சுவாமிநாதன், குருநாதன், தகப்பன்சாமி என்னும் பெயர் களை முருகன் தாங்கியுள்ளான்.

முருகன் குறிஞ்சி நிலக்கடவுள். அதனால் குன்றுகள் தோறும் ஆடல்புரிபவன். குன்றுதோறாடல் என்னும் படைவீடு குன்று கள் சேர்ந்த தொகுதிகளைக் குறிப்பதாகும். எல்லா மலைகளும், குன்றுகளும் அவன் விரும்பி உறையும் இடங்களே.

பழமுதிர்சோலை என மதுரைக்கு வடக்கே உள்ள அழகர் கோயில் என்னும் தலத்தையே, தற்போது கொள்கின்றனர்.

*அன்பு செய்யாதவன் கடவுளை அடைய முடியாது.*

முருகன் கிழவுருவுடன், வள்ளி நாயகியார் முன் நின்ற வள்ளி மலையையும் பழமுதிர் சோலை என்பர். மலர்ச்சோலைகள் பழச் சோலைகள் யாவுமே முருகனின் உறை விடங்கள்தான்.

ஆறுபடை வீடுகளில் முருகனைத் தரிசித்தல் பெரும் பேறாகும். அதற்கும் கந்தன் அருள் வேண்டும். முருகன் கருணை பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.

## உழைப்பே உயர்வு

நாரதர் ஒரு சமயம் கயிலாயம் சென்று சிவபெருமானை வணங்கினார். அப்போது பூலோக மக்களைப்பற்றிய செய்திகளை அவர் கூறத் தொடங்கினார். "சர்வேஸ்வரா! பூலோகத்து மக்கள் மிகவும் தாழ்ந்த நிலைக்குச் சென்றுவிட்டார்கள். அவர்கள் பெரியோர்களை மதிப்பதில்லை. நன்றியினை மறந்தவர்களாகவும், அறிவினை மயக்கக்கூடிய பொருட்களுக்கு அடிமைப்பட்டவர்களாகவும், அவர்கள் மாறிவிட்டார்கள். மனம் போன போக்கில் தங்கள் வாழ்க்கையினை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்" என்று பலவாறான குறைபாடுகளை அவர் கூறினார். அதைக்கேட்ட இறைவன் சினமடைந்து "பன்னிரண்டு ஆண்டுகளுக்கு நான் சங்கினை எடுத்து ஊதமாட்டேன்" என்று கூறிவிடுகிறார்.

சிவபெருமான் சங்கினை ஒலித்தால்த்தான் மழை பெய்யும் என்பது ஐதீகமாகும். சிவபெருமான் செய்த இந்த அறிவிப்பு உலகமெங்கும் பரவியது. பன்னிரண்டு வருடங்களுக்கு மழை பொழியாது என்பதால் உழவர்கள் ஏர்த்தொழில் செய்வதை விட்டுவிட்டு வீட்டிலேயே முடங்கிக் கிடந்தனர். ஆனால் ஒரே ஒரு விவசாயி மாத்திரம் தன்னுடைய நிலத்தில் ஏர் உழுதுகொண்டிருந்தான். அதனைக் கவனித்த நாரதர் ஆச்சரியம் அடைந்தார். எல்லா விவசாயிகளும் ஏரை ஓரங்கட்டிவிட்டு முடங்கிக் கிடக்கிறார்கள். இவன் மட்டும் எதற்காக உழுகிறான்? என்பது அவருக்கு விளங்கவில்லை.

அவனருகில் வந்த நாரதர் "சிவபெருமான் அறிவித்த அறிவிப்பு உனக்குத் தெரியாதா? நீ ஏன் வீணாக உழுதுகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அந்த விவசாயி "சிவபெருமான் அறிவித்த அறிவிப்பு எனக்குத் தெரியும். இருந்தாலும், பன்னிரண்டு வருடங்களுக்கு நான் ஏர்த்தொழிலை செய்யாமல் விட்டுவிட்டால் ஏர் உழுகின்ற இந்தத் தொழிலே எனக்கு மறந்துபோகும். அதனால்த்தான் நான் உழுதுகொண்டிருக்கிறேன்" என்று அவன் கூறினான்.

அவன் அப்படிக் கூறியதும் நாரதரால் ஒன்றுமே பேசமுடியவில்லை. நேராகச் சிவபெருமானிடம் சென்று அந்த விவசாயி கூறியதை அப்படியே எடுத்துக் கூறினார். அதனைக்கேட்ட சிவபெருமான் "அவன் கூறுவதும் சரிதான்! பன்னிரண்டு வருடங்களுக்கு சங்கு ஊதாமல் விட்டுவிட்டால் எனக்கேகூட அது மறந்து போகலாம். ஆகையால் இப்பொழுதே சங்கினை ஊதிவிடுகிறேன்" எனக் கூறி சங்கினை எடுத்து ஊதினார். மழை பொழிந்தது.

ஒரு விவசாயியின் உழைப்பால் அனைத்து விவசாயிகளும் பயனடைந்தனர். நாம் எந்தத் தொழிலைச் செய்பவர்களாக இருந்தாலும் அதனை விடாமல் தொடர்ந்து செய்பவர்களாக இருக்கவேண்டும். அவ்வாறு தொடராமல் விட்டுவிட்டால் அந்தத் தொழில் நம் கையினைவிட்டுப் போய்விடும் என்பதினை இந்தச் சம்பவம் உணர்த்துகிறது.

"உழைப்பே உயர்வுக்கு வழி"

-கோபுரம்-

ஆசை பேராசையானால் அமைதி விலகிவிடும்.

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 3. சுட்டறுத்தல்

எங்கும் நிறைந்த பொருளாகிய இறைவனை அறிதற்குச் சுட்டியறியும் அறிவு கருவியாகாது என உணர்ந்து அதனை ஒழித்தல்பற்றி இப்பதிகத்திற் கூறுகின்றார். சுட்டறுத்தல் எனக் கூறினும் சுட்டியறியும் அறிவை ஒழித்தல் என்பது பொருளாகக் கொள்க. சுட்டறிவு, இது குடம் இது படம் எனக் கண்ட பொருளைப் பொறி முதலிய கருவிகளுடன் கூடி நின்று அறியும் அறிவு. இறைவனைச் சுட்டறிவினால் அறிதல் இயலாதென்பதனை "அனைத்துலகு மாயநின்னை ஐம்புலன்கள் காண்கிலா" (சத76) என்பதனாலுமறிக.

**எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்**

25. வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னையாண்டாய்க்
குள்ளந்தாள் நின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாங்
கண்ணினையு மரமாந்தீ வினையி னேற்கே.

**ப-ரை:**

வெள்ளம் தாழ் விரி சடையாய்- கங்கையின் நீர் பெருக்குத் தங்கிய விரிந்த சடையினையுடையாய்; விடையாய்- இடபவாகனத்தையுடையவனே, விண்ணோர் பெருமானே- தேவர் தலைவனே, எனக் கேட்டு வேட்ட நெஞ்சாய்- என்று அடியவர் கூறக்கேட்டு அவ் வளவிலே நின்னை விரும்பிய நெஞ்சுடையராய், பள்ளம் தாழ் உறு புனலின்- உயர்ந்த இடத்தினின்றும் பள்ளத்தில் வீழும் மிக்க நீரை ஒத்து, கீழ் மேலாக பதைத்து உருகும் அவர் நிற்க- கீழ் மேலாகும்படி விரைந்து மனம் உருகுகின்ற மெய்யன்பர்கள் நின் அருளை வேண்டித் திரு முன்னிலையில் நிற்கவும், என்னை ஆண்டாய்க்கு- சிறியேனை ஆட்கொண்ட நின்பொருட்டு, உள்ளம் தாள் நின்று உச்சி அளவும். நெஞ்சாய் உருகாது- உள்ளங்கால் தொடங்கி உச்சந் தலை வரையும் மனம் தானேயாய் நின்று உருகுகின்றிலது. உடம்பு எல்லாம் கண்ணாய் வெள்ளம் பாயாது- உடல் முழுவதும் கண் தானாகவே நின்று ஆனந்தவெள்ளம் பாய்கின்றிலது; அதனால், அண்ணா- தலைவனே, தீவினையினேற்கு-

தீவினையையுடையேனாகிய எனக்கு, நெஞ்சம் கல் ஆம்- மனம் கல்லின் தன்மையுடையதாகும்; கண் இணையும் மரம் ஆம்- கண்கள் இரண்டும் மரக்கண்ணின் தன்மையுடையனவாகும்; யாது செய்வேன்.

கங்கை வெள்ளந் தங்கிய விரிந்த சடையுடையவனே. இடப வாகனத்தையுடையவனே, விண்ணோர் பெருமானே என்று அடியவர் கூறக்கேட்டு அவ்வளவிலேயே நின்னை விரும்பிய மனத்தையுடையவராய்ப் பள்ளத்திற்பாயும் மிக்க நீரைப்போலக் கீழ் மேலாகும்படி பதைத்து மனம் உருகுகின்ற மெய்யன்பர் நின் அருளை வேண்டி நின் திருமுன்னிலையில் நிற்கவும் என்னை ஆட்கொண்ட நின் பொருட்டு உள்ளங்கால் தொடங்கி உச்சந் தலைவரையும் மனம் தானாகவே நின்று உருகுகின்றிலது; உடம்பு முழுவதும் கண் தானாகவே நின்று ஆனந்த வெள்ளம் பாய்கின்றிலது; அதனால் அண்ணா, தீவினையுடையேனுக்கு மனம் கல்லின் தன்மையுடையதாகும்; கண்கள் இரண்டும் மரக் கண்ணின் தன்மையுடையனவாகும். யாது செய்வேன் என்பதாம்.

வெள்ளம்- கங்கை நீர்ப்பெருக்கு. தாழ்தல்- தங்குதல். தாழ்சடை என இயையும். "புன்சடைமேற் கங்கை வெள்ள ஆற்றானை" (நாவு 243:3) சடைமேற் கங்கை வெள்ளந் தரித்த தென்னே" (சுந் 4:1) எனத் தேவாரத்தும் "தெள்ளம் புனற் கங்கை தங்குஞ் சடையன்" எனத் திருக்கோவையாரிலும் 379) வருவனவும் காண்க. விரி சடை- விரிந்த சடை. "விரித்த சடையினன் விண்ணவர் கோன்" "விரிசடையாய் வேதியனே" (நாவு 89:8:313:6) எனவும் வருவன காண்க. சடையாய் விடையாய் என்பன இறைவன் உலகிற்கு ஆதாரமாகியும் ஆதேயமாகியும் நின்று பாதுகாப்பவன் என்பதைக் குறித்தன. கங்கை நீரைத் தரித்தமையால் ஆதாரமாதலும், இடபத்தை ஊர்தியாகக் கொண்டமையால் ஆதேயமாதலும் அறிக. விண்ணோர் பெருமான்- தேவர்த்தலைவன் 'விண்ணோர் பெருமானே விகிர்தா' (ஞான 89:3) எனத் தேவாரத்து வருதலும் காண்க.

விரிசடையாய் விண்ணோர் பெருமானே என்று பிறர் கூறக்கேட்ட அளவிலேயே வேட்கைமிக்க நெஞ்சம் உடையரானமையின் "எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்" என்றார். வேட்டல்- விரும்புதல். "தொல்வினையைப் பயன் றுய்ப்பத் துறக்கம்வேட்டெழுந்தாற்போல்" (கலி 118:3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. நெஞ்சு என்பது ஈண்டு நெஞ்சுடையாரை உணர்த்தியது. கேட்டு வேட்ட நெஞ்சாய்ப் பதைத்துருகும் அவர் என இயையும். சிவபெருமான் திருப்பெயரைக் கேட்டளவில் அடியார்கள் மனமுருகுவார்கள் என்பது "நிலா முகிழ்க்குந் திருமுடியார் பேரொலிக்க உருகுமவர்க்கு" (திருக்குறிப்பு 113) எனப் பெரியபுராணத்து வருதலானுமறிக.

பள்ளந்தாழ் உறுபுனல்- உயர்ந்த இடத்தினின்றும் பள்ளத்தே வீழும் மிக்க நீர், "பள்ளம் புகும் புனல்போன்று" என்றார் திருக்கோவையாரிலும் (379) உறு, மிகுதிப் பொருள் தருவதோர் உரிச்சொல். புனலின் விரைவுபோல விரைந்து உருகும் நெஞ்சம் என்க. பதைத்தல் ஈண்டு விரைதல் என்னும் பொருட்டு கீழ் மேலாக உருகும் என்றது உள்ளத்தின் எப்பகுதி முதற்கண் உருகியது என்பது தோன்றாமல் முழுவதும் உருகுதலை உணர்த்தியது உருகுமவர் என்பது வினையாலணையும் பெயராய் மெய்யன்பர் என்னும் பொருள் தந்தது, நிற்க என்றதன்

ஆற்றலால் அம் மெய்யன்பர்கள் நின்னருளை வேண்டித் திருமுன்னிலையில் என்பன வருவிக்கப்பட்டன.

என்னை ஆண்டாய்க்கு- சிறியேனை ஆட்கொண்ட நின் பொருட்டு "ஒன்றும் போதா நாயேனை உய்யக்கொண்ட நின் கருணை" "நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே யாட்கொண்டாய்" (குழைத் 3:8) என அடிகள் அருளியவாறுங் காண்க.

உள்ளந்தாள்- தாளின் உட்புறம் உச்சி- உச்சந்தலை. நெஞ்சு ஆய் உருகாது எனப் பிரித்து உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை வரையும் நெஞ்சுதானாய் நின்று உருகுகின்றிலது எனவுரைக்க. கண்ணாய் என்பதில் ஆய் என்பதற்குக் கண் உடம்பெல்லாந் தானாய் நின்று எனப் பொருள் கொள்க. ஒன்றும் போதா நாயேனை ஆண்டருளின நின் கருணையை நினைந்து உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையும் நெஞ்சு தானேயாய் நின்று உருக வேண்டும். உடம்பெல்லாம் கண் தானாகவே நின்று ஆனந்த நீரைப் பெருக்க வேண்டும். அங்ஙனம் செய்யாமையால் "நெஞ்சங் கல்லாம் கண்ணிணையும் மரமாம்" என்றார். வெள்ளம்- ஆனந்தக் கண்ணீர். நெஞ்சங் கல்லாதல்- மனம் கல்லின் தன்மையுடைத்தாதல் கண்ணிணை மரமாதலால்- கண்ணிணை மரக் கண்ணின் தன்மையுடைத்தாதல், அவ்வாறானமை உருகாமையாலும் ஆனந்தக் கண்ணீர் பாயாமையாலும் கண் பால்பகாவ.்.றிணைப் பெயராதலின் பாயாது என ஒருமை முடிபு பெற்றது. யாது செய்வேன் என்பது இசையெச்சம்.

இதன்கண், நெஞ்சு ஒருவாறு இறைவனை அறியலாமென எண்ணி அது தன்னளவில் நின்று உணரமாட்டாமையால் அதனை ஒழித்து உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையும் பரந்து நின்றாயினும் அறியுமோ எனின் அங்ஙனம் பரந்து நிற்றல் அதன் இயற்கைக்குப் பொருந்தாது எனவும், கண் இருந்துழி இருந்து காணமாட்டாதென அதனை ஒழித்து உடம்பின் உறுப்பு முழுவதிலுங் கலந்து நின்று ஆனந்த வெள்ளம் பொழிந்து காணுமோமெனில் அதுவும் அதன் இயற்கைக் குப் பொருந்தாது எனவும் சுட்டியுணரப் படாமை புலனாதலிற் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. (தொடரும்...

**செல்வச் சந்நிதியில் நின்றுறைபவா முருகா**

கலியுகத்தின் தெய்வமெனக் கண்கண்ட தெய்வமே
கந்தனென்று நின்று என்றும் காக்கின்ற வேலனே
வலியோடு வருவோர்க்கு நோய் நீக்கிக் காக்கும் வேலவா
வள்ளி மணவாளனென வேல் கையேந்தும் பெருமானே
அபயமென உந்தன் பதிதேடி வருவோர்க்கு
அருளாட்சி பொழிகின்ற வேலவா
உபாயம் இது என்றே உனதருள் தினம் பொழிகின்றவா
செல்வச் சந்நிதியில் நின்று உறைபவா முருகா.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*தர்மம் செய்வது ஆன்மீகச் செயல்களில் தலை சிறந்தது.*

# நீ கருணை வெள்ளமன்றோ...!

–திரு நா. நவராஜ் அவர்கள்–

மனிதம் தனைச்சாய்த்(து) உளத்தில் மிருகம்
தனித்துச்செய் யும்ஆட்சி தன்னால் - புனிதமது
கெட்டுப் புவியில் புறம்போக்காய் நின்றனன்
விட்டுப்போச் சுன்அருள் ஊற்று.

ஊற்று வறளத் தரிசாய்ப்... புழுதியாய்க்...
காற்றில் கலந்து பறந்து... நல்ல நாற்றம்
உனைவைக்கும் சிந்தையற்ற நெஞ்சொடு நின்றேன்
பனையளவு நின்றது வீம்பு.

வீம்பினால் நான்வளர்ந்து சிந்தை திருகிமிக்கப்
பாம்பின் குணமுடைப் பாதகனாய் - தேம்தமிழ்
சாத்திரங்கள் தோத்திரங்கள் சற்றுமுண்மை யில்லையென்றேன்
ஆத்திரத்தில் வந்திட்ட பேச்சு.

பேசப் படாநற் பொருளையான் பேசினேன்
பாசப் படாமனம் கொண்(டு) ஆடினேன் - தூசனையும்
சிந்தனையில் வந்த பகுத்தறிவும் சொல்லியே
கந்தனையான் கற்பனையென் றேன்.

பல்லறிவு உள்ளவர்கள் இப்படித்தான் பேசுகிறார்...!
சொல்வன்மை உள்ளவர்கள் இப்படித்தான் சொல்லுகிறார்...!
நல்லறி வென்பதிது வென்றெண்ணி நானிருந்தேன்
நல்லூர் வருவதற்கு முன்.

வந்தொரு தேருக்குவாசல் முன்னின் றிருந்தநான்
எந்தவொரு வந்தனையும் பண்ணவில்லை - சிந்தையிலோ
முன்னிற்கும் மாந்தருக்கு மூளையில்லை மிக்கவே
பின்னிற்கும் மாந்தரென்ற தீர்ப்பு.

வந்தனை நீ வாயிலூடே முன்நின்றார் ஓசையொலி
சிந்தனைக்கு நேரமில்லை என்கண் களிலே
இருகண் ணீர்த்துளி நெஞ்சினிலோ இன்பவொளி
யாருருவும் தோன்றவில்லை முன்.

நெஞ்சினில் ஏதுமில்லை முன்பின்னாய் உன்னிலோ
கொஞ்சமேனும் பற்றுமில்லை எப்படி...? அஞ்சலில்லா
என்னுடம்பில் இத்தனை ஈடாட்டாம். சிந்தையற்றேன்...
தொன்மைநிலை அற்ற(து) எனக்கு.

நெஞ்சினில் நேசமின்றி மேனி தனைமினுக்கி
அஞ்சலிக்கும் பல்லோரில் நான்தெவலை என்றோநீ
என்னையும் ஏற்றளித்தாய் ஏறுமயில் வாகனனே!
பின்னையென்ன சொல்ல இதற்கு.

நிந்தனையை வந்தனையாய் நீயேற்று விட்டாயா?
சிந்தனையில் என்னுள் எதிர்மறையாய் நின்றாயா?
வந்தொரு பார்வையிலே எனையாண்ட வள்ளலே
எந்தவிடை சொல்லியாற நான்.

கொண்டுவந்த நற்பிறப்பை கோதாரி யாக்கியிங்கு
மிண்டனாய் நிற்கத் திருவுளம் கொண்டேனை
ஐயநீஎன் னென்றுதான் ஏற்றனை சொல்லாய்... நான்
மையலில் வீழ்ந்த மயிர்.

மயிரனைய கீழ்மைத் தனமுடைய நாயின்(று)
உயிரனைய உன்னைத் துறந்திருந்த பேயனையும்
நேசித்தாய் நீயெனில்... நீகருணை வெள்ளமன்றோ...!
தூசித்த நானொரு தூசு.

## எம் இனத்தை ஆட்சி செய்திடு!

ஆறுமுகம் கொண்ட ஆறுமுகனே!
ஆறுதல் நீ எமக்கு தந்திட வேண்டும்
ஆறுபடை வீடுடைய ஐங்கரன் தம்பி
அனைவருக்கும் இன்ப வாழ்வு அளித்திட வேண்டும்
அன்பு உள்ளம் அனைவருக்கும் அமைந்திட செய்வாய்
ஆசை கொண்டு எம் இனத்தை ஆட்சி செய்திடு!

*-வாணி-*

கடவுள் கடாட்சம் கஷ்டங்களைப் போக்கும்.

# அகத்தை மாற்றியபின் புறத்தைப் பார்

– செல்வி செ. ஜடா அவர்கள் –

இந்து சமயம் சனாதன சமயம். நாங்கள் "சிவம்" ஆவதற்கு இன்னும் எத்தனையோ படிகள் தாண்ட வேண்டும். எமக்கு முந்தி, முந்தி என்று பார்த்துக்கொண்டு போகப்போக அங்கே ஒன்றேயொன்று மட்டும்தான் இருந்தது. அதுவே பின்னர் பலவானது. திரும்பவும் அங்கு ஒன்றாக மாறுவதே இனி எமது முயற்சியாகட்டும் மாறும் முயற்சி சுலபமானதல்ல.

அறிவு வளர வளர அதனோடு கூட அகம்பாவமும் வளரும். அகம்பாவம் என்கின்ற இந்தநிலை உடைக்கப்பட்ட பின்புதான் உள்ளேயுள்ளது "ஆத்மா" என உணரப்படும். எல்லோரும் ஆத்மாக்கள் என்பது இப்போது தெளிவாயிற்று. இதே ஆத்மா விரிந்து, பரந்து இருக்கும் நிலையே "பரமாத்மா" என்பதும் புரிகிறது. இது எந்தளவுக்கு விரிந்துள்ளது என்பதை எமது ஊனக் கண்ணால் பார்க்க முடியவில்லையே தவிர அதனை உணரமுடிகின்றது.

படைப்பின் நோக்கம் விதம் விதமான பாதைகளில் வெவ்வேறு கோணங்களில் அதைப் பார்க்கவேண்டுமென்பது. இது ஒரு தனித்துவமான பார்வை. ஆனால் வெவ்வேறானதல்ல. ஒன்றிலிருந்தே பிரிந்து பிரிந்து திரும்பவும் ஒன்றாகுவது. இந்தத் தெளிந்த அறிவு ஞானமாகி அன்பே உருவாய் அன்பை விதைத்து ஒன்றாகிறது. வன்முறை இதற்கு எதிரானது. சாத்தான், பாவி, பாவம் என்பதெல்லாம் நாளாந்த வாழ்க்கையில் பாவப்பட்ட சொற்கள். இவைதான் இப்போது "கர்மா" எனவும் கர்மாவே எம்மை மீண்டும் மீண்டும் பிறக்கச் செய்வதென்றும் புரியுமளவுக்கு ஞானம் ஏற்பட்டுள்ளது. இப்போது ஞானத்துக்குக் கட்டுப்பட்டு சுயத்தின் பலத்தில் வாழும் முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. சனாதன தர்மமும் எல்லோரும் ஏற்கத்தக்க வகையில் வளர்ச்சியையும் மாற்றத்தையும் கண்டுள்ளது. ஆத்ம ஒருமைப்பாட்டைத் தவிர இங்கே பிரிவுக்கு இடமில்லை. புரிந்துகொள்ளும் தன்மை வலுத்திருப்பதால் எதுவும் நிராகரிக்கப்படுவதுமில்லை. சுயபலம் என்பது பிரபஞ்ச ரீதியானது. கடவுள் என்பதற்கு வேறு அடையாளம் தேவையுமில்லை. பரிணாம உந்தல் ஆன்மீக ஞானத்தை அறியும்படி செய்ததுமல்லாமல் அன்பினால் அதை அனுபவிக்கவும் செய்துள்ளது.

ஆன்மீகமாக வாழ்வது எப்படி? என்ற கேள்வி எழக்கூடும். நின்றும் இருந்தும் கிடந்தும், நடந்தும் என்றுமே சமயத்தைப் பற்றிய சிந்தனையோடு இனி வாழ்தலே முறையானது. சிந்தனைக்கேற்ற சூழலை அமைக்க முதலில் "வீடு" கோயிலாதல் வேண்டும். இல்லங்களில் தெய்வீக அலைகள், அதிர்வுகள் நிறைந்திருக்கக்கூடியதாக அங்கே அமைதி, சாந்தம், சாந்நித்தியம் நிலவ வேண்டும். வீடுகளுக்கு இப்படியான ஒழுங்குகளைக் கொண்டு வருவதில் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்கள் பெரிதும் முயற்சித்தவர். சிறுவர்களுக்கு ஆன்மீகப் பள்ளிகளும் அமைத்து ஒழுக்கக்கல்வி, பஜனை ஒழுங்குகள், பூஜை ஒழுங்குகள், தியான ஒழுங்குகள் எல்லாமே நடைபெறுவதற்கு வழி செய்துள்ளார்.

இல்லங்களில் மனச் சமநிலையைக் கட்டிக் காக்குமளவுக்கு நாளாந்த வாழ்வில் அவர்களில் நடை, உடை, பாவனை, பேச்சு, செயல் எல்லாமே அமைவது வரவேற்கத்தக்கது. வீட்டில் வயது வந்த அங்கத்தவர்கள்

*உண்மை சொல்லிக் கெட்டோர் எவருமில்லை.*

மற்றவர்களுக்கு அறிவுரை கூறுவதோடு நின்றுவிடாமல் தாம் சொன்னவற்றை தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் உதாரண புருஷர்களாக வாழ்ந்து காட்டவேண்டும்.

காலை, மாலை பூஜைகள், பஜனைகள், வணக்கங்கள் வீட்டில் புனிதம் பேணப்படல் ஆகியவற்றை மற்றவர்களை எதிர்பார்க்காமலும், அவர்களை சீறிச் சினக்காமலும் தாமே செய்துவர இளையோரும் நாளடைவில் அவற்றைப் பின்பற்றுவர். கட்டாயப்படுத்திச் செய்தால் முரண்பாட்டில் முடியும்.

ஆத்ம சக்தி ஞானத்தாலும் தியானத்தாலும் விரிவுபெற்று அநாகத சக்கரத்தை அடையும் நிலையில் அன்பும் பக்தியும் மேலிடும். மனம் விழிப்புநிலை, கனவு நிலை, ஆழ் உறக்கநிலை, தூயநிலை என்ற நான்கு நிலைகளிலும் இயங்குகின்றது. இந்த மனம் பற்றி எல்லாச் சமயங்களுமே சொல்கின்றது. ஆறுமுகனான முருகன் ஒரு முகமான தத்துவம் மன ஒருமைப்பாட்டைக் குறிக்கும். பாவம் அகம் பாவம் என்ற தன்மைகளில் இருந்து விடுபடுவது அகமாற்றம்.

எதனை விதைக்கிறோமோ அதனையே அறுவடை செய்கின்றோம். செயலுக்குத் தக்க விளைவை அனுபவித்துதான் ஆகவேண்டும். கர்ம வினைகள் இல்லை என்றால் பிறவியும் இல்லை.

எல்லாவற்றுக்கும் ஆதியும் முதலும் ஒன்றே. ஒன்றிலிருந்தே உற்பத்தி தொடங்கியது. இது எப்பவோ நிரூபணமாகிவிட்டது. மூச்சுப்பயிற்சி, ஞானம், தியானம் எல்லாமே பிராண சக்தியைக் கூட்டும். ஒழுங்காக பஜனை பிரார்த்தனையில் ஈடுபடுதலும், உண்ணும்போது பிரம்மார்ப்பணம் செய்தலும் யோக சாதகர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை. ஆன்மீக நிலையில் உச்சநிலையை அடைந்தாலும் அன்பினால் மற்றவர்களுக்குச் சேவை செய்தலும் அவசியமானதே.

துளசிமாலை, உருத்திராட்ச மாலை, படிக மணிமாலை ஆகியவற்றை முறைப்படி அணிதல் பிராண சக்தியைக் கூட்டுவதோடு சக்கரங்களையும் சுத்தப்படுத்தும். எல்லா நிலையிலுள்ளவர்களுக்கும் இந்து சமயம் இடமளிக்கின்றது.

### ஆன்மிகச் சிந்தனை

மனதைக் கட்டுப்படுத்துங்கள். அது உங்களை ஆட்டிவைக்க இடம் கொடுக்காதீர்கள். மனம் அதன் எல்லைகளைக் கடந்து ஆன்மாவின் அருகில் அழைத்துச் செல்லப்பட வேண்டும். இதற்குத் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். பலமுறை முயற்சி செய்தபிறகுதான் கடைசியில் மனம் உங்களுக்குக் கட்டுப்படும். அப்போதுதான் அது ஆன்மாவில் வந்து பொருந்துவதும் சாத்தியமாகும். எல்லாம் வல்ல இறைவனிடம் சரண் அடையுங்கள். உங்கள் உடைமைகள் எல்லாவற்றையுமே உடல், மனம், ஆத்மா அனைத்தையுமே இறைவனிடம் ஒப்படைத்து விடுங்கள். காமம், கோபம், பொறாமை ஆகியவை ஒரே தீய பண்பின் வெவ்வேறு வடிவங்கள்தான் அவை அனைத்தும் நல்லறிவை அழிப்பவை. புலன்களை இறைவனிடம் அர்ப்பணியுங்கள். இறைவன் மட்டுமே நிலையாக இருக்கிறான் என்பதை உணர்வீர்கள். மற்றவை அனைத்தும் நிலையற்றவை என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம்

அருளிய

# திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)



முனைவர் ஆ. ஆனந்தராசன்

## 49. ஞான நெறியை யார் அறிவார்?

ஆரறிவார் எல்லாம் அகன்ற நெறி அருளும்
பேரறிவான் வாராத பின்.

**பொருள்:**

ஆசை முதலிய குற்றங்களையெல்லாம் அகன்றொழியச் செய்வது ஞானம். அப்படிப்பட்ட ஞானத்தைத் தரவல்லவன் முற்றறிவினை உடைய இறைவன் ஒருவனே. அவன் குருவாய் வந்து உணர்த்தாவிடின் மெய்யுணர்வாகிய ஞானத்தை யார்தாம் உணர முடியும்?

**சொற்பொருள்:**

அருளும்- ஞானத்தை அருளவல்ல, பேரறிவான்- அறிவே வடிவான இறைவனே, வாராதபின்- குருவாக வாராவிடில், எல்லாம் அகன்ற நெறி- ஆசை முதலிய குற்றமெல்லாம் அகலும்படியாகச் செய்வதாகிய ஞானத்தை, ஆர் அறிவார்- யார் தாம் உணர இயலும்? (ஒருவரும் உணரமாட்டார்)

**விளக்கம்:**

நெறி:

நெறி என்பதற்கு வழி என்பது பொருள். வீடு அடைவதற்கு நேர் வழியாய் இருப்பது ஞானமே. அது பற்றியே ஞானத்தை 'நெறி' என்று குறிப்பிட்டார் ஆசிரியர்.

சிலர் வேள்வியே வீட்டிற்கு வழி என்பர். சிலர் தானம், தவம், விரதம் முதலியன வீட்டைப் பயக்கும் என்பர். தீக்கை பெற்றாலே போதும், அதுவே வீடெய்துவிக்கும் என்பார் உளர். திருத்தலப் பயணம் செய்தல், புண்ணிய நதிகளில் நீராடுதல் முதலியவை முத்தியைப் பயக்கும் என்று கூறுவோர் உண்டு. இப்படிப் பல வழிகள் இருக்க, ஞானமே வீட்டிற்கு வழி என்று கூறுவது ஏன்? என்று கேட்கலாம். இதற்கு விடை கூறுவோம்.

மேற்கூறினவெல்லாம் நல்ல கதிக்கு வழிகளே என்பதில் ஐயமில்லை. ஆனால், அவை முத்திக்கு நேர் வழிகள் அல்ல என்பதை உணர்தல் வேண்டும். அவற்றை

*தாயன்பு ஆண்டவனைத் தாண்டி அபார சக்தி படைத்தது.*

மேற்கொண்டால், இப்பிறப்பிலோ, வேறொரு பிறப்பிலோ ஞானத்தைப் பெறுவதற்குரிய பக்குவம் வாய்க்கும். பின் நல்லாசிரியரை அடைந்து ஞானத்தைப் பெற்று வீடு எய்துதல் கூடும். எனவே ஞானத்திற்குரிய பக்குவத்தைப் பெறுவதற்குத் துணை செய்வன என்ற வகையில் அவையெல்லாம் ஞானத்தை அடைதற்கு வழிகளேயன்றி, முத்திக்கு நேரே வழியாவன அல்ல. வேள்வி, தானம், தீக்கை முதலிய எவையாயினும் அவையெல்லாம் ஞானத்தைத் தந்து, பின் ஞானம் வழியாக முத்தியைத் தரும் என்பதே உண்மை. ஆகவே, ஞானம் இல்லாமல் முத்தியை அடைதல் இயலாது எனவும், ஞானமே முத்திக்கு நேர்வழி எனவும் அறியலாம்.

இன்னொன்றையும் கருதல் வேண்டும். ஞானம் இன்றியே வேள்வி, தானம் முதலியவை வீட்டைத் தருதல் இயலும் என்று கூறினால் அதற்கு என்ன பொருள்? ஞானம் இல்லாமலும் முத்தியடையலாம் என்பதுதானே அதன் பொருள். ஞானம் இல்லாத நிலை என்பது அஞ்ஞானம்தானே. ஞானம் இன்றியே வீட்டை அடையலாம் என்றால் அஞ்ஞானத்தில் இருந்துகொண்டே முத்திநிலையைப் பெறலாம் என்று ஆகிவிடுகிறது. இஃது எவ்வாறு பொருந்தும்?

அஞ்ஞானத்தால் உண்டாவது கட்டுநிலை என்று அறிந்திருக்கிறோம். எனவே அஞ் ஞானத்தில் இருந்துகொண்டே வீட்டையடையலாம் என்றால் கட்டுநிலையே வீட்டுநிலை என்றாகிவிடும்! இதைவிட நகைப்பிற்கு இடமானது வேறு என்ன இருக்கமுடியும்? ஆதலால், ஞானம் இன்றிப் பிறவகையினாலும் முத்தியைப் பெறலாம் என்பது சற்றும் பொருந்தாத கூற்றேயாகும்.

ஞானமாகிய ஒளி வர, அஞ்ஞானமாகிய இருள்தானே விலகி, முத்தி எளிதில் கைகூடும். ஆகவே ஞானம் ஒன்றே முத்திக்கு நேர்வழி எனவும், ஞானம் தவிர வேறு எதுவும் முத்தியை நேரே தரவல்லது ஆகாது எனவும் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

சிவஞானபோதம் ஞானத்தைத் “நன்னெறி” என்று குறிப்பிடும். இங்கு நம் ஆசிரியர் ஞானத்தை நெறி என்ற சொல்லால் குறித்துள்ளார்.

**எல்லாம் அகன்ற நெறி:**

பக்குவப்படுவதற்கு முன்பு ஒருவன் எப்படியெல்லாமோ வாழ்கிறான். வீடு, வாசல், செல்வம் ஆகிய இவையே நிலையானவை என்று எண்ணுகிறான். உண்மையிலே துன்பம் கொடுப்பன எல்லாம் அவனுக்கு இன்பமாகத் தோன்றுகின்றன. யார் யாரையோ தனக்கு உறவு என்றும், அவர்கள் தாம் தன்னைத் தாங்குவார்கள் என்றும் நம்புகிறான். ஊர் வேண்டும், பேர் வேண்டும், உற்றார் வேண்டும் என்று அவற்றையே மெய்யென்று நினைத்து வேண்டுகிறான்.

ஆனால், பக்குவம் வந்தவுடன் குருநாதரை அடைந்து அவரது உபதேசத்தைப் பெற்றவுடன் இந்த உலக மயக்கம் போய்விடுகிறது. முன்பு எவற்றை மெய்யென்று பாராட்டினானோ அவற்றை இப்பொழுது பொய் என்று தெளிந்து வெறுத்து ஒதுக்குகிறான். இறைவன் ஒருவனே மெய்ப்பொருள்; அவனே உயிர்த்துணை என்ற ஞானம் கைவந்தவுடன் உலக ஆசை முதலிய குற்றங்களெல்லாம் ஓடி மறைகின்றன.

*உண்மை இருக்குமிடத்தில் தெய்வீகத்தன்மை குடியிருக்கும்.*

இக்கருத்தைத் திருமூலர் தமக்கே உரிய முறையில் சுவைபட ஒரு விடுகதை போலச் சொல்லுகிறார். "எனக்கென்று ஒரு தோட்டம் இருந்தது. சில தீயவர்கள் அதிற் புகுந்து அதனைத் தங்களுடையதாக ஆக்கிக் கொண்டனர். நானும் அவர்களோடு ஒட்டியே வாழும்படி நேர்ந்தது. ஒரு சமயம் சிறிது இடத்தைத் தோண்டிக் குழி செய்து கத்தரி விதையை ஊன்றினேன். என்ன வியப்பு! அந்த விதையினின்று பாகற்கொடி முளைத்துப் படர்ந்தது. அப்பாகற் கொடியோ பூசணிப்பூவைப் பூத்தது. அந்தப் பூவோ வாழைக் காயைக் காய்த்தது. அந்தக் காய் பழுத்துக் கனிந்தது. அங்கே குடியிருந்த அந்த அற்பர்கள் இதையெல்லாம் பார்த்து அஞ்சி விட்டனர். எனக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு ஓடி விட்டனர்".

இவ்வாறு திருமூலர் தாம் கூறவந்த பொருளை வெளிப்படையாகக் கூறாமல் மறைத்துக் கூறியுள்ளார். அவர் கூற வந்த பொருளையே நோக்குவோம்.

ஆன்ம அறிவு என்பதைத்தான் அவர் தோட்டம் என்று குறிப்பிடுகிறார். காமம், வெகுளி, மயக்கம் முதலிய குற்றங்களே அதில் குடியிருந்த அற்பர்கள். குழியைத் தோண்டியது என்பது அவர் ஒரு குருநாதரை அடைந்து வழிபட்டமையைக் குறிக்கும். அதில் கத்தரியை விதைத்தது அவர் குருவின் உபதேசத்தைக் கேட்டதைக் குறிக்கும். கத்தரி விதையினின்றும் பாகற்கொடி முளைத்தது என்பது, குருவின் உபதேசத்தைப் பெற்றவுடன் அவருக்கு உலகியலில் வெறுப்புத்தோன்றிய நிலையைச் சுட்டுவதாகும். பாகற்கொடி பூசணிப் பூவைப் பூத்தது என்பது, உலகின்மேல் ஏற்பட்ட வெறுப்புணர்ச்சியிலிருந்து வீடுபேற்றில் விருப்பம் உண்டாயிற்று என்பதை உணர்த்துகிறது. வாழைக்கனி பேரின்ப வாழ்வைக் குறிக்கிறது. அந்தத் தீயவர்கள் அஞ்சி ஓடினார்கள் என்பது ஞானம் வந்தபின் காமம், வெகுளி முதலிய குற்றங்கள் ஆன்ம அறிவை விட்டு அகன்றமையைக் குறிப்பதாகும்.

இவ்வாறு பாசப்பற்று முதலிய குற்றமெல்லாம் அகலும்படியாகச் செய்வது ஞானம். ஆதலின் ஞானத்தை "எல்லாம் அகன்ற நெறி" என்றும், குருவடிவில் நின்று அதனை அருளும் இறைவனைப் "பேரறிவான்" என்றும் குறிப்பிட்டார் நம் ஆசிரியர்.

### 50. அருட்குரு இன்றி ஞானம் வரும்!

ஞானம் இவன் ஒழிய நண்ணியிடும்; நற்கல் அனல்
பானு ஒழியப் படின்.

**பொருள்:**

சூரிய காந்தக் கல்லினிடத்தில் சூரியனது ஒளி படாமலே நெருப்புத் தோன்றுதல் கூடுமாயின், ஆன்மாவினிடத்தில் அருட்குரு இல்லாமலே ஞானம் தோன்றுதல் கூடும்.

**சொற்பொருள்:**

நற்கல்- நல்ல சூரிய காந்தக் கல்லினிடத்தில் பானுஒழிய- சூரியவொளி படாமலும் அனல்- நெருப்பு, படின்- தோன்றுதல் கூடுமாயின் (நன்மாணாக்கரிடத்தில்) இவன் ஒழிய- ஞானகுரு இல்லாமலும், ஞானம்- ஞானமானது, நண்ணியிடும்- வந்து பொருந்துதல் கூடும்.

**விளக்கம்:**

ஆசிரியர் கையாளும் உத்தி:

கவிஞர்கள் உலகில் நடக்க முடியாத செயலை நடக்கக் கூடியது போலக் காட்டி வியப்புணர்ச்சியைத் தோற்றுவித்து, முடிவில் அது நடக்கமுடியாத செயலே என்பதைப் பெற வைப்பர்.

இவ்வுத்தியை வடமொழி நூல்களிலும் தமிழ் நூல்களிலும் காணலாம். சுவேதா சுவதர உபநிடதத்தில் இவ்வாறு அமைந்த ஒரு வாக்கியம் வருகிறது. "எப்பொழுது ஆகாயத்தைத் தோல்போல் சுருட்டுதல் கூடுமோ, அப்பொழுது சிவனை உணராமல் துன்பத்திலிருந்து நீங்குதல் கூடும்" என்பது அவ்வாக்கியம்.

இவ்வுபநிடத வாக்கியத்தை அப்படியே எடுத்துத் தமது காஞ்சிப் புராணத்தில் அமைத்துக் கொண்டார் சிவஞானமுனிவர். "மானுடன் விசும்பைத் தோல்போல் சுருட்டுதல் வல்லோனாயின் ஈனமில் சிவனைக் காணாது இடும்பை தீர் வீடும் எய்தும்" என்பது காஞ்சிப் புராணப்பகுதி.

சிவபெருமானை உணராமலே ஒருவர் பிறவித் துன்பத்திலிருந்து விடுபடலாம் என்று இங்கே கூறப்பட்டுள்ளது. அ∴து எப்படி முடியும்? இ∴து எக்காலத்திலும் நடக்கமுடியாத செயலல்லவா? ஆயின், நடக்கும் என்று கூறப்பட்டுள்ளதே. இது என்ன வியப்பு! அந்த வாக்கியத்தின் ஒரு பகுதியை மட்டும் பார்த்துவிட்டு இவ்வாறு வியப்படைகிறோம். முழுமையாக நோக்கினால்தான் உண்மை விளங்கும். ஆகாயத்தை எங்காவது சுருட்டி வைக்க முடியுமா? அ∴து எவராலும் செய்யக்கூடிய செயலில்லை. எனவே ஆகாயத்தைச் சுருட்டி வைப்பது முடியுமானால் சிவனை உணராமலே துன்பத்திலிருந்து விடுபடுதலும் முடியும் என்பதன் கருத்து சிவபெருமானை உணராமல் யாரும் பிறவித் துன்பத்திலிருந்து நீங்க முடியாது என்பதேயாகும்.

இந்த முறையிலேதான் நமது ஆசிரியர் உமாபதி சிவமும் கூறுகிறார். இதுவரையில் அருளாசிரியன் இல்லாமல் ஞானம் பெறுதல் இயலாது என்பதை வலியுறுத்தி வந்த ஆசிரியர் இங்கு அருளாசான் இன்றியும் ஞானம் கிடைத்துவிடும் என்று கூறிப் படிப்பவர்க்கு வியப்பையும் திகைப்பையும் ஏற்படுத்தி விடுகிறார். என்ன இப்படி முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறாரே என்று எண்ணத் தோன்றும். ஆனால், செய்யுளின் பிற்பகுதியில் கூறியுள்ளதையும் சேர்த்து வைத்துப் பார்க்கும்போதுதான் அவர் கூறியதில் எந்த மாறுபாடும் இல்லை என்பது தெளிவாகும்.

சூரிய காந்தக் கல்லிடத்தில் சூரியன் இல்லாமலே நெருப்புத் தோன்ற முடியுமோ? அ∴து எக்காலத்திலும் நடக்கமுடியாத செயல். அப்படி நடக்குமானால் ஆன்மாவிடத்தில் அருட்குரு இல்லாமலே ஞானம் தோன்றும் என்கிறார் ஆசிரியர். அதன் கருத்து, அருட்குருவையின்றி ஞானம் நிகழாது என்பதேயாகும்.

அருட் குருவினால் பாசங்கள் அகலுதல்:

உயிர் சூரியகாந்தக் கல் போன்றது. உயிரை மறைத்துள்ள பாசத்தை சூரிய காந்தக் கல்லை மூடியுள்ள பஞ்சுபோலக் கொள்ளலாம்.

*ஆண்டவன் அருள் இருந்தால்த்தான் ஆனந்தம் நிறையும்.*

சூரிய காந்தக் கல் தனியே இருக்கும்பொழுது தன்னை மூடியுள்ள பஞ்சினைச் சுடமாட்டாது. அதுபோல ஆன்மா தனியே நின்று தன்னைப் பிணித்துள்ள பாசத்தை நீக்கிக்கொள்ள மாட்டாது.

அச்சூரிய காந்தக் கல் சூரியன் வந்தபொழுது அதன் ஒளிக் கதிரைப்பெற்றுத் தன்னை மூடியுள்ள பஞ்சினைச் சுட்டெரிக்கும். அதுபோலச் சிவன் ஞானாசாரியனாய் வந்தபொழுது ஆன்மா அக்குருவின் அருளைப் பெற்றுத் தன்னைப் பிணித்துள்ள மலங்களை அகன்றொழியச் செய்யும்.

இக் கருத்து செய்யுளில் கூறப்படவில்லையாயினும் ஒரு பொருத்தம் கருதி வருவித்து உரைக்கப்பட்டது.

(தொடரும்...

## நல்ல குருநாதனைத் தேடி

ஓடுகிற நதி கடலைத் தேடியும்
விடிகின்ற பொழுது இரவைத் தேடியும்
போகின்றது சேருமிடம் இருக்கின்ற காரணத்தால்
இலக்கு இருந்தாலே வழி காணக்கூடும்.

குன்றாத செல்வமும் நோய் வராத உடலும்
உண்டாயின் உன்பயணம் நன்றாகும்
முத்து நோயுற்று முடியும் வாழ்க்கை
எட்டிப் பார்த்தாலும் வெறும் செப்படி வித்தை

கண்ணின் போக்கில் மனமும் காலும்
மண்ணிலே நடந்தால் ஊருக்குச் சேராது
ஆறுதலாய் அமர்ந்து ஒரு நிமிடம் உன்னைப்பற்றி
உள்ளே விசாரித்தால் புலன்கள் ஐந்தும்
மனத்தின் வழி செல்லுவது புரியும்.

அதனாலே தான் உனக்கு மனிதன் என்றாயிற்று
மனக்குதிரைக்கு சேணம், கடிவாளமிட்டு
நல்ல குருநாதனை தேடிப்பிடி தாமரைப் பாதங்கள் பற்றிப்பிடி
ஆசான் மொழிவது உபதேச மந்திரம்

குருலிங்க சங்கமும் சேரும்
இருவினை ஒப்பாக சத்தினி பாதமுமாம்
கருவினில் மீண்டும் வாரா நெறிகிட்டி
பேரின்ப வீட்டில் சிறந்திருக்கலாமே.

-சு. சிவராசா-

ஆண்டவனால் ஆகாதது அகிலத்தில் ஒன்றுமில்லை.

# முருகனும் வள்ளலாரும்

– திரு நீர்வை ராசுக் குருக்கள் அவர்கள் –



தமிழ் பாரம்பரியத்தில் முருகன் என்றும் வடமொழியில் கந்தன் என்றும் வைதீக வழியில் சுப்பிரமணியம் என்றும் தமிழ்க்கடவுள் அழைக்கப்படுகிறார். மேலும் தமிழ் இலக்கியத்தில் "முருகன்" என்ற சொல் பல இடங்களிலும் காணப்படு கிறது. நம் நாட்டில் முருகன், கந்தன், சண்முகன், சுப்பிரமணியன், வேலன், சரவணன், கார்த்திகேயன் எனப் பலவாறு சிவனின் இளைய குமாரனை அழைக்கிறார்கள். திருமலைக் குன்றிலுள்ள தெய்வத்தை "வெங்கடசுப்பிரமணியன்" என்று கூறுபவரும் உண்டு. பழநியம் பதியில் அவரை "ஆண்டி" என்று அழைக்கின்றனர். வேலா யுதன் என்று சொல்வது தவறு. காரணம் வேலுக்குப் பதிலாக தண்டு வைத்துள்ளான். எனவே "தண்டாயுதபாணி" என்பதே பொருந்தும். பழநி மலையில் போகர் என்று ஒரு சித்தர் இருந்தார். அவர் நவபாஷாணங்களைக் கொண்டு தண்டாயுத பாணி சிலையை வடித்தார். அதற்கு தினமும் பஞ்சாமிர்தம் கொண்டு அபிஷேகம் செய்வித்தார். பாஷாணத்தால் ஆன சிலைக்கு அமிர்தம் கொண்டு அபிஷேகம் செய்வித்தார். போகர் சமாதி பழநியில் உள்ளது. சமகால நூல்களில் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் நமக்கு நன்கு தெரியும். பத்து முதலிலும் தொகை பின்னரும் வந்தவை. பத்துப் பாட்டில் "திருமுருகாற்றுப்படை" முக்கிய இடத்தைப்பெற்றுள்ளது. எல்லா சங்க இலக்கியப் பாடல்களும் முருகனைத் துதிபாடித்தான் ஆரம்பமாகின்றன. எல்லா சங்க இலக்கியங்களும் முருகனை வணங்கித் தொடங்குவதால் அவற்றின் முன்னர் "திரு" என்ற அடைமொழியைச் சேர்ப்பது வழக்கமாகிவிட்டது.

முக்கண் பெருமானின் இளைய மகனான முருகன் அவரது நிலைகளுக்கேற்ப அழைக்கப்படுகிறார். குழந்தையாக இருக்கும் போது வேலன், இளைஞராக இருக்கும் பாலசுப்ரமண்யன், குடும்பஸ் தராகத் தோன்றும்போது வள்ளி தெய்வானை மணாளன், மற்றும் வீரனாகக் காட்சியளிக்கும்போது தேவசேனாதிபதி முனிவர்களுக்கு மற்றும் தொழுபவர்களின் நிலைக்கேற்ப வடிவேலன் வணங்கப் படுகிறான்.

முருகன் அன்புக் கடவுள், அறிவுக் கடவுள் மற்றும் போர் புரியும் கடவுள். அவன் அன்புக் கடவுளாக இருக்கும் போது குறிஞ்சி வேலாயுதனாக, போர்க் கடவுளாக

இருக்கும்போது தேவசேனாதிபதியாகி இருக்கிறான். அறிவுக் கடவுளாக உள்ளபோது ஞானபண்டிதனாகிறான். வேல் வீரத்தைக் காட்டும். அறிவு ஞான தண்டத்தைக் குறிக்கும். இந்தப் பிரபஞ்சத்தை ஆள்வது ஒலியும் ஒளியுமே பொதுவாக விநாயகரை ஒலியாகவும் முருகனை ஒளியாகவும் விளக்குவார்கள். கங்கைசூடன் தில்லைக் கூத்தன் கையிலுள்ள உடுக்கையானது ஒலியையும் நெருப்புக்கோளம் ஒளியையும் குறிக்கும். கண்ணன் கையிலுள்ள சங்கு ஒலியையும் சக்கரம் ஒளியையும் குறிக்கும். ஒலி இல்லா விட்டால் எதுவும் கேட்காது. ஒளி மிகவும் பிரகாசமாக இருக்கும். எனவே முருகன் கொள்ளை அழகுடையவன். அவன் வாகனம் மயில். சுப்பிரமணியம் என்றாலே எதிலும் எங்கும் அவர்தான். அதனால்த்தான் அவர் தனது தகப்பனுக்கே ஓம் எனும் பிரணவ மந்திரத்தைப் போதித்து தகப்பன் சாமியாகவும் சிவகுருநாதனாகவும் சுவாமி நாதனாகவும் உள்ளார். அவன் குருவானவன் - அரன் சிஷ்யன்.

சுவாமி மலையில் இக்காட்சி தத்ரூபமாக காணப்படுகிறது. இதன் தத்துவம் என்னவென்றால் கற்கவேண்டுமாயின் தந்தையாயினும் தலை வணங்க வேண்டும். மகன் சிறியவனாக இருந்தாலும் குருவாக இருக்கும்போது உயர்ந்த இடத்தில் இருக்க வேண்டும். உலகத்திற்கு பாடம் புகட்ட மகா தேவன் ஆடிய திருவிளையாடலில் இதுவும் ஒன்று. அத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த சரவணபவனின் அருள் அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளுக்கு நிரம்ப உண்டு.

குமரகுருபரருக்கும் அருணகிரிக்கும் காட்சி தந்த கந்தக்கடவுள் வள்ளலார்க்கும் காட்சி தந்தார். பள்ளிக்கூடம் போகாமல் கந்தகோட்டத்திற்குச் சென்று முருகனை வணங்கி அவன்மீது பாடல் பல இயற்றினார். எப்போதும் தன் அறையில் ஒரு கண்ணாடியை மாட்டி அதற்கு மாலை சூட்டி பழம் வைத்து கற்பூரம் காட்டி கண்ணிமை கொட்டாது அதனை உற்று நோக்கி வருவார். ஒருநாள் கண்ணாடியில் திருத்தணிகை வேலன் உருவம் தெரிந்தது.

உடனே கீழ்க்காணும் பாடலைப் பாடினார்.

“சீர்கொண்ட தெய்வங்களாலும் திகழ்
திகழ் கடந்தார்கொண்ட பன்னிரு
தோள்களும் தாமரை தாள்களும்
ஓர் கூர் கொண்ட வேலும் மயிலும்
நற் கோழிக் கொடியும் அருட்கார்
கொண்ட வன்மைத் தணிகாசலம் என் கண்ணுற்றதே”

அன்று முதல் வள்ளிக்கேள்வனின் திருவருளால் எல்லாக் கலைகளும் திறமைகளும் ஆற்றலும் தாமாகவே வள்ளலாருக்கு வந்தடைந்தன. இவ்வாறு வள்ளலாருக்கும் வடிவேலனுக்கும் ஏற்பட்ட உறவு தெய்வீகமானது. வள்ளலார் பாடிய திருவருட்பாவில் முதலில் பாடியது முருகனைப் பற்றித்தான். அவர் முருகனைச் சண்முகனாக கண்ணாடியில் கண்டார். இளவயதில் சென்னையில் அவர் இருந்தபோது கந்த கோட்ட கார்த்தி கேயனை நேரில் தரிசிக்கும்பேறு பெற்றார். பின்னர் சுப்பிரமணியக் கோட்பாட்டை வளர்த்துக்கொண்டார். அதாவது “சுப்பிரமணியா” என்பது மனித உடலிலுள்ள இரு புருவங்களிடையே தோன்றும் தெய்வீக ஒளியாகும். மேலும் சுப்பிரமணியர் என்பது மூலாதாரத்திற்கு

அன்பு நிறைந்தவனுக்கே ஆண்டவன் அருள் கிட்டும்.

மேலேயுள்ள நாடித் துடிப்பைக் குறிக்கும். சுப்பிரமணியருக்கு ஆறு தலை உண்டு. நமது உடலிலுள்ள ஆறு ஒளிப்பிளம்பும் ஆறு அறிவும் ஆறு தலைகளைக் கொண்டுள்ளன. எனவே "ஆறுமுகம்" எனப் பெயர். எண்ணம் அறிவு ஆகிய ஆதாரங்கள் இரண்டு கால் களைக் குறிக்கும். ஒளிப்பிழம்பான ஆறு ஆதாரங்களும் பன்னிரண்டு கைகளைக் குறிக்கும். வேல் சக்தியையும் அருள் அறி வையும் குறிக்கும். மணி என்பது ஒலியையும் தவஜம் என்பது புகழையும் சரஸ்சியா என்பது கருணையும் குக்குடம் என்பது மனத் திருப்தியையும் பிரக்காம் என்பது விருப்ப மின்மையையும் தண்டா என்பது உறுதியான முடிவையும் பாணன் என்பது அன்பையும் அபயா என்பது அமைதி விரும்பலையும் வரதா என்பது பொறுமையும் கடம்பமாலை பற்றின்மையையும் குறிக்கும். வள்ளலார் பிர பஞ்சத்தை மனித உடலில் கண்டார். புரா ணங்கள் பாச நூல்களாகவும் வேதங்கள் பசு நூல்களாகவும் ஆகமங்கள் பதி நூல் களாகவும் உபநிடதங்கள் அநுபவ நூல் களாகவும் கருதப்படுகின்றன. புராணங்களை விட வேதங்கள் உயர்ந்தவை. வேதங்களை விட ஆகமங்கள் உயர்ந்தவை. ஆகமங் களைவிட உபநிடதங்கள் உயர்ந்தவை. புராணங்கள் என்கின்ற நிலையில் மனிதர்கள் இருந்தார்கள். அவர்களை உபநிடத நிலைக்கு கொண்டுவர வள்ளலார் முயன்றார்.

அது செய்து முடிக்கப்பட்டால் அருட் பெரும் ஜோதிநிலைக்கு வந்து விடலாம். நட்சத்திரங்களில் கார்த்திகை விசாகம் பூசமும் ஷஷ்டி திதியும் செவ்வாய்க்கிழமை யும் முருகனுக்கு உகந்தவை. கார்த்தி கேயன் மற்றும் விசாகப் பெருமான் நட்சத்திர அடிப்படையில் அமைந்த பெயர்கள். ஒளி உமிழும் நட்சத்திரம் கார்த்திகை. அத னுடைய தேவதை அக்கினி. அதனால்த்தான் திருவண்ணாமலை தீபம் கார்த்திகை நாளில் ஏற்றப்பட்டு வணங்கப்படுகிறது. விசாகம் முருகனின் ஜென்ம நட்சத்திரமான தைப் பூசத் திருநாளில் அறிவு நிறைவடைந்து வள்ளலார் நிர்வாண தீட்சை அடைந்தார். வள்ளலாரின் கருத்துப்படி ஞானிகள் கட வுளை எல்லா இடங்களிலும் தொழுகிறார் கள். யோகிகள் தங்கள் இதயங்களிலும் கடவுளைத் தொழுகிறார்கள். கர்மயோகிகள் அக்கினியில் கடவுளைக் காண்கிறார்கள். பக்தர்கள் சிலை வடிவில் கடவுளைப் பார்க் கிறார்கள். வள்ளலார் கந்தகோட்டத்தில் சிலை வடிவில் சிங்கார வேலனைக் கண் டார். திருவொற்றியூரில் பக்தி நிலையில் இருந்து அக்கினியில் யோகம் கண்டார். தில்லைச் சிதம்பரத்தில் யோகத்தை உள்ளத் தில் கண்டார். வடலூரில் அருட்பெருஞ் ஜோதியாகக் கடவுளை எங்கெங்கும் கண் டார். அருட்பெருஞ் ஜோதிக்கு அடிமையான போது அருள் பெற்றார். காணும் இடங்களில் எல்லாம் மரம்- செடி- கொடிகளிலும் கடவு ளைக் கண்டார். வாடிய பயிரெல்லாம் பார்த்து வாடிய வள்ளலார் ஓர் அவதார புருஷர். முருகனைப் பற்றிப் பேசும்போதெல் லாம் வள்ளலார் நினைவு வரும். மரணமில் லாமல் பெருவாழ்வு பெற்ற வள்ளலார் எங்கும் வியாபித்து எல்லோருக்கும் நல் வாழ்வு காட்டி அருளுகின்றார்.

வேலும் மயிலும் துணை

கந்தன் கழல் சரணம்

வள்ளல் பெருமான் கழல் சரணம்.

*ஒவ்வொரு நற்செயலும் இதயத்தைத் தூய்மை செய்யும்.*

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

அத்தியாயம் – 04

## எல்லை இல்லாததை அடைவதற்கான போராட்டம்

**11. ஏதோ ஓர் அற்புதம்.**

இந்த உலகில் எதுவும் சாத்தியம் இல்லை எனில் முடிவில் எல்லாமே ஒரு குழப்பத்தில் வந்து முடியும். பயங்கரமான, புரிந்துகொள்ள முடியாத, வாழ்வதற்கு மிகவும் கடினமான ஒரு சூழ்நிலையிலேதான் நாம் வாழ்ந்துகொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. எனினும், எம்மை ஒவ்வொரு கணமும் மிரட்டிக்கொண்டிருக்கின்ற எம்மைச் சுற்றியுள்ள இந்த உலகத்தில் நாம் முன்னேற முடியும் என்று எம்மை வற்புறுத்தும் ஏதோ ஒன்றும் இந்த உலகத்திலேயே இருக்கின்றது. இந்த உலகம் ஒரு நரகமாக இருந்தாலும்கூட நாம் ஏதோ ஒரு வகையில் இங்கே வாழவே விரும்புகின்றோம். இவ்வாறு நாம் நரகத்தில் கூட வாழ விரும்புவதற்கு ஒரு விளக்கம் அளிக்கவேண்டிய தேவையும் எம்மிடம் உள்ளது. அந்த விளக்கம் எமக்கு உள்ளே உள்ள ஏதோ ஓர் அற்புதத்தில் இருந்து மட்டுமே வருகின்றது. அந்த அற்புதம் இந்தத் தோற்றப்பாட்டு உலகத்தோடு சேர்ந்த ஒன்று அன்று. அதனை எமது தோற்றப்பாட்டு மனத்தினால் காரண காரிய முறையில் புரிந்துகொள்ள முடியாது. நாம் வெவ்வேறு திசைகளில் எம்மை இழுத்துக் கொண்டிருக்கின்ற ஓர் ஆழ்கடலுக்கும் ஓர் பேய்க்கும் இடையே நிற்கின்றோம். எனினும், எமக்கு உள்ளே ஏதோ ஒன்று இருந்துகொண்டு ஏதோ ஒன்றைக் கூறுகின்றது. அது புலன்களுடன் கூடிய உலகத்துக்கு அப்பால் முற்றும் வித்தியாசமான ஒரு வகையில் உள்ள ஒன்றாகவே இருக்கின்றது.

**12. நிலையான வாழ்வு.**

ஆன்மீகத் தேடல் உள்ள ஒருவன் ஆன்மீக வாழ்வை மேற்கொள்வதற்கும், கடவுளை அடைவதற்கும் முயற்சி செய்யத் தொடங்கும்போது இந்தச் சிக்கலான உலகத்தையும், சமூக உறவுகளால் வரும் இடையூறுகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனது தந்தை என்ன செய்வார்? எனது தாயார் என்ன செய்வார்? எனது சகோதரி என்ன செய்வார்? எனது உறவுகள் எப்படிப் போகும்? எனது சீடன் என்ன ஆவான்? எனது குரு என்ன ஆவார்? இது என்ன ஆகும்? அது என்ன ஆகும்? இவ்வாறான ஒவ்வொன்றும் ஒவ்வொரு உறவே ஆகும்.

*உண்மைதான் அழிவில்லாத அழகு.*

பூரண முழுமையானது எந்த உறவின் அடிப்படையிலும் இல்லாதது ஆகும். அது எதனோடும் உறவு உடையதும் அன்று. எனவே பூரணத்தை விரும்புவதாயின் உறவின் அடிப்படையில் இல்லாத வாழ்வையே விரும்பவேண்டும். ஆனால் இந்த உறவுகள் உள்ள உலகில் எமது வாழ்க்கை மிக இறுக்கமானதாகவே உள்ளது. நாம் பலமான கயிறுகள் என்ற உறவுகளினால் கட்டப்பட்டுள்ளோம். இந்த உறவுகளின் அடிப்படையில் பூரணத்துவத்துக் கான எமது ஆவலை விளக்கும்போது நாம் பிழை விடக்கூடியவர்களாகத்தான் இருக்கின்றோம். இந்தநிலை ஆன்மீகப் பாதையிலும்கூட ஒரு அபாயமே ஆகும். பூரணத்துவத்துக்கான ஆவல், கடவுளை அடைதல், மோட்சம் முதலான எல்லாவற்றையும் நாம் உறவுகளின் அடிப்படையில் நியாயப்படுத்த விரும்பலாம். ஆனால், அது புலன் அனுபவமாகவும், அகங் காரத்தின் திருப்தியாகவும் மட்டுமே இருக்க முடியும். ஆனால் இறவாத வாழ்வுக்கான விருப்பம் என்றும் நிலையாக இருப்பதற்கான வாழ்வை விரும்புகின்ற முறையிலேயே விளக்கப்படுத்தப்பட வேண்டும்.

### 13. மிரட்டும் சூழ்நிலை.

கடவுளை அடைவதைப் பொறுத்தவரையில் ஆளுமையை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற கருத்தினால் மனிதர் பயப்படுகின்றனர். அப்படி நமது ஆளுமை இல்லாமல் செய்யப்பட்டால் பின்பு எஞ்சியிருக்கப்போவது எது என்ற காரணத்தைக் கொண்டு, சில தத்துவங்கள் அப்படி ஆளுமையை இல்லாமல் செய்யும் சாத்தியப்பாட்டையே நிராகரிக் கின்றன. ஆவல்படுபவர் இல்லாமல் போவாராயின் பின் அவர் எதற்காக ஆவல்பட வேண்டும்? இந்த மிரட்டும் சூழ்நிலை எங்களை அடியோடு ஆட்டங்காண வைக்கின்றது. அத்தோடு நாம் மீண்டும் உடலளவிலான வாழ்க்கைக்கும், சமூக உறவுகளுக்கும் திரும்புகின்றோம். அத்துடன் மகாபாரத யுத்தம் நடந்திருக்க முடியாது. அருச்சுனன் அதனால்த்தான் யுத்தம் வேண்டாம் என்கின்றான்.

இங்கு எனது பாட்டனார் பீஷ்மர் நிற்கின்றார். எனது குரு துரோணர் இருக்கின்றார். எனது ஒன்றுவிட்ட சகோதரர்கள் நிற்கின்றனர். நாம் எல்லோருமே ஒரே மூதாதையின் வழியில் வந்தவர்கள் ஆவோம். எங்கள் எல்லோரினது நாடிகளிலும் ஒரே இரத்தமே ஓடு கின்றது. நான் சிறு பிள்ளையாக இருக்கும்போது பீஷ்மரது மடியில் இருந்துகொண்டு அவரது பல கதைகளைக் கேட்டிருக்கின்றேன். வணக்கத்துக்குரிய அந்த பீஷ்மரை எதிர்த்து அம்பு எய்வதைக் காட்டிலும் கொடிய பாவம் என்னதான் இருக்கக் கூடும்? அத்துடன் சமூக விழுமியங்களை அழிப்பதைக் காட்டிலும் பெரிய பாவம் எதுதான் இருக்க முடியும்? வாழ்வுக்காக என்னைச் சார்ந்திருப்பவர்களுக்கும், எனது உறவினர்களுக்கும் துக்கத்திற்கும், துன்பத்திற்குமான காரணனாக இருப்பதைவிடப் பெரிய பாவம் எதுதான் இருக்க முடியும்? அவ்வாறான விழுமியங்கள் உள்ள அழகான பெரிய உலகத்தை நானா எதிர்த்து நிற்பது?

### 14. சமுதாய உண்மை.

நாம் வாழுகின்ற சமுதாயம் உண்மையில் அர்த்தம் நிறைந்ததே. அத்துடன் இன்று மனித சமுதாயத்தைவிட வாழ்க்கையில் ஒரு பெரிய அர்த்தத்தை நம்மால் காணமுடியாது. இரவு பகலாக நாம் வேலை செய்வதும், கற்பதும் மனித சமுதாயத்துக்காக

மட்டுமே. எமது மனங்களில் இவற்றைவிட வேறேதும் இல்லை என்பதையும் நாம் அறிவோம். நாம் நிறுவனங்களை வைத்திருப்பதும், ஆன்மீகத் தலைவர்களாக இருப்பதும், மற்றும் எதுவாக இருப்பதும் எல்லாமே மனித சமுதாயத்திற்கே அன்றிப் பூனைகளுக்கும், எலி களுக்கும், புலிகளுக்கும், மரங்களுக்கும், மலைகளுக்கும் அல்ல. நாம் எமது மனித இனத்தில் மட்டுமே அக்கறை உடையவர்களாக இருக்கின்றோம். ஒரு தவளை தவளையை மட்டுமே விரும்பும். அத்துடன் தவளைகள் தவளைகளுக்கான ஓர் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தையே அமைக்கும். நாம் எமது பூதாகாரமான புரிந்துணர்வோடு கூடிய அதிசய பிராணிகளாகவே இருக்கின்றோம். இந்த வார்த்தை ஜாலங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு நிற்கின்ற கிருஷ்ண பரமாத்மாவின் முன் அந்த அருச்சுனனது வாதங்கள் உண்மையில் மிகவும் அர்த்தம் அற்றவையே.

**15. பரிதாப நிலை.**

“என்ன பரிதாபம்! ஒரு வீரபுருஷனா இப்படிப் பேசுவது! நீ ஆற்றலுள்ளவனாகத்தானே படைக்கப்பட்டிருக்கின்றாய் என்று நான் எண்ணி இருந்தேன். இந்த இக்கட்டான நேரத்தில் நீ உனது எண்ணத்தில் தோல்வி போய்க்கொண்டு இருக்கின்றாயே. உற்றார் உறவினரையும், வீட்டையும், பொருள்களையும் துறந்து கடவுளை அடையும் வழியை மேற்கொண்டபின் மனித சமுதாயத்தின் அடிப்படையிலும், உனது மரணமில்லாத் தன்மையின் அடிப்படையிலும் இயல்பான உலக விழுமியங்களின் அடிப்படையிலும் நீ பேசிக்கொண்டு இருக்கின்றாய். கடவுள் இடத்திலேகூட அதே உலகத் திருப்தியையே வேண்டுமென்று விரும்புகின்றாயா?”

**16. இலக்குமி - நாராயணன் கதை.**

மிகவும் சுவாரசியமான ஒரு கதை இருக்கின்றது. வைகுந்தத்தில் இலக்குமியும் நாராயணனும் வீற்றிருந்தனர். ஒரு சமயம் இலக்குமி உலகம் முழுவதையும் நோட்டம் விட்டாள். சகதியில் அழுக்குகளை உண்டு, பிரண்டு கொண்டு இருக்கும் ஒரு பன்றியை அவள் கண்டாள். உண்மையில் அது அவளுக்கு ஒரு பரிதாபமானதாகக் காணப்பட்டது. “உங்களுடைய இந்தப் படைப்புதான் என்ன? நீங்கள் விரும்பினால் ஒரு நொடியில் எவருக்கேனும் முத்தியைக் கொடுக்கமுடியும். அப்படியான கருணை உங்களிடம் உண்டு. இந்தப் பரிதாபமான பன்றியைப் பாருங்கள். அதனை மீண்டும் வைகுந்தத்துக்கு உங்களால் கொண்டுவர முடியாதா? ஏன் அது அழுக்கான சகதியில் ஒட்டிக்கொண்டு இருக்கின்றது?” என்று அவள் நாராயணனைக் கேட்டாள்.

நாராயணன் அதற்கு “அது இங்கே வர விரும்பாது. அப்படி அது விரும்பாவிடில் அதற்கு நான் என்ன செய்யமுடியும்?” என்று பதில் கூறினான். “வைகுந்தத்திற்கு வர யார்தான் விரும்பமாட்டார்கள்? அது புகழ்பெற்ற சுவர்க்கம் அல்லவா?” என்றாள் இலக்குமி. “ஆனால் நான் சொல்லுகின்றேன். அது இங்கே வர விரும்பாது” என்று நாராயணன் மீண்டும் கூறினான். “சாத்தியமில்லை அது. பொது அறிவுள்ள எவரும் புகழ்பெற்ற வைகுந் தத்துக்கு வருவதை வெறுக்கமாட்டார்கள்” என்று பதிலுரைத்தாள் இலக்குமி. “அப்படியானால் நீ ஒரு தூதுவனை அனுப்பி அதை வைகுந்தத்துக்கு அழைத்து வரச் செய்” என்றான்

*ஆன்மீகத்தை நாடினால் ஆணவம் குறைந்துவிடும்.*

நாராயணன். நாரதர் அதற்குத் தூதுவராக அனுப்பப்பட்டார்.

நாரதர் அந்தப் பன்றியைச் சென்று சந்தித்துப் பின்வருமாறு கூறினார். "நண்பரே!; நாராயணன் உன்னை வைகுந்தத்திற்கு அழைக்கின்றான்". அதற்கு அந்தப் பன்றி "நாராயணனா? எந்த நாராயணன்? எங்கே? அது என்ன வைகுந்தம்? நீங்கள் ஏன் என்னைத் தொந்தரவு படுத்துகின்றீர்கள்?" என்று தனது விசனத்தைத் தெரிவித்தது. "இல்லை இல்லை. நான் உனக்குத் தொந்தரவு தரவில்லை. நீ ஏன் இங்கு துன்பப்பட்டுக்கொண்டு இருக்கின்றாய்?" என்றார் நாரதர். "என்ன துன்பம்? நான் துன்பப்பட்டுக்கொண்டு இருக்கவில்லையே. இங்கு மகிழ்ச்சியோடுதானே இருக்கின்றேன். எனக்கு எனது குடும்பம் உண்டு. எல்லாமே நன்றாகவே இருக்கின்றன" என்றது அந்தப் பன்றி. "இல்லை நீ இந்தச் சகதியில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றாய். நாராயணனுடைய வைகுந்தமோ ஒரு சுவர்க்கம். அங்கே நீ பெறப்போவதோ மரணமில்லாப் பெருவாழ்வு. நீ அங்கே பருகப் போவது அமுதம்" என்றார் நாரதர். "அமுதம்? அமுதம் என்றால் என்ன?" என்று கேட்டது அந்தப் பன்றி. "அதுவோ புகழ்பெற்ற இறவாமையைத் தரும் அமுதம்" என்றார் நாரதர். "என்னால் நீர் கூறுகின்ற எதனையும் புரிந்துகொள்ள முடியவில்லை. எதற்கும் இதுபற்றி எனது மனைவியிடம் கேட்டு வருகின்றேன்" என்று கூறிச் சென்றது பன்றி.

அந்தப் பன்றி தனது மனைவியிடம் சென்று பின்வருமாறு கூறியது. "யாரோ ஒருவர் ஏதோ ஒரு வைகுந்தத்தில் இருந்து நாராயணன் எம்மிடம் அனுப்பி வந்திருக்கின்றார். அவர்கள் எம்மை வைகுந்தத்துக்கு வரவேண்டும் என்று விரும்புகின்றனர். அவர்கள் நாம் அங்கே மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று கூறுகிறார்கள். நீ என்ன சொல்கிறாய்?" அதற்கு அதன் மனைவி "ஆனால் அங்கே எமது உணவு கிடைக்குமா? இங்கு நாம் உண்ணும் உணவைத் தினமும் அங்கு தருவார்களா?" என்று வினவிற்று.

நாரதரிடம் திரும்பிவந்து அந்தப் பன்றி அவரிடம் கேட்டது "இங்கு நாம் உண்ணும் உணவைத் தினமும் அங்கே பெறமுடியுமா?" நாரதர் மிகவும் விரைந்து அதற்கு "இந்த அழுக்கையா வைகுந்தத்திலே போய்க் கேட்கப் போகிறாய்? இப்படியான ஏதும் அங்கே கிடையாது. உமது இந்த உணவை உம்மால் அங்கே பெறமுடியாது. அங்கே நீ தேவாமுதத்தை மட்டும் தான் பெறலாம்" என்று கூறினார்.

"அப்படி என்றால் நீர் உமது வேலையைப் பாரும். எமது உணவைக்கூட அங்கே உங்களால் தரமுடியாது. வைகுந்தத்தில் எம்மைப் பட்டினி கிடக்கவேண்டுமென்று விரும்புகின்றீர்களா? அப்படியான இடத்திற்கா நீங்கள் எங்களை அழைத்துப்போக வந்துள்ளீர்கள்? நாங்கள் அங்கு வர விரும்பவில்லை. நீங்கள் திரும்பிச் சென்றுவிடலாம்" என்றது பன்றி. நாரதர் திரும்பி வந்து இலக்குமிக்கும் நாராயணனுக்கும் "அவை இங்கு வர விரும்பவில்லை" என்று தெரிவித்தார். நாராயணன் இலக்குமியைத் திரும்பிப் பார்த்து "அதனைத்தானே நான் முன்கூட்டியே கூறி இருந்தேனே" என்றார். (தொடரும்...

*இறைவழிபாடே இன்னல்களைக் களையும்.*

# தாயினு நல்ல தலைவன்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

முதல் மூன்று திருமுறை ஞானசம்பந்தப் பெருமான் பாடியவையாகும். இவற்றுள் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் "தட்சிண கைலாயம்" என்றழைக் கப்படும் சிவனுறை பதியாய கோணேஸ்வரம் பற்றி 3ஆம் திரு முறையிலும் மன்னார் மாவட்டத்தில் அமர்ந்தருள் பாலிக்கும் திருக்கேதீஸ்வரம் பற்றி 2ஆம் திரு முறையிலும் பாடியுள்ளார். இவர் இலங்கையில் கால் பதிக்காது இராமேஸ்வரத்தில் நின்று மத வாச்சி வழி மாகோ சந்தியூடாக 221 மைல் தூரம் கிழக்குத் துறைமுகமான கோணமாமலை பற்றி மிக நுட்பமாக அருகே இருந்தவர்போன்று "தாயினும் நல்ல தலை வன் என்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்" என்று பதிகம் பாடுகின்றார். இதில் எவ்வளவு உண்மை உண்டெனக் கண்டறிதலே இக்கட்டுரையின் நோக்கமாகும். திருவாசகம் பாடிய மணிவாசகப் பெருமான் சிவபுராணத்தில் ஓர் இடத் தில் "தாயிற் சிறந்த தயாவான தத்துவன்..." என்கிறார்.



கோணேஸ்வரம் கோணமாமலை, தென்கைலை, தட்சிண கைலாயம், திரிகமலை, கோணகம எனப் பல பெயர் கள் கொண்ட கோணேஸ்வரத் துறைமுகம் பல பெரிய கப்பல் களும் நங்கூரமிட்டுத் தங்கக்கூடிய விசாலமுடையதும் பாதுகாப் பானதுமான துறைமுகமாகும். அதனால் வியாபார நோக்கில் வந்து உள்வீட்டு அரச குடும்ப விரோதத்தினைத் தமக்குச் சாதகமாக்கித் தென்னிலங்கை ஆட்சியுரிமை பெற்றுக்கொண்ட போர்த்துக்கேசர் கோணமாமலையான பிரதான பகுதியை இடித்துக் கடலில் தள்ளியபோது பல சொருபங்களும் கல்வெட்டுக்களும் கடலில் மூழ்கியிருக்கலாம் என்பது ஐதீகம். நெடுங்காலமாக கடல் நடுவே ஒரு பாறையில் வெள்ளிக்கிழமையில் மாத்திரம் பூஜை நடைபெற்றுள்ளது.

தாய் என்ற சொல் மகிமையானது. இனிமையானது. புனிதமானது. "தாயிற் சிறந்த கோயில் இல்லை", "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்கிறார் ஔவைப்பாட்டி. இது மாத்திரமன்றி தாயானவர் மனிதப் பிறப்பின் யந்திரமாகவே எல்லோராலும் கருதப்படுகிறது. ஆனால் எள்ளளவும் உண்மை கிடையாது. ஒரு குடும்பத்தின் ஆணிவேராயிருப்பவர் தாய். அந்த ஆணிவேரில் இருந்து வெளிவந்த ஆலமரம் பல கிளைகள் பரப்பி விழுதுகள் வளர்ந்து நிலம் பதித்து நிற்பனவாகும். ஆலம் இலை என்றதும் செல்வச்சந்நிதி முருகப்பெருமானுடைய

சிறு திருவிளையாடல் ஒன்று நினைவில் வருகிறது. கதிர்காமர் அமுதாக்கி 63 ஆலம் இலைகளில் வைத்து 63 நாயன்மார்களுக்கும் அமுது படைப்பது வழக்கம். ஆனால் அன்று தாயுருவில் வந்த தனயனான முருகன் கதிர்காமரிடம் 65 ஆலமிலை எடுத்து வரப் பணிக்கிறார். துணுக்குற்ற கதிர்காமர் எதுவும் பேசாது எடுத்து வந்தார். 65 இலைகளிலும் அமுது படைக்கப்படுகிறது. இவை 63 இலைகளின் படையல் நாயன்மாருக்காகும். மிகுதி இரண்டில் ஒன்று உனக்கு, மற்றது எனக்கு என்றதும் இலைகளில் வைத்த அமுதனைத்தும் மறைந்து இலைகள் வெறுமையாகக் கிடந்ததாக ஐதீகம். இவ்வாறு விருந்தோம்பலில் சிறந்த தாயை அன்னை சக்தியாயவரைத் "தாயினு நல்ல தலைவனென்றடியார் தம்மடி போற்றிசைப் பார்கள்" என்பதில் எதுவோ உண்மை இருப்பதாகவே தோன்றுகிறது. பிடித்த பத்து பாடலிலே மாணிக்கவாசகப் பெருமான் "பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து..." என்கிறார். இவ்வகையன்றி எவ்வகையாக நோக்கினாலும் "தாயினும் நல்ல தலைவன்" என்பதே உண்மை.

இறைவன் பூவுலகில் வாழும் ஜீவ ராசிகட்குத் தனு, கரண, புவன போகங்களை அனுபவிக்க விடுத்து சூத்திரக் கயிற்றில் ஆடல்பார்க்கும் தலைவனாக விளங்கும் "அவனின்றி ஓரணுவும் அசையாது" என்னும் முதுமொழிப்படி ஆடும் நாம் வெறும் சூத்திரப் பொம்மைகள். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" எனும் வாக்குப்படி எம்மை எல்லாம் ஆட்டிப்படைக்கும் உண்மையான "தாயினும் நல்ல தலைவன்" இறைவன். ஒருவரே என்பதே உண்மை. ஏனெனில் தொழில்கள் யாவற்றுக்கும் மூலகாரணர் இறைவன் ஒருவரேயாவர். இதனாலேயே அவர் "தாயினும் நல்ல தலைவ"ராகிறார். நாம் உறங்கும்வேளை இறைவன் விழித்திருந்து எம்மைப் பாதுகாக்கிறார். ஆனால் பெற்ற தாயார் சில நேரம் நித்திரையாகி விடுவதும் உண்டு. எனவேதான் இறைவன் "தாயினும் நல்ல தலைவ"னாகிறார். இது மாத்திரமன்றி இறைவன் தாயாக வந்து தாயின் கடமைகளை நிறைவேற்றியுள்ள வரலாறுகளுமுண்டு.

தாய்ப்பன்றி கொல்லப்பட்ட நிலையில் குட்டிகள் பால் குடித்துப் பசியாற முடியாது வருந்த இறைவனாய தலைவன் தாயாக வடிவுகொண்டு பால் கொடுத்துக் கவலை தீர்த்து விளையாடவிட்டு மறைந்தமை வரலாறு.

ஒரு தாயும் மகளும் ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய வீடு ஆற்றோரம் இருந்தது. மகள் கர்ப்பவதியாக இருந்தாள். தாய் ஏதோ தேவைக்காக ஆறு கடந்து அக்கரை சென்றிருந்தார். திரும்பிவர முடியாது ஆற்றுவெள்ளம் கரைபுரண்டோடியது. அதே நேரம் இக்கரையில் இருந்த மகள் பிரசவ வேதனை தாங்காது அம்மா என்று அலறினாள். அந்த அலறல் சத்தம் தாயாரின் காதுக்கு எட்டவில்லை. ஆனால் தாயினும் நல்ல தலைவன் காதில் ஒலித்தது. உடனே தாயாக ஓடி வந்த தலைவன் மகளின் தாயாகி மருத்துவிச்சியாகிக் குழந்தை பெற்றெடுக்க உதவி ஆதரவு நல்கி மறைந்தார். ஆற்றுவெள்ளம் குறைந்து படகோடத் தொடங்கியதும் வீடுநோக்கி ஓடோடி வந்த தாய் மகளின் பக்கலில் அழகிய ஆண் குழந்தை கால் உதைத்துச் சிரிப்பது கண்டு மகிழ்ந்து உனக்கு உதவினோர் யார் மகளே? என்று கேட்ப, நீதானேயம்மா அருகிருந்து

பணிவிடை செய்தாய் எனலும் துணுக்குற்ற தாயானவள் எல்லாம் அவன் செயலே என்று கைகூப்பினாள். அந்தத் தாயாக வந்த தலைவனே திருச்சி மலைக்கோட்டையில் வீற்றிருந்து அருளும் "தாயுமானவர்" ஆகும்.

இது ஒன்றே "தாயினும் நல்ல தலைவன்" என்ற உண்மையை வெளிப்படுத்தி நிற்கிறது. "நாம் ஒன்றும் அறியோம், எல்லாம் அவன் செயல்"

"ஓம் நமச்சிவாய நமக"

### வீழ்ச்சி இல்லை!

வணங்கிடும் அடியவர்க்கு வற்றா அருள் வழங்கும்
வள்ளலெனச் சந்நிதியில் வந்துறைந்தாய்! - பக்தி
துலங்கிடும் பதியதனில் துணையாகவே இருந்தெம்
துன்பங்கள் துயரங்கள் களைந்து நிற்பாய்!

வேல்வடிவில் வீற்றிருந்து வேண்டுகின்ற வரம் ஈயும்
வேலவனே! எமையாளும் வித்தகன் நீயே! - நின்
தாள் பணிந்து தொழுது நிதம் தஞ்சமென வருவோர்க்கு
தயை புரிந்தருள் மழையைப் பொழிவாயே!

ஆற்றங் கரைதன்னில் அமர்ந்திருந்தே முருகா
அடியவர் பசிப் பிணியைப் போக்கிடுவாய்! - அங்கு
போற்றி நிதம் தொழுவோரின் பொல்லாவினைகளினை
போக்கியுமே சந்நிதியில் புதுமை செய்வாய்!

அற்புதங்கள் செய்கின்ற ஆறுமுகா! நினையன்றி
அவனியில் துணை எமக்கு யாருமில்லை! - நின்
பொற்கோவில் தனில் வந்து பூவரச மரநிழலில்
போற்றியுனைப் பாடுதல்போல் இன்பம் இல்லை!

ஆயிரமாய் பக்தரெல்லாம் அண்டிவந்து நினைத் தொழுது
ஆறுதலைப் பெறுவதங்கோர் அருட்காட்சி - முருகா
நீயிருக்கும் இடம்நாடி நினைத் துதிப்போர்க்கெல்லாம்
நின்மதியே உண்டு! இங்கு இல்லை வீழ்ச்சி!

*-கி. குலசேகரன்-*

*சோதிக்கும் இறைவனே சாதிக்கவும் வைப்பான்.*

# விதுர நீதி

(தொடர்ச்சி....

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

## நரகத்திற்குப் போகும் பதினேழு பேர்கள்

விதுரர், “திருதராஷ்டிர மன்னா! யமதூதர்களால் நரகத்தில் தள்ளப்படும் பதினேழு பேர்களைப்பற்றி சுவாயம்புவமனு சொல்லியிருப்பதைச் சொல்கிறேன்” எனச் சொல்லத் தொடங்கினார்.

சொல்லிக் கொடுக்கக் கூடாதவனுக்குச் சொல்லிக் கொடுப்பவன், கூடிய லாபத்தில் சந்தோசப்படுபவன், அளவுக்கு மீறிப் பகைவனை நெருங்கி நலம் அடைபவன், பெண்களால் வரும் பொருளைக்கொண்டு பிழைப்பவன், யாசிக்கக்கூடாதவனை யாசிப்பவன், தற்புகழ்ச்சி செய்து கொள்பவன், நல்ல குடும்பத்தில் பிறந்திருந்தும் செய்யக்கூடாத காரியத்தை ஊக்கத்துடன் செய்பவன், பலம் மிகுந்தவனுடன் எப்போதும் விரோதம் கொள்பவன், அக்கறை இல்லாதவனுக்குச் சொல்பவன், விரும்பக் கூடாததை விரும்புபவன், மாமனாராக இருந்தும் மருமகளுடன் பரிகாசமாகப் பேச நினைப்பவன், மருமகள் மூலமாகக் கடன் முதலியவற்றில் இருந்து காப்பாற்றப்பட்ட பிறகும் அவர்கள் பொருள் முதலியவை தந்து பெருமைப்படுத்த வேண்டும் என்று விரும்புபவன், அடுத்தவன் மனைவியை அடைபவன், பெண்களை அளவுக்கு அதிகமாகத் திட்டுபவன், அடுத்தவரிடமிருந்து ஒன்றைப் பெற்ற பிறகு நினைவில்லை என்று ஏமாற்றுபவன், தானம் தருவதாகச் சொல்லிப் பிறகு அதைக் கேட்டபோது தன்னைத்தானே புகழ்ந்து கொள்பவன், தீயவர்களை நல்லவர்கள் என்று சொல்பவன்- இந்தப் பதினேழு வகையான மனிதர்களையும், பாசத்தைக் கையில் கொண்ட யமதூதர்கள் நரகத்தில் தள்ளுகிறார்கள்.

இந்தப் பதினேழு வகையான மனிதர்களும் ஆகாயத்தை கையால் தொட நினைப்பவர்கள்; வானவில்லை வளைக்க விரும்புபவர்கள்; சூரியனின் ஒளிக் கதிர்களைப் பிடிக்க விரும்பும் முட்டாள்கள் ஆவார்கள்.

## எல்லாவற்றையும் அபகரிப்பது எது?

ஒருவன் நம்மிடத்தில் எப்படி நடந்துகொள்கிறானோ அப்படியே நாமும் அவனிடத்தில் நடந்து கொள்ள வேண்டும். கபடமாக நடந்து கொள்பவனிடம் நாமும் கபடமாகவே நடக்க வேண்டும். நேர்மையாக நடப்பவனிடம் நாமும் நேர்மையாக நடக்க வேண்டும்.

கிழத்தனம் - வடிவழகை அபகரிக்கிறது.
ஆசை - தைரியத்தை அபகரிக்கிறது.
மரணம் - பிராணன்களை அபகரிக்கிறது.
பொறாமை - தர்மத்தைக் கடைப்பிடிப்பதை அபகரிக்கிறது.
குணம் கெட்டவர்களிடம் சேவை செய்வது - ஒழுக்கத்தை அபகரிக்கிறது.
கோபம் - செல்வத்தை அபகரிக்கிறது.
அகங்காரம் - எல்லாவற்றையும் அபகரிக்கிறது என்று விதுரர் சொன்னார்.

*கர்வம் இல்லாத மனதில் கடவுள் குடியிருப்பார்.*

**அது ஏன்?**

திருதராஷ்டிரன், "மனிதனுக்கு ஆயுள் நூற்றாண்டு காலம் என்று, எல்லா வேதங்களும் சொல்கின்றன. அப்படி இருந்தும், மனிதன் நூறு ஆண்டுகளும் உலகில் இருப்பதில்லையே, அது ஏன்? என்று கேட்டான்.

இந்தக் கேள்விக்குப் பதிலாக விதுரர், "மன்னா! மனிதர்களை எமன் கொல்வதில்லை. அவர்களின் ஆயுளை ஆறு கூர்மையான கத்திகளே அறுக்கின்றன.

1) மிகவும் அதிகமான அகங்காரம்
2) அதிகமான பேச்சு
3) குற்றங்களை மிகுதியாகச் செய்வது.
4) அதிகமான கோபம்.
5) தன்னை மட்டும் காத்துக்கொள்வதில் ஆசை.
6) நண்பர்களுக்கு துரோகம் செய்வது.

என்னும் இவைகளே அந்தக் கூர்மையான ஆறு கத்திகள். ஆகவே இந்தத் தீய குணங்களை ஒழித்து நீங்களும் உங்கள் பிள்ளைகளும் சுகமாக வாழுங்கள் என்றார்.

**சேர்ந்தால் பிராயச் சித்தம்**

தன்னை நம்பியவருடைய மனைவியைச் சேர்பவன்,

குருவின் மனைவியைச் சேர்ந்தவன்,

ஒழுக்கத்தோடு நல்லவனாகவும் உயர்ந்தவனாகவும் இருந்தும், கீழான தீய குணமுள்ள பெண்ணைத் திருமணம் செய்துகொண்டவன்.

மது அருந்துபவன்.

உயர்ந்த பதவியில் இருந்தும், தனக்குக் கீழே வேலை செய்பவர்களின் வாழ்வைக் கெடுப்பவன்.

தீயவர்களைத் திருத்தி நல்லவர்களாக மாற்றும் உயர்ந்த குணம் கொண்டவர்களை "அதைச் செய், இதைச் செய்" என்று வேலைக்கு ஏவுகின்றவன்.

சரணம் என்று வந்தவர்களைக் கெடுக்கின்றவன்.

என்றும் இவர்கள் எல்லோரும் பிரம்மஹத்தி செய்தவர்கள் ஆவார்கள். இவர்களுடன் சேர்ந்தால், பிராயச்சித்தம் - பரிகாரம் செய்து கொள்ளவேண்டும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

**அறிவாளி**

நன்மை தரும் வார்த்தையை ஏற்றுக்கொள்பவன், நீதியை அறிந்தவன், தானம் செய்வதில் திறமை உள்ளவன், வழிபாடு செய்த பிறகே உணவை உண்பவன், உயிர்களுக்குச் சிறிதளவு கூடத் துன்பம் செய்யாதவன், பயனில்லாத செயல்களால் துயரப் படாதவன், நன்றி மறவாதவன், உண்மை பேசுபவன், மென்மைத் தன்மை கொண்டவன் இத்தனையும் கொண்ட அறிவாளி சொர்க்கத்தை அடைகிறான்.

*கிடைப்பதால் மகிழ்பவன் ஏமாற்றம் அடையான்.*

**உலகத்தையே விடலாம்.**

ஒரு குடும்பத்தை வாழ வைப்பதற்காக ஒருவனை இழக்கலாம்.

ஒரு கிராமத்தை வாழ வைப்பதற்காக ஒரு குடும்பத்தை இழக்கலாம்.

நாட்டை வாழ வைப்பதற்காக ஒரு கிராமத்தை இழக்கலாம்.

ஆத்மாவின் உயர்விற்காக உலகம் முழுவதையும் விட்டுவிடலாம்.

ஆபத்துக் காலத்தில் உதவுவதற்காகச் செல்வத்தைக் காப்பாற்ற வேண்டும். செல்வத்தால் மனைவியைக் காப்பாற்ற வேண்டும். மனைவியாலும், செல்வத்தாலும் எப்போதும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

**சூதாட்டம்**

சூதாட்டமானது, மனிதர்களுக்குள் பகையை உண்டாக்குவதாக முற்காலத்திலேயே கருதப்பட்டது. ஆகையால் அறிவாளியானவன் விளையாட்டிற்காகக் கூடச் சூதாடக்கூடாது.

மன்னா! பிரதீப வம்சத்தில் பிறந்தவரே! (பிரதீபன் மிகவும் உயர்ந்தவன். அவன் பரம்பரையில் வந்த நீ இப்படிச் செய்யலாமா? என்பதைக் குறிக்கும் வார்த்தை இது.) சூதாட்டத்தின் தொடக்கத்திலேயே இது சரியில்லை என்று நான் சொன்னேன். நோயாளிக்கு எப்படி மருந்தும் பத்தியமும் பிடிக்காதோ அதுபோல, என் வார்த்தை உங்களுக்குப் பிடிக்கவில்லை. காக்கை போன்ற உங்கள் பிள்ளைகளைக் கொண்டு, அழகிய தோகையை உடைய மயில் போன்ற பாண்டவர்களை வெல்ல முயற்சி செய்கின்றீர்கள். சிங்கங்களை விலக்கிவிட்டு, நரிகளுடன் மறைவாகத் தொடர்பு வைத்துக்கொள்ளும் நீங்கள் இதற்காக சமயம் வரும்போது வருந்தப் போகிறீர்கள்.

**வேலைக்காரர்களிடம் எப்படி இருக்க வேண்டும்?**

தன்னிடம் அன்பும், தனது நன்மையில் அக்கறையும் கொண்ட வேலைக்காரனிடம், எஜமான் கோபம் கொள்ளாதவனாக இருப்பின், வேலைக்காரன் எஜமானிடம் விருப்பம் கொண்டவனாக இருப்பான். ஆபத்தான காலங்களில்கூட துணையாக இருப்பான்.

வேலைக்காரனின் பிழைப்பைக்கெடுத்து, புதியதான வேறொன்றையோ, செல்வத்தையோ அடைய விரும்பக்கூடாது. தாங்கள் ஏமாற்றப்பட்டு, அதனால் வாழ்க்கைச் சுகத்தை இழந்தவர்கள், என்னதான் வேண்டியவர்களாக இருந்தாலும் எஜமானுக்கு விரோதியாகி அவனைக் கைவிட்டு விடுவார்கள்.

செய்யவேண்டிய காரியங்களை எல்லாம் முதலில் வரையறை செய்துகொள்ள வேண்டும். வரவு, செலவுக்கு அனுகூலமானவர்களைக் கணக்குப் போட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். பிறகு அனுகூலமாக இருந்து உதவி செய்பவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டும். செய்ய முடியாத காரியங்களைக்கூட நல்ல உதவியால் சாதிக்க முடியும்.

எஜமானின் எண்ணத்தைத் தெரிந்துகொண்டு, அதன்படியே சோம்பல் இல்லாமல் எல்லாக் காரியங்களையும் செய்பவன்; எஜமானுக்கு நல்லவைகளைச் சொல்பவன்; எஜமானிடம் பற்றுதல் உடையவன்; நல்லவன்; விபரங்களை அறிந்தவன் இப்படிப்பட்ட வேலைக்காரனை அவனுடைய எஜமானன் தன்னைப் போலவே அன்புடன் நடத்த வேண்டும்.

என்ன சொல்லியும் சொன்ன சொல்லை மதிக்காதவன்; சொல்லும்போதே மறுத்துப் பேசுபவன், தானே அறிவில் சிறந்தவன் என்ற எண்ணம் உடையவன்; விபரீதமாகப் பேசுபவன் இப்படிப்பட்ட வேலைக்காரனை விரைவில் அகற்றிவிட வேண்டும்.

**தூதனின் நன்மைகள்.**

சுறுசுறுப்பானவன், ஆண்மை உடையவன், காரியத்தை விரைந்து செய்யக்கூடியவன், இரக்கமுள்ளவன், திறமை உள்ளவன், பிறரால் மாற்றமுடியாத மனவலிமை உடையவன், சிறிதும் நோய்வாய்ப்படாதவன், சந்தர்ப்பத்திற்கு பொருத்தமாகப் பேசுபவன் என்னும் இந்த எட்டுக் குணங்களும் கொண்டவனைத்தான் தூதன் என்பார்கள்.

அபிமானம் காரணமாகத் தன்னை நம்பாதவன் வீட்டிற்கு ஒருபோதும் மாலை நேரத்தில் போகக்கூடாது. இரவு நேரத்தில் சந்தியில் மறைந்துகொண்டு நிற்கக்கூடாது. அரசனால் விரும்பப்பட்ட பெண்ணை விரும்பக்கூடாது.

மந்திராலோசனை செய்பவன் அநேகம் பேர்களிடம் கலந்து ஆலோசனை செய்பவன், கெட்டவர்களுடன் இருக்கும்போது அறிவாளியான தூதுவன் ஆட்சேபம் செய்யக்கூடாது. பலருடன் ஆலோசிக்கும் இடத்தில், "உங்களிடம் எனக்கு நம்பிக்கை இல்லை" என்று யாரையும் குறித்துச் சொல்லக்கூடாது. இத்தகைய சந்தர்ப்பங்களில் வேறு காரியம் இருப்பதாகத் தகுந்த காரணங்களுடன் நம்பும்படியாகச் சொல்லி, அங்கிருந்து விலகிப்போய்விட வேண்டும்.

அதிக இரக்கம் கொண்டவன், அரசன், விபச்சாரி, அரசனுடைய வேலைக்காரன், புத்திரன், சகோதரன், சிறுகுழந்தைகளையுடைய விதவை, பணத்திற்காகப் போரிடும் அடியாள், வீட்டில் அதிகாரத்தை இழந்தவன் முதலியவர்களிடம் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ளக்கூடாது.

(தொடரும்...

---

## எண்ணம்

மனிதனுடைய நற்குணங்களில் சிறந்து விளங்குவது "பணிவு" ஆகும். கல்வி, கேள்வி, செல்வம், குலம், பட்டம், பதவி எனப் பல இருப்பினும் பணிவு என்னும் அடக்கம் இல்லையானால் ஒருவன் சிறப்புப்பெற முடியாது.

நாம் சமைத்த குழம்பில் புளி, காரம் என்பன இருந்தாலும் உப்பு என்ற ஒன்று இல்லையானால் உண்பதற்கு உகந்ததாக ஆகாது. உணவுக்கு உப்பு இன்றியமையாதது போல் வாழ்வுக்கு அடக்கம் இன்றியமையாததாகும். திருவள்ளுவரும் தமது நூலாகிய திருக்குறளில் அடக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து "அடக்கமுடைமை" என்ற அதிகாரம் அமைத்துப் பத்துக் குறட்பாக்கள் பாடியிருக்கிறார்.

பணிவு என்ற இந்த அரிய குணம் அநேகருக்கு அமைவதில்லை. பணிவுடையார் தமது வாழ்வில் சிறப்புறுவார்கள். தண்ணீர் இறைக்கும் ஏற்றம் பணிவதால் கிணற்றிலுள்ள நீரை முகர்கின்றது. அதுபோல் ஆன்றோர்களிடம் பணிந்தால் அவர்கள்பால் தேங்கிக்கிடக்கும் அறிவு வெள்ளத்தை நாம் பெறலாம். பணிவதனால் ஒன்றும் நமக்கு இழிவு வந்துவிடாது. அது நமது பெருமையையே புலப்படுத்தும். துலாக்கோலில் தாழ்ந்த தட்டுக்குத்தானே பெருமை? காய்த்தும் பழுத்தும் பயனுடைய மரக்கிளை தாழ்ந்து இருக்கும். காய் கனி இல்லாத கிளைகள் உயர்ந்து நிற்கும். இதில் எதற்குப் பெருமை என்பதை எண்ணிப் பாருங்கள்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்" என்ற குறள் நமது சிந்தனைக்குரியது.

-கோபுரம்-

*ஊக்கமிலா உழைப்பு தேக்கமே ஏற்படுத்தும்.*

# அன்னதானக் கந்தனின் அழகு காண வாரீர்!

– திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள் –



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம் பொருளான சிவபெருமானின் திருக்குமாரர் முருகப்பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் குறை தீர்த்து நிறைவாழ்வருளும் பொருட்டு செல்வச்சந்நிதி எனும் திருத்தலத்திலே ஆற்றங்கரை வேலவனாக அன்னதானக் கந்தன் என்று அடியார் போற்றும் அருட்குமரனாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக் கின்றார்.

இந்த அழகுமிகு அருட்கந்தனின் பேரழகு சொல்லி முடியாது. பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அழகுத் திருக்கோலத்துடன் விழாக்காலத்தில் வெளிப் பட்டு வருகின்ற காட்சி அற்புத ஆனந்த கோலாகலக் காட்சியாகும்.

செல்வச் செழிப்போடு திகழும் செல்வச்சந்நிதி தொண்டைமானாற்றங்கரையிலே அடியார்க்கருளும் ஆனந்த கோலாகல அருட்கந்தனாகக் கொள்ளை அழகுடன் இந்த அன்னதானக் கந்தனின் திருவிழாவைக் கண்டு தரிசிப் பதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண் டும். தேடக் கிடைக்காத தரிசனமாகும்.

"முருகன், குமரன், குகன் என்று மொழிந்துருகுஞ் செயல் தந்து உணர்வு என்றருள்வாய்" என அருணகிரி நாதர் பாடியிருப்பதுபோல இந்தச் செல்வச்சந்நிதி முரு கனின் அருட்பொலிவு எழுத்திலே வடிக்கமுடியாது. அதை உணர்ந்துதான் பார்க்க வேண்டும்.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த் தச் சென்னியும் தந்த தலைவனாக விளங்கும் முருகப் பெருமான் வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களை யும் தீர்க்கவே தொண்டைமானாற்றங்கரையிலே எழுந்தருளி வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும்

ஆற்றங்கரை வேலவனாக அருள்பாலிக்கிறான். எங்குமில்லாத ஒரு தனிச்சிறப்பு இந்தச் சந்நிதியிலே இருக்கின்றது. கதிர்காமத்திலே கப்புறாளைமார் பூசை பண்ணுமாப்போல வாயை வெள்ளைத் துணியால் கட்டிக் கொண்டே பூசைக் கிரியைகளைச் செய்வதை இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

பசித்திருப்போர்க்கு புசித்திருக்க வழி காட்டும் இந்தக் கந்தன் அடியார் வைக்கும் நேர்த்திகளையெல்லாம் பூர்த்தி செய்யும் பாங்கு அருள்மயமானது. கைகூப்பி நின்று துயர் சொல்லிக் கும்பிடும் அடியார்களுடைய வேண்டுதல்களையெல்லாம் நொடிப் பொழுதில் நிறைவேற்றி விடுகின்ற சந்நிதி வேலவன் திருவிழா நாளில் அலங்காரமாகப் புறப்பட்டு வரும் அழகே தனி. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதவிதமான திருக்கோலத்திலே அற்புதங்காட்டி நிற்கும் அன்னதானக் கந்தனுடைய அருட்திருக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இஃது ஒரு புறமிருக்க, ஆறுமுக வேலவனுடைய வீறுகொண்ட பார்வையுடன் கூடிய அருட்காட்சி அற்புதமானது. விழிக்குத் துணையாக இருப்பது திரு மென்மலர்ப் பாதங்கள் என்றும் மெய்மை குன்றாத மொழிக்குத் துணை "முருகா" என்கின்ற நாமங்கள் ஆகும். முன்பு செய்த பழிக்குத் துணையாக இருப்பது முருகனுடைய பன்னிரு தோள்கள் ஆகும். இஃது எல்லாவற்றுக்கும் மேலாக மானிடர்களின் பயந்த தனிவழிக்குத் துணை அதாவது மரண காலத்தில் எமக்குத் துணையாக இருப்பது வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமாமே.

இது அடியார்களுக்கு அருளும் ஆற்றங்கரை வேலவனின் திவ்ய அருட்பெருங் கருணைக்கு ஓர் எடுத்துக்காட்டு. அதாவது அன்புடனே ஆரத்தழுவி பண்பும் பாசமும் காட்டுகின்ற ஓர் அடியவனின் பக்தியின் தீவிர வெளிப்பாட்டினை செல்வச்சந்நிதியிலே காணலாம். அங்கமெல்லாம் செதிள் குத்தி அன்புடனே அறுமுகனை வழிபட்டு நிற்கின்ற அடியவர்கள், தூய பக்தியுடன் ஆய கலைகளைச் சேர்த்துக் காவடி எடுத்து ஆடி ஆடி வழிபடும் பாங்கு பக்திமயமானது.

இவ்வாறு சந்நிதி வேலவனின் சக்தி மிக்க அருள்மயமான அன்பு வழிபாடு சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்கும் பக்தர்களுக்கு ஓர் இனிய வரப்பிரசாதமாகும். இந்த தொண்டைமானாற்று வேலவனுடைய இனிய அருள்மயமான வெற்றியுடன் கூடிய திருவருள் செறிவு வேறு யாருக்கும் கிடைக்காத ஒன்று. எனவே திருமாலவனின் அருள் நிறைந்த மருகன் முருகன் இங்கு அருள்பொழிகின்ற நெறியில் பக்திபூர்வமாக ஈடுபட்டு, "எல்லோரும் வாழ வேண்டும்" என்ற பரந்தநோக்கில் விரதமிருந்து வழிபட்டு நிற்கின்ற அடியார்களின் பக்தி வலையிற்பட்டு அருள்நெறி நின்றுய்வோமாக.

## ஆன்மிகச் சிந்தனை

**புறத்தில் அமைதி வேண்டுமானால், அகத்தில் அமைதியை ஏற்படுத்த வேண்டும். அகத்தில் அமைதியை நிலைநாட்டியவனுக்கு புற அமைதி இயல்பாகவே, தானாகவே அமைந்து விடுகிறது. மனித வாழ்வு வளம் பெறுவதற்குப் புறத்தில் அமைதி இருப்பதைவிட அகத்தில் அமைதி இருப்பது அத்தியாவசியம். மனம் பண்பட வேண்டுமானால் அகத்தில் அமைதியை வளர்த்துக்கொள்ள வேண்டும். நல்லவனாகவே இரு, நல்லதாகவே பேசு, நல்லவற்றையே செய், நல்லதாகவே சிந்தனை செய், நல்லதை மறக்கக்கூடாது. இதுபோன்ற கருத்துக்களை நாம் அடிக்கடி நினைத்துப் பார்க்க வேண்டும். மனிதனின் சிந்தனைகளை நெறிப்படுத்துவதில் ஆன்மிகத்துக்கு முக்கிய பங்கு உண்டு.**

*பிரார்த்தனைகளை விடவும் மிகவும் உயர்ந்தது பொறுமைதான்.*

[தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

அந்த அழைப்பில் நீங்கள் எங்கள் ஊரினூடாகச் செல்லும் வழித்தடத்தில் வந்து கொண்டிருக்கிறீர்கள். எங்கள் வீடும் இதே வழியில் கண்டி நகருக்கு அருகில்த்தான் உள்ளது. எனவே தயவுசெய்து எமது இல்லத்திற்கும் ஒருமுறை தங்கள் குழுவினர் வந்து ஆறி எம்மை ஆசீர்வதித்துச் செல்லுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம் என்ற அன்பு வேண்டுகோளை விட்டிருந்தார். ஆம் அழைத்தது வேறு யாருமல்ல அங்கு நடை பெற்ற அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு அரிய கருத்துக்களை நல்கிய சுயம்சேவா சங்கத் தலைவர் திரு லோகநாதன் அவர்களே. இவர் ஏற்கனவே சுவாமிகளை நன்கு அறிந்தவர். எனவே சுவாமிகளின் சேவையூடாக தம்பகுதி மக்களும் பயனடைய வேண்டும் என்ற பெரு விருப்பில் இருப்பவர் என்பதையும் அவர் அங்கு ஆற்றிய உரையிலிருந்து அறியக் கூடியதாகவுமிருந்தது. இவர் கண்டி நகரத்தில் ஓர் பெரிய வியாபார நிலையத்தை நடாத்துகின்ற தொழிலதிபருங்கூட. அதுமட்டுமல்ல இச் சுயம்சேவா சங்கத்தினர் எங்கள் பாரதத்துடன் தொடர்புபட்டு சமயப் பணியினூடாக பல்வேறு சமூகப் பணிகளை ஆற்றிக் கொண்டிருப்பவர்கள் என்பதையும் மலையகத்தில் இவர்கள் பரந்து விரிந்து இருப்பதையும் றம்பொடை ஆஞ்சநேயர் கோவிலுடன் தொடர்புபட்டிருப்பதையும் அறிய முடிந்தது.

எனவே சுவாமிகளும் அவரின் அன்பு அழைப்பை தட்டிக் கழிக்க முடியாது "நாங்கள் வருகிறோம்" என்றார்கள். அவர்கள் வீடு மிக அருகிலேயே இருந்தது. நாம் சாலையோரம் எமது வாகனத்தை நிறுத்தி அவரது இல்லத்திற்குள் நுழைந்தோம். மலைநாட்டிற்கே உரித்தான ஏற்ற இறக்கங்களுடன் அப் பெருந்தெருவில் வீடுகள் அமைந்திருந்தன. இவரது வீடும் பிரமாண்டமான மாடிவீடு. நாம் அனைவரும் வரவேற்பறையில் அமர்ந்திருக்கிறோம். அவரது துணைவியார் மகன், மகள் சகிதம் விழுந்து விழுந்து அந்த இரவுப் பொழுதிலும் தேநீர், சிற்றுண்டிகள் வழங்கி உபசரித்தார்கள். அப்பொழுது அந்தக் குடும்ப அங்கத்தினரின் கோரிக்கைக்கிணங்க எனது "அம்மா அம்மா என்தாயே" என்ற பஜனைப் பாடலைப் பாடும்படி பணிக்க நானும் எம்மவர்களும் சேர்ந்து பாடி அவர்களை மகிழ்வித்து சுவாமிகளிடம் அவர்கள் அனைவரும் ஆசியையும் பெற்ற நிகழ்வு இப்பயணத்தின்பொழுது எம் குழுவினருக்கு ஏற்பட்ட மறக்கமுடியாத ஆனந்த அனுபவம் என்பதையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். இப்பயணம் தொடர்ந்து ஆச்சிரமத்தை அடைந்த பின்னர் அவரவர் இடங்களிற்குச் சென்றோம். எமது மலையக ஆன்மீக அறப்பணிப் பிரயாணம் மீண்டும் 15.05.2015 வெள்ளி இரவு எமது இரவுச் சாப்பாட்டை ஆச்சிரமத்தில் முடித்துக்கொண்டு எம் வழமையான குழுவினரில் சிலருடன் ஆரம்பமாகிறது. இப்பயணம் நேரடியாக பதுளை நோக்கியதாகவே இருந்தது. அதிகாலை 4.00 மணியளவில் பதுளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகள் ஆலயத்தை அடைந்தோம். அங்கு சற்று ஓய்வெடுத்து

*ஆழ்ந்த நம்பிக்கை இமயமலை போன்றது. அதை எவராலும் அசைக்க முடியாது.*

காலைக் கடன்களை முடித்தபின் கந்தப் பெருமானின் உதயகாலப் பூசையில் அனைவரும் பங்குபற்றினோம். காலைத் தேநீரை அருகில் உள்ள தேநீர்க் கடையில் முடித்துக்கொண்டு பதுளை மகளிர் இல்லத் தலைவர் திரு R.M. கிருஷ்ணசாமி அவர்களின் அழைப்பின்பேரில் அங்கு சென்று காலை உணவை அருந்தியபின் அறநெறிப் பாடசாலைகளுக்கான உதவிகளை வழங்கும் பொருட்டு எமது பயணம் தொடர்ந்தது. இதே வேளை எங்களுடன் கோணமுட்டாவ பாடசாலை அதிபர் திரு யோகேஸ்வரனும் இணைந்து கொண்டார். திரு கிருஸ்ணசாமி அவர்களின் வழிகாட்டலில் பேருந்து பதுளை நகரிலிருந்து பல கிலோமீற்றர்களுக்கு அப்பால் படு பயங்கர வளைவுகள் ஏற்ற இறக்கங்களுடன் செல்கிறது. எம்மில் சிலருக்கு வந்த வழிகளைத் திரும்பிப் பார்க்கும் பொழுது திகிலுடன் கூடிய ஆச்சரியமாக இருந்தது. நாங்கள் இதுவரை சென்ற மலையகப் பாதைகளில் இம்முறை நாம் சென்று கொண்டிருக்கும் பாதை மிகவும் சீரற்று பராமரிப்பின்றிக் காணப்படுகிறது. ஆனாலும் எமது பார்த்த சாரதியின் சாதுரியத்தால் குறிப்பிட்ட இலக்கைநோக்கி வண்டி நகர்ந்து செல்கிறது. இம்முறை இந்தப் பயணத்தில் மீதம்பட்டி 2ஆம் இலக்க அறநெறிப் பாடசாலை, கொள்ளுமண்டித் தோட்டம், ஹந்த கெதர, சின்னநாவெல, விவேகானந்த ஆகிய அறநெறிப் பாடசாலைகளைத் தரிசிக்க முடிந்தது. இவர்களது அறிவுப் பசியையும், பல்வேறு வகையான வறுமைச் சூழலுக்குள்ளும் தப்பிப் பிழைத்துக்கொண்டிருக்கும் மிகவும் பரிதாபகரமான நிலைமைகளையும் இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும். இவர்களுக்கான கற்றல் கையேடுகள் உட்பட சிறு சிறு உதவிகளைச் செய்தபின் தொடர்ந்தும் வருங்காலங்களில் ஆற்றங்கரையானின் திருவருட்துணைகொண்டு எங்களாலான உதவிகளைச் செய்வோம் என உறுதியளித்தோம். திரு கிருஸ்ணசாமி அவர்கள் எமக்கான மதிய உணவை தமது உறவினர் ஒருவருடைய இல்லத்தில் ஒழுங்குபண்ணி இருந்தார். அங்கு அக்குடும்பத்தினரது அன்பான உபசரிப்பில் எமது உணவை அருந்தியபின் பி.ப. 2.30 மணியளவில் ஸ்பிரிங் வெலியில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் முகாமைப் பார்வை இடுவதற்காகச் செல்கிறோம். இவை பற்றிய சுருக்க விபரங்கள்:

20.02.2016இல் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெளியிடப்பட்ட "மலையக மீரியப் பெத்தை மண்சரிவின் தாக்கமும் அதன் எதிரொலியும்" என்ற ஆவண நூலில் உள்ளது குறிப்பிடத்தக்கது. ஆனால் அதனை வாசிக்கச் சந்தர்ப்பங்கிடைக்காத வாசகர்களுக்கும் ஞானச்சுடர் தொடரை வாசிப்பவர்களுக்காகவும் எனது பார்வையில் இவற்றைத் தருகிறேன்.

ஆம்! அந்த முகாமில் நாம் கண்ட காட்சி நெஞ்சங்களை நெருட வைத்தது. ஓர் பெரிய உயரமான பிரம்மாண்டமான மண்டபம். கறுத்து இருண்டு புகையேறிக் காணப்பட்ட தகரக் கூரையும் தகரங்களால் மூடி அடைக்கப்பட்ட சுவர்களையும் கொண்டதாக இருந்தது. 60' அகலமிருக்கும். நீளம் தெரியவில்லை. நாம் பார்த்த பகுதி 30' அடியுடன் தடுக்கப்பட்டிருந்தது. நுழைவதற்காக 6'x3' தகரக்கதவுதான். பனிப்புகாரினுள் மின் விளக்குகள் ஒளிர்ந்ததுபோற் காட்சி தந்தன. அதற்கும் அப்பாலுள்ள பகுதிக்குள்ளும் போகலாம் ஒரே இருட்டாக இருந்ததை எட்டிப் பார்த்தபொழுது உணரக்கூடியதாக இருந்தது. கூரையின் கோப்புசத்தை பெரும்

பெரும் தண்டவாளங்களால் அமைத்திருந் தனர். அது அக்காலத்தில் பிரமாண்டமான தேயிலைத் தொழிற்சாலைக் கட்டிடமாக இருந்ததை அறிய முடிந்தது. அன்று விடு முறை சனிக்கிழமையானபடியால் பெற்றோர் களுடன் குஞ்சு குருமான்களுமாக ஒரு நூறு நூற்றி இருபதுபேர் ஒரு கூட்டில் அடைக் கப்பட்ட கோழிகளும் குஞ்சுகளும்போற் காணப்பட்டனர். தங்கள் பகுதிகளுக்குள் எவரும் செல்லமுடியாதவாறு "பாதுகாப்பற்ற மண்சரிவுக்குள்ளாகும் பிரதேசம்" எனப் பிர கடனப்படுத்தப்பட்டுள்ளதால் எப்பொழுது தான் எமக்கு நிரந்தர வதிவிடங்கள் தருவார் களோ என்ற ஏக்கத்துடன் இருந்தார்கள் என்பதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். பழுப்பேறிய உடைகளுடன் படுமோசமான தோற்றத்தில் காணப்பட்டனர். அவர்களுக்கு நாம் கொண்டுவந்திருந்த சத்துமாப் பொதி களுடன் சுகாதார தேவைகளுக்குரிய சவர்க் கார வகைகள் பற்பசை என்பவற்றையும் குடும்பங்களுக்கேற்ற வகையில் அவர் களுடன் காணப்பட்ட சமூக சேவை உத்தி யோகத்தருடாக வழங்கி அவர்களுடன் சிறிது நேரம் கலந்துரையாடி ஆற்றுப்படுத் தினோம். உண்மையில் எம் உதவி யானைப் பசிக்குச் சோளம்பொரி போலிருந்தாலும் இம் மக்களை நாடிவந்து இதையேனும் செய்ய வைத்தானே அந்த அழகன் என்றே எண்ணத் தோன்றுகிறது. யாழ்ப்பாணத்தைச் சிங்கப் பூராக்க நாமெல்லோரும் முயலும் இவ்வேளை யில் இம்மக்களை எமது தற்கால யாழ்ப் பாண மக்களைப்போலவேனும் ஆக்க காலம் கைகூடுமா என்று என்மனம் கந்தனை யாசித் தது. கனக்கும் இதயங்களுடன் பி.ப. 5.00 மணிக்கு மீண்டும் கதிரேசன் மண்டபத்தை அடைந்தோம். (காட்சி தொடரும்...

## தொண்டு மிகுந்த தொண்டைமானாறு

பண்டு தொட்டுப் பணியுமிடம்
பக்தி யுள்ளோர் கூடுமிடம்
கண்டுதொழ அடியார் களிப்புடன்
கடுகதியாய் வந்து கூடுமிடம்
தொண்டைமா னாறு பாயுமிடம்
தொண்டர் வந்து கூடுமிடம்
தொண்டு பலசெய் யுமிடம்
தொண்டு மிகுந்ததொண் டைமானாறே.

அன்னமி டுமரும் பணியை
அன்பு மிக்க அடியார்கள்
இன்பமுறவே இனிதே இயற்றி
இல்லி லார்க்கேற்றவை புரிந்து
இன்சொல் பேசி பிணியகற்றி
ஏழ்மை போக்கஎழுத் தறிவிக்கும்
அன்பான சுவாமிகளும் தொண்டரும்
சந்நிதியான் ஆச்சிரமமும் வாழ்கவே.

-பா. பாலச்சந்திரன்-

# தொண்டின் மகத்துவம்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

தொண்டு என்பது தன்னலம் கருதாது விரும்பிச் செய்வது. இன்னும் சிறப்பாகக் கூறப்போனால் தொண்டு மனிதனை மனிதனாக வாழ வைப்பது, பிறவிகளை அறுக்க வல்லது, இறைவனடி சேர்ப்பது, பேரின்ப வாழ்வைக் கொடுப்பதென விபரிக்கலாம். எனவே மானுடப்பிறவிக்கு பெருமை கொடுக்கும் தொண்டினை எடுத்துக் கூறவும் முடியுமோ?

அறிஞர்கள் தொண்டினை இரண்டாக வகுத்துக் கூறுகின்றனர். சமூகத்திற்குச் செய்யும் பணியை சமூகப் பணியென்றும், சமயத்திற்குச் செய்யும் பணியை சமயப்பணியென வும் கூறுகின்றனர். சிலர் பொதுப் பணியினுள் சமயப்பணியும் அடங்குவதாக கூறுகின்றனர். சமயங்கள் பல இருப்பதனால் ஒவ்வொரு சமயமும் தனிப்பட்ட கொள்கைகளையும், வேறுபட்ட அனுட்டானங்களையும் உ டையனவாக இருப்பதினால் சமயத் தொண்டை வேறாகக் கூறினாலும் பிழைபடாவென எண்ணுகின்றோம். எவ்வாறாயினும் எல்லாச் சமயங்களும் இறைவனை அடையும் நோக்குடையனவாகவே இருக்கின்றன.

உலகம் உய்வதற்கு தொண்டு ஊன்றுகோல்போல் இருக்கின்றது. சமூகத் தொண்டு செய்த மகாத்மா காந்தி, ஆபிரகாம் லிங்கன், அன்னை திரேசா போன்றோரை உலகப் பெரியவர்களாக உலகம் போற்றுகின்றது. காந்தி அவர்கள் மக்களின் விடுதலைக்காக பல துன்பங்களை அனுபவித்து பலமுறை சிறையில் அடைபட்டார். இதே போல் அமெரிக்காவில் வாழ்ந்த ஆபிரகாம் லிங்கன் அடிமை வாழ்வை ஒழிக்க அரும்பாடுபட்டு வெற்றியையும் கண்டார். மாமனிதன் ஆபிரகாம் லிங்கன் சேவையினால் அமெரிக்காவின் ஜனாதிபதியாகவும் மக்களால் தெரிவுசெய்யப்பட்டார். ஏழை மக்களின் துயரைத் துடைக்க அன்னை திரேசா நாடு நாடாகச் சென்று ஏழை மக்களின் துயரை எடுத்துரைத்து, மக்களின் மனக் கண்களைத் திறக்க வைத்தார். இன்னும் எத்தனையோ தொண்டர்கள் நாட்டுக்குப் பணி செய்து இலை மறை காய்போல வாழ்ந்து, மறைந்துள்ளார்கள். இவர்களை அன்றும், இன்றும், என்றும் உலகப்பெரியார்களெனப் போற்ற மறந்தது இல்லை. ஆறறிவு படைத்த மனிதர்கள் தொண்டினால் மனிதர்களுள் மாணிக்கமாக விளங்குகின்றனர். மனிதன் புகழுடையவனாகப் பிறக்க வேண்டும். இன்றேல் பிறவாமல் இருத்தல் நன்று எனத் தெய்வப் புலவர் வள்ளுவர்,

“தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று”

என்னும் செய்யுள்மூலம் அறிய வைக்கின்றார்.

தொண்டு முதல் வீட்டிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். சிறு பாலர்களைப் பெற்றோர்கள் அன்பு வார்த்தைகள் பேசி அரவணைத்து, கடவுள் என்னும் பரம்பொருள் இருக்கிறானென்ற உண்மையை உணர வைத்து, இறைவனை வழிபட்டு பணிவிடை செய்வதுபோல்

*கடுமையாக உழைப்பவனுக்குக் கவலைப்பட நேரமில்லை.*

பெற்றோரையும் பணிந்து பணிவிடை செய்ய வேண்டுமென்ற எண்ணக் கருவை பிள்ளைகளின் மனதில் பதிய வைக்க வேண்டும். இதுபோல் வீட்டிலுள்ள முதியவர்களையும் மதித்து, பணிவிடை செய்ய, பெற்றோர்கள் தங்கள் பெற்றோரைப் பணிந்து பணிவிடை செய்து காட்டவேண்டும். குழந்தைகள் தங்கள் பாட்டன், பாட்டியை, தனது அம்மாவும் அப்பாவும் பணிந்து, பணிவிடை செய்வதைப் பார்த்து தாங்களும் தங்கள் பெற்றோருக்கு பணிவிடை செய்வர் என்பது திண்ணம். பெற்றோருக்குப் பணிந்து பணிவிடை செய்த பிள்ளை பாடசாலை சென்று ஆசிரியர்களைப் பணிந்து, பணிவிடை செய்யுமென்பது கண்கூடு. ஆசிரியர்களின் அன்பிலும் அரவணைப்பிலும் கல்வி கற்கும் குழந்தைகள் மற்ற குழந்தைகளுடன் அன்பாகப் பேசி கற்றலில் கூடிய கவனத்தைச் செலுத்தும். வஞ்சமில்லா நெஞ்சுடைய குழந்தைகள், பாடசாலைச் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் எமது சமூகம் வாழ, நாடு செழிக்க வேண்டும். பஞ்சமா பாதகங்கள் ஒழிய வேண்டும் என்ற எண்ணக் கரு பிள்ளைகள் மனதில் தோன்றும். இதனால் அப்பிள்ளைகள் சமூகத் தொண்டனாகி, உலகப் பெரியார் என்ற உத்தம நிலைக்கு கதவு திறந்திடும்.

"சிவபூமி" என்று போற்றப்பட்ட ஈழத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், அச்சுவேலி குமாரசுவாமி குருக்கள் ஐயா அவர்கள், காரைநகர் கலாநிதி சிவத்திரு க. வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா போன்றோர் தன் வீட்டை நோக்காது நாட்டுக்கு உழைத்தவர்கள். ஆறுமுகநாவலர் அவர்கள் கிறீஸ்தவக் கல்லூரியில் கல்வி கற்பித்து கிறீஸ்தவ சமய நூலாகிய பைபிளை தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தவர். அதேநேரம் தனது சமயமாகிய சைவ சமய பிரச்சாரத்திலும் ஈடுபட்டு யாழ் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில், சைவப் பிரசங்கம் செய்ததோடு நின்றுவிடாது, சைவ சமயத்தின் உண்மைக் கருத்துக்களையும் அச்சிட்டு மக்களுக்கு வழங்கினார். அது மாத்திரமன்றி தமிழ் நூல்களை அச்சிட்டு இலவசமாக மக்களுக்கு வழங்கி, பாடசாலைகளுக்கும் தமிழ்ப் பாட நூல்களாக (பாலபாடம் 1,2,3,4,5) என வகுப்புக்கேற்ற முறையில் அச்சிட்டு வழங்கிய பெருமைக்கு உரியவர் என்று கூறினாலும் மிகையாகாது. இவரின் நூல்களைக் கற்று யாழ் குடாநாட்டிலும், ஏனைய இடங்களிலும் பல பண்டிதர்கள், புலவர்கள், வித்துவான்கள் எனப் பலர் தோன்றினர். அச்சுவேலி குமாரசுவாமி குருக்கள் ஐயா அவர்கள் தன் வீட்டைக் கவனியாது, சரஸ்வதி வித்தியாலயம் என்னும் பாடசாலையையும், கோவிலையும் கட்டி, தானும் ஒரு ஆசிரியனாக இருந்து கற்பித்தார். சமஸ்கிருத வித்துவானாகிய ஐயா மனம், வாக்கு, காயம் மூன்றையும் இரு கண்களாகிய, கோவில் - பாடசாலையில் வைத்து உறங்காது உழைத்தவர். இவரைப்போல் காரைநகர் கலாநிதி சிவத்திரு வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்கள் யுத்த காலத்தில் சமய, தமிழ் நூல்களை கடகத்தில் அடுக்கி தலைச்சுமையாக சிதம்பரத்தான் ஆலய அறையில் கொண்டு சென்று பாதுகாப்பாக வைத்த பெருமைக்கு உரியவராவர்.

சமயத் தொண்டு செய்த நாயன்மார்களில் சரியைத் தொண்டு செய்த திருநாவுக்கரசு நாயனாரை எண்பத்தொரு வயதுவரை, தொண்டுசெய்ய வைத்தது தொண்டின் பெருமையை மக்களுக்கு உணர்த்தும் வாய்ப்பு

ஏற்பட்டது. சிறப்புமிகு மானுடப்பிறவிக்கு பெருமையைக் கொடுக்கும் தொண்டினை ஏற்க ஆற்றங்கரையான் ஆவலுடன் வேலும் மயிலுடன் நிற்கிறான். அடியவர்களாகிய நீங்கள் ஆசார சீலராக சந்நிதியான் ஆலய மண்ணில் உங்கள் பாதத்தைப் பதித்து வலம் வாருங்கள். எந்நிதியும் தரும் சந்நிதியான், சந்நிதியான் ஆச்சிரமத்தையும் வழி நடாத்துகின்றான். சந்நிதியான் அருள்பெற்று, சந்நிதியான் ஆச்சிரமம் செல்லுங்கள். அங்கு ஐயா உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார். அன்பு உள்ளங்களாகவும் அருள்பெற்ற உள்ளங்களாகவும் வாழ சந்நிதியான் என்றும் அருள் புரிவான்.

## பேறாகும் தீபாவளி

வீதியில் விபத்துக்கள் இல்லாத நாளே
விடிவுதரும் தீபாவளி தமிழருக்கு;
வில்லங்கம் எம்மண்ணில் இல்லாத நாளே
விடிவுதரும் தீபாவளி தமிழருக்கு,
ஆதியில் உள்ளதுபோல் ஆலயம் சிறந்தால்
அதுவே தீபாவளி தமிழருக்கு;
அமைதியாக இறைவனோடு கதைக்க விட்டால்
அதுவே தீபாவளி தமிழருக்கு;
நீதியில் தீர்வு உடன் கிடைக்குமானால்
நாளும் தீபாவளி தமிழருக்கு;
நித்தமும் நேர்மையாய் உழையுங்கள்
நாளும் தீபாவளி தமிழருக்கு,
பீதியில் லாதநிலை வரமாகக் கிடைத்தால்
பேறாகுமே தீபாவளி தமிழருக்கு - பெண்
பிள்ளைகள், சிறுவர்கள் பாதுகாப்பு இருந்தால்
பேறாகுமே தீபாவளி தமிழருக்கு.

-கே.எஸ்.எஸ்-

## கந்தசஷ்டிகால விஷேட நிகழ்வு
## (31.10.2016 - 04.11.2016)

வருடாவருடம் வழமைபோன்று இடம்பெறும் கந்தசஷ்டிகால விசேட சொற்பொழிவு "உலகெலாம்" எனும் பொருளில் செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் ஆசிரியர் அவர்களால் மாலை 7 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும்.

05.11.2016 சனிக்கிழமை மாலை சூரன்போர் உற்சவம்
06.11.2016 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பாறணை

(கட்டுரைத்தொடர் - 24

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## பதினெண் சித்தர்களில் திருமூலர் - பாகம்- 01

தமிழ் சித்தர் பரம்பரையின் தலைமைத் தளபதியாகத் திருமூலரே திகழ்கின்றார். இதனைத் தாயுமான சுவாமிகள் "மூலன் மரபில் வந்த வித்தகச் சித்தர் கணமே" எனக் குறிப்பிடுகின்றார். திருமூலருக்குப் பின்பு பல சித்தர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்தார்கள். பட்டினத்தார், பத்திரகிரியார், பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், கடுவெளிச் சித்தர், அகப்பேய்ச் சித்தர் எனப் பல்வேறு சித்த புருஷர்கள் வாழ்ந்து பல்வேறு அருள்விளையாட்டுக்களைச் செய்ததோடு பல அருட்பாடல்களையும் தந்துள்ளார்கள். இருபதாம் நூற்றாண்டிலும் சித்தர்கள் பலர் இருந்துள்ளார்கள். ஈழமணித் திருநாட்டிலும் பல சித்தர்கள் வாழ்ந்தார்கள். மகாகவி பாரதியார் தன்னையும் ஒரு சித்தர் என அறிமுகப்படுத்துகின்றார்.

"எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்"

எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

திருமூல தேவரையும் அவர் அருளிய திருமந்திரத்தையும் சிந்திப்பவர்களுக்குப் பிறவி நோய் நீங்கிவிடும் என்பதைத்,

"திருமூல தேவனையே சிந்தை செய்வார்க்குக்
கருமூலமே இல்லையே காண்"

என்ற பாடல் வரிகள் விளக்கி நிற்கிறது. ஆன்மா இறைவனோடு இணைவதற்கும், சிவகதி பெறுவதற்கும் திருமந்திரம் திசை காட்டியாக உள்ளது. இறைவனை அகத்திலே காண்பதற்கும் இறையருளை நுகர்வதற்கும் திருமந்திரம் துணையாக இருக்கும் என்பதைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

"திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந்திரமே சிவமாம் - அருமந்த
புந்திக்குள்ளே நினைந்து போற்று மடியார் தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்"

திருமூலர் அட்டமா சித்திகள் கைவரப்பெற்ற ஒரு தவயோகி. இவர் அருளிய பாடல்கள் எளிமையானவை, இனிமையானவை, படிக்கச் சுவையானவை, பயன் தருபவை, இம்மைக்கும் மறுமைக்கும் உதவுபவை. தவயோகியின் உள்ளம் தூய்மையானதாக இருந்ததால் அவருடைய சிந்தனையில் தெளிந்த ஞானம் இருந்தது. பரந்த நோக்கம் காணப்பட்டது. அவருடைய நாவால் நவிலப்பெற்ற பாடல்கள் யாவும் மந்திரசக்தி உடையதாக இருந்தன.

*என்னால் இயலாது என்று ஒருநாளும் நினையாதே, முடிந்தவரை முயற்சிசெய்.*

தெய்வத் தன்மையுடைய திருமந்திரத்தைப் படிப்பவர்கள் யாவரும் அருள் மனிதர்களாக மாறிவிடுவார்கள்.

திருமூலருடைய மரபிலே வந்த மௌனகுரு என்ற சித்தரின் சீடரே தாயுமானவர். தமது குருவைப்பற்றி, "மூலன் மரபில் வந்த மௌனகுருவே" என்றே பாடுகிறார். தாயுமானவர் தான் அருளிய "சித்தர் கணம்" என்ற பாடல்களில் சித்தர்களைத் துதி செய்து பாடுகின்றார்.

"வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே"

என்று சமய பேதங்களைக் கடந்த முற்றறிவுடன் சித்தர்களைத் துதிக்கின்றார். இந்தச் சமரசமே மெய்ஞ்ஞானம் என்பதைச் "சமரச நன்னிலை" என்று குறிப்பிடுகின்றார்.

சிவாநுபூதிச் செல்வராகத் திருமூலர் திகழ்வதற்குப் பல காரணங்கள் உண்டு.

1) காயமே பொய் என்ற வாதம் வலுப்பட்டிருந்த சித்தர்கள் மரபில் வந்த திருமூலர் உடம்பைக் கோயில் என்று பாடிய முதல் தமிழ்க் கவிஞராக இருந்தார்.
2) உலக சமுதாயம் உயர்வு தாழ்வுகள் இன்றி ஒன்றாக இருக்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தினைக் கொண்டிருந்தார்.
3) அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் பரம்பொருளாகிய இறைவனை அகத்திலே காண்பதற்கு வழிகாட்டினார்.
4) இறையருளால் தான் பெற்ற அனுபவத்தை அனைவரும் பெறவேண்டும் என்று பரந்த சிந்தனை கொண்டிருந்தார்.
5) வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய வாழ்வியல் நெறிகளைத் தனது பாடல்களின் ஊடாக விளக்கியுள்ளார்.
6) சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் திருமந்திரத்தின் ஊடாகத் தெளிவாகக் கூறியுள்ளார்.
7) நீண்ட காலம் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கான வழிமுறைகளையும், நோய்களை நீக்கும் சித்த வைத்தியத்தினையும் திருமந்திரப் பாடல்களின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

சிவசித்தர்கள் பேரறிவு வடிவாகிய சிவத்தை தரிசித்தவர்கள். இவர்கள் ஆணவ மலம் நீங்கிய சீவன் முத்தர். பரமுத்தி அடையத் தகுதி உடையவர்கள். சாலோகம், சாமீபம், சாரூபம் ஆகிய மூன்று வகை முத்திகளும் முறையே சரியை, கிரியை, யோகம் ஆகியவற்றால் அடையப்படுவன. இவை பதமுத்தி எனப்படும். எனது என்னும் புறப்பற்றும், நான் என்னும் அகப்பற்றும் விட்டுச் சிவமயமாகிய சித்தத்தில் நிலைபெற்று நிற்பவரே சிவசித்தர் எனத் திருமந்திரம் கூறுகிறது.

பதமுத்தி மூன்றும் பழுது என்று கைவிட்டு
இதம் உற்ற பாச இருளைத் துரந்து
மதம் அற்று, எனது,யான் மாற்றிவிட்டு ஆங்கே
திதம் உற்றவர்கள் சிவசித்தர்தாமே.

வீணாகாத ஒரே விஷயம் உழைப்பு மட்டுமே.

சிவசிந்தனையோடு வாழும் அடியவர்களின் நெஞ்சம் சிவனுறையும் திருக்கோயிலாகவே மாறிவிடும். அத்தகையோரின் சித்தமாகிய நெஞ்சில் சிவனடிப் பேரின்பமே நிலை பெறும். "சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்" என்பதுபோல இத்தகையவர்கள் இறைவனால் வலிந்து ஆட்கொள்ளப்படுவார்கள். "அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்" என்ற மணிவாசகப் பெருமானின் வாக்கிற்கு அமையச் சிவனடியார்களோடு சேர்ந்திருந்து சிவனையே துதிக்கும் வாய்ப்பு உண்டாகும். சித்திக்கும், முத்திக்கும் வழிகாட்டும் அன்பியல் வாழ்க்கை, அருளியல் வாழ்க்கை, இன்பியல் வாழ்க்கை ஆகிய மூன்றும் ஒருங்கே கிட்டும். முன்னைத் தவத்தின் பயனாக சித்தம் சிவமாகியவர் உறவு உண்டாகி சித்தியும் முத்தியும் ஒருங்கே கிட்டும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

சித்தம் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்
சித்தம் சிவானந்தம் சேர்ந்தோர் உறவுண்டால்
சித்தம் சிவமாகவே சித்தி முத்தியாம்
சித்தம் சிவமாதல் செய்தவப் பேறே.

அதிர்வுகளுக்கு நிலைக்களனாய் இருக்கும் சித்தத்தை உருக்கிச் செயலிழக்கச் செய்துவிட்டால் அலைகளில்லா நீர்நிலைபோல் ஆக்கிவிட்டால், பேரானந்த நிலை கிட்டும். "அத்தகைய தெளிந்த சிந்தையில் இறைமை கண்டு இன்பம் சுவைப்போருக்கு குற்றங் குறைகளில்லை. மான அவமானமில்லை; குலங்கோத்திரமில்லை; குணமும் குணக்கேடும் இல்லை; நன்றும் தீதும் இல்லை; வேறுபாடுகள் ஏதுமற்ற இனிய நிலை அது எனத் திரு மந்திரம் குறிப்பிடுகிறது.

மலமில்லை மாசில்லை மானாபிமானங்
குலமில்லை கொள்ளுங் குணங்களுமில்லை
நலமில்லை நந்தியை ஞானத்தினாலே
பலமன்னியன்பிற் பதித்து வைப்போர்க்கே.

மணலில் நீர் வார்த்துச் சோறாக்கிக் கறி சமைத்துச் சிறுவர்கள் பொழுது போக்காக ஆடும் விளையாட்டுப் போன்றது உலகியல் வாழ்வு. மணற்சோறு உண்மையான பசியைப் போக்காது. இதேபோல உலகியல் அனுபவம் ஆன்மப்பசிக்கு உணவாகாது. பிறப்பறுக்க வேண்டும் என்பதே ஆன்மப் பசி ஆகும்.

சிறியார் மணற் சோற்றில் தேக்கிடு மாபோல்
செறிவால் அனுபோகம் சித்திக்கும் என்னில்
குறியாத தொன்றைக் குறியாதார் தம்மை
அறியாதிருந்தார் அவர்அவர் அன்றே.

உயிரும் உடம்பும் உலகியல் கல்வியும் அனுபவமும் இறைவனின் திருவருளைப் பெறுவதற்குத் துணை செய்யும் காரணிகளாகும். இவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தினால் பிறவிநோய் நீங்கும். முப்பத்தாறு தத்துவங்களின் விரிவாகக் கிடக்கும் மாயா

*நமது வாழ்வை வளமாக்குவது நம்பிக்கைதான்.*

உலகத்திலிருந்து விடுபட்டு உண்மையான சிவபோகத்துள் ஆன்மா அழுந்திட வேண்டும். சீவனுக்குள்ளே சிவமணம் பூக்கின்ற பரந்தநிலை தோன்ற வேண்டும். இந்த அனுபவ நிலையே முத்திநிலை ஆகும். சித்தர்களின் வழிமுறைகள் வேறுபட்டாலும் குறிக்கோளில் மாற்றமில்லை. பிறப்பறுப்பதும், அதனால் பேரின்பம் காண்பதும் ஆன்மப் பயணத்தின் குறிக்கோளாகச் சித்தர்கள் கொண்டுள்ளனர்.

உறுதுணையாவது உயிரும் உடம்பும்
உறுதுணையாவது உலகுறு வேள்வி
செறிதுணையாவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கின் பிறப்பில்லை தானே.

பிறப்பும் இறப்பும் வாழ்வெனும் நாணயத்தின் இரு பக்கங்கள். பிறந்து வாழ்கின்றவன் இறவாதிருக்க முடியாது. ஆக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் அழிந்தே தீரும் என்பது இயற்கை நியதி. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே உள்ள கால அளவில் உயிரினங்கள் வேறுபடலாம். ஆனால் பிறப்பு இறப்பு என்னும் சக்கரத்தில் சிக்காத உயிரினமே இல்லை. ஊர்ந்து செல்லும் புழு முதல் ஓங்கி நிற்கும் மாவீரன் வரை அனைவரும் இறப்பு என்னும் முத்திரை குத்தப்பட்டே பிறக்கின்றனர். மரணம் தவிர்க்கமுடியாத முடிவு. வரவேண்டிய காலத்தில் வந்தே தீரும் என்கிறார் ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியர். நேற்றிருந்தோர் இன்றில்லை; இன்றிருப்போர் நாளை இல்லை என்ற இயல்புடையது இவ்வுலகு என்பதை

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ் உலகு"

எனத் தமிழ் மறையாகிய திருக்குறளும் கூறுகிறது.

பிறவாமை என்னும் பேரானந்த சுகத்தைப் பெறுவதையே "மரணமில்லாப் பெருவாழ்வு" என அருளாளர்கள் குறிப்பிடுகின்றனர். மருவுடல் எடுத்துப் பிறக்காத ஆன்மா துன்பம் கலவாத இன்பத்தையும் வரம்பிலா ஆனந்தத்தையும் சுவைக்கும். இச்சுவையில் ஆன்மா நிலைப்பதே பிறவாப் பெரும்பேறு ஆகும். மரணத்தின் பின் ஆன்மாவின் பயணம் இரண்டாகப் பிரிகின்றது. மீண்டும் பிறந்திருக்கும் பிறவித் தொடர் என்னும் சுழல் பாதையில் சில ஆன்மாக்கள் சுழல்கின்றன. இதையே "பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" என்று அப்பர் பெருமானும், "பின்னை நின்றென்னே பிறவி பெறுவது, முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்" எனத் திருமூலரும் தங்கள் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்கள். வேறு சில ஆன்மாக்கள் பிறவாமை என்னும் நேர்கோட்டுப் பாதையில் சென்று இறைவன் திருவடியை அடைந்து பேரின்பத்தில் திளைக்கின்றன. இக்கருத்தை "இக்காயம் நீக்கி இனியொரு காயத்தில் புக்குப் பிறவாமல் போம் வழி நாடுமின்" எனத் திருமந்திரம் கூறுகிறது.

இறையருளைப் பெறுவதற்கான வழிகளாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிமுறைகளைச் சைவ இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சரியையும் கிரியையும் புற உலகில் இறைவனைக் கண்டு பூசனை செய்யும் வழிகள். யோகமும், ஞானமும் இறைவனைத் தன்னுள் கண்டு இன்புறத் துணை செய்யும். இறைவனோடு ஆன்மாக்கள்

கொண்டுள்ள நெருக்கத்தை அளவுகோலாக்கி இறையடியார்களை திருமூலர் நான்கு வகையினராகக் கூறுகின்றார். சரியை நெறியாளர் பக்தர்; கிரியை செய்வார் தொண்டர்; யோகம் பயில்வார் சாதகர்; ஞானம் சேர்வார் சித்தர்; எனத் திருமந்திரம் வகைப்படுத்துகிறது.

பக்தர் சரிதை படுவோர் கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள்வேடத் தாகுவோர்
சுத்தவியமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானஞ் சென்று றெய்து வோர்களே.

இந்நால்வகை நெறிகளைத் தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம் என்றும் கூறுவர். இந்நெறிகளைப் பயில்வார் அடையும் ஆன்மப் பயன்களை முறையே சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் எனச் சமய வாதிகள் கூறுகின்றனர். பாசம் ஆன்ம அறிவால் அடக்கப்படுவதையும், இறையருளால் விலக்கப்படுவதையும் கொண்டு சாலோகம் முதலிய முத்தி நிலைகளைத் திருமூலர் விளக்குகின்றார். நால்வகை முத்தி நிலைகளை முத்திப்படிகளாகவே திருமந்திரம் காட்டுகிறது. பாசம் எனப்படும் உலகியலை ஆன்ம அறிவெல்லைக்குள் அடக்கி இறைவனை வழிபட்டு இன்புறும் நிலையைச் சாலோகம் என்றும், பாசம் தன் வன்மை இழந்து அருள்வழி விலகி நிற்க ஆன்மா அடையும் நிலையைச் சாமீபம் என்றும் திருமந்திரம் குறிப்பிடுகின்றது. ஆன்மாவின் கரணங்களாக இருந்தவை இறைவனின் கரணங்களாக மாறும் நிலையை சாரூபம் என்றும், பதி ஞானத்தில் பாசஞானம் கலந்து கரைந்து ஆன்மா தன்னை மறந்து இன்புறும் நிலை சாயுச்சியம் என்றும் கூறுகிறது.

பாசம் பசுவானதாகும் இச்சாலோகம்
பாசம் அருளான தாகும் இச் சாமீபம்
பாசம் சிரமானதாகும் இச் சாரூபம்
பாசம் கரைபதி சாயுச்சியமே.

-திருமந்திரம் 1509-

மனிதன் இறைமைப் பேறடைய வேண்டும் என்ற கொள்கை உடையவர்கள் சித்தர்கள். பொய்ம்மையான புற வழிபாடுகளைச் சாடுவதோடு நின்றிடாமல் மக்களை அக வழிபாட்டுக்கு அழைத்தனர். ஆலயம் உனக்கப்பால் இல்லை; உன்னுள்ளே இருக்கிறது என்பது சித்தர்களின் கொள்கை. சிவலிங்கம் ஆலயத்தின் கருவறையில் இல்லை; உன் சீவனில் சிவன் கலந்திருக்கிறான் என்று சித்தர்கள் உறுதி கூறினர்.

சித்தானுபவம் பெறத் தத்துவ சிந்தனை பெரிதும் துணைபுரிகிறது. ஐம்பொறிகளின் வழிவரும் புற உலக அனுபவம் வேறுபாடுகளும் முரண்பாடுகளும் உடையதாக இருக்கிறது. எனவே அதனை ஒதுக்கிவிட்டு உள்ளுணர்வில் சிந்தனையைச் செலுத்தி உலகியலை விலக்கி இறைவனையே எண்ணி இருப்பவர்கள் சித்தர்கள்.

சித்தர் பாடல்களில் பெரும் பகுதி உலகியல் வாழ்வின் நிலையாமை பற்றியும், யோகம், ஞானம், இறையின்பம் என்பன பற்றியுமே பேசுகின்றன. சமூக ஒற்றுமை, சமூக

*கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.*

நலன், தனிமனித அறம், சமூக ஒழுங்கு என்பன பற்றியும் சித்தர்கள் எண்ணியுள்ளனர். உலகியல் வாழ்வை முடிந்த முடிபாக எண்ணிச் செயற்படுவதை ஆன்மீக வாதிகள் ஒப்பு வதில்லை. உலகியல் வாழ்வையும், சமூக அமைப்புக்களையும் கருவிகளாகப் பயன்படுத்தி ஆன்ம நிறைவு காண்பதை ஆன்மீகவாதிகள் மறுப்பதில்லை. ஆன்ம நிறைவுக்கு ஏற்ற வகையில் தனிமனித வாழ்வும், சமூக ஒழுங்கும் அமைந்திட வேண்டும் எனச் சித்தர்கள் கருதினர். சித்தர்கள் சமுதாய உணர்வுள்ளவர்கள். சமூகச் சிற்பிகள்; சமூகப் புரட்சிகளுக்கு வித்திட்டவர்கள்.

பாலுக்குள் தேடினால் நெய்யைக் கண்டுபிடிக்க முடியும். ஞானம் தரும் இறைவனைத் தேடி வாழ்நாள் முழுவதும் சிலர் அலைந்து திரிகின்றார்கள். இறைவன் தேடுபவர்களின் உள்ளத்தில் அவர்களுடைய உணர்வில்த்தான் தங்கி இருக்கிறான் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

முத்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையை
எத்தனை காலமுமேத்துவ ரீசனை
நெய்த்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்
அத்தகு சோதியது விரும்பாரே.

(தொடரும்...

## நற்சிந்தனை

தெய்வத்தை நம்பு. முழுமனத்தோடு நம்பு. உலகில் உனக்கினியதெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. அதைவிட வேறில்லை என்று நினை. இருக்கும்போதும் நிற்கும்போதும் நடக்கும்போதும் கிடக்கும்போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலுந் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை, கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவனுடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

சிவபெருமான் அத்துவிதமாக இருக்கிறார். அடியேன் அவரே எனத் தியானிக்கும் மகிமை எனக்குண்டு. ஒருவன் எப்படிப் பாவனை செய்கிறானோ அவன் அப்படி ஆகிறான். ஆகையால் "நான் அவனே" என்று தியானஞ் செய். அப்போது உன் செய்கைகள் அனைத்தும் அவன் செய்கையேயாகும். அவனைத் தவிர வேறு பொருள் இல்லை அவனே அனைத்தும். அப்படியான அவனே தன்னைப் பல கோலங்களாக்கி விளையாடுகிறான். அவனுக்குப் பிறப்பில்லை ஆதியந்தமில்லை. ஒரு மாறுதலுமில்லை. முழுதுமுண்மை.

*-யோகர் சுவாமிகள்-*

*பொறாமையினால் மனதில் உருவாகும் விஷம் இறுதியில் அவனையே அழித்துவிடும்.*

# தமிழ் வளர்த்த தெய்வம் முருகன்

– செல்வி தில்லைநாயகி நடராஜா அவர்கள் –

சங்க காலத்தில் நிலத்தினை நான்காக வகுத்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பெயரிட்டனர். திரும்ப பாலையையும் சேர்த்து ஐவகை நிலங்களாகப் பிரித்து அந்நிலங்களுக்குரிய தெய்வங்களையும் ஒழுக்கங் களையும் சங்கத் தமிழர் பண்பாட்டிற்கமைய நூல்களைத் தந்தனர். அந்நிலங்களில் மலையும் மலைசார்ந்த நிலத் தையும் குறிஞ்சி எனப் பெயரிட்டு குறிஞ்சி நிலத் தெய்வ மாக முருகனை வழிபட்டனர். முருகு என்ற பதம் இளமை, அழகு என்ற பொருளைத் தருகிறது.



மாசற்ற உள்ளங்களில் இறைவனை இருத்திக் கொள்ள இயலும் என்ற கருத்திற்கமைய உயர்ந்த மலையும் மலைசார்ந்த நிலத்திலும் முருகனை இருத்தி வழிபட்டனர் பண்டைய தமிழர். தமிழ் மக் களின் உள்ளங்கள் முருகனுறையும் ஆலயங்கள் ஆகும். "முருகா" என்று ஒருமுறை கூறியழைத்தாற் போதும் அவன் அன்பர்க்கு அன்பனாகவும் அடிய வர்க்கு எளியவனாகவும், கவிஞர்க்குப் புலவனாகவும் காட்சி அளிப்பான். "நெஞ்சில் ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும் முருகா என்று ஓதுவார் முன்" என்று பாடினார்கள். பெருமானைச் சங்கத் தமிழில் வைத்துப் பாடினார் நக்கீரர். புராணத் தமிழில் வைத்துப் பாடினார் கச்சியப்பர். அவன் கையிலுள்ள வீரவேல் விண்ணோர் சிறைமீட்ட தீரவேலாகும். சூரனது மார்பையும் கிரௌஞ்ச மலையையும் துளைத்த வேலாகும். இவ்வேல் குகையைப் பிளந்து பூதத்தைக் கொன்று நக்கீரரைக் காப்பாற்றியது மட்டுமன்றி அக்குகையில் அடைக்கப்பட்டுக்கிடந்த தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேரையும் சீறைமீட்டுத் தந்தது. நக்கீரர் சங்ககாலத்துத் தலைமைப் புலவர். ஒருநாள் திருப் பரங்குன்றத்தை அடுத்த தடாகக் கரையில் சிவபூசை செய்து கொண்டிருந்தபோது அவர் கவனம் மற்றுமோர் காட்சியில் லயித்தது. மரத்திலிருந்து விழுந்த இலையொன்று பாதி மீனாக நீரிலும் பாதி பறவையாக நிலத்திலும் ஒன்றையொன்று இழுத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். சிவபூசையிலே மன ஒடுக்கமின்றிக் குற்றப்பட்டார். அதனால் கற்கிமுகி என்ற பூதம் குகையிலடைத்தது. இதற்குமுன் அடைபட்டவர்களும் அங்கிருந்தார்கள். பூதம் உண்பதற்கு ஆயத்தம் செய்தபோது அங்கிருந்தோர் நக்கீரரை நிந்தித்தனர். தமக்கு அழிவு தேடவே அவர் வந்தார் எனக் குற்றஞ் சாட்டினர். அந்நிலையில் நக்கீரர் முருகனைச் சிந்தித்து சங்கத் தமிழிற் பாடினார்.

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டார்அங்கு..."

*மன நிறைவுதான் ஒருவனைப் பணக்காரனாக்குகிறது.*

எனத் தொடர்ந்து பாடிக்கொண்டு போனார். குகையிலே வேல் பாய்ந்தது; குகை பொடியானது. பூதம் கொல்லப்பட்டது. எல்லோரும் கரையேறினர். இதனை அருணகிரிநாதர்

“மலைமுகஞ் சுமந்த புலவர் செஞ்சொல் கொண்டு
வழிதிறந்த செங்கை வடிவேலா”

என்று பாடியருளினார்.

எனவே முருகனின் கருணைத் திருவிளையாடலை எண்ணி மகிழ்ந்து தாம் பெற்ற பேற்றை மற்ற யாவரும் பெறவேண்டுமென்று வழிப்படுத்துவதாக அமைந்ததே திருமுருகாற்றுப் படையாகும்.

முருகனுடைய கருணையைச் சொல்லிக்கொண்டே போகலாம். அன்பென்னும் இதய கமலத்தில் வீற்றிருந்து அடியவர்களுக்கெல்லாம் அருளிய செயல்களை நூல்கள்மூலம் அறிந்தோம். வாயால் சொல்லி நெஞ்சால் நெகிழ்ந்துருக கருணைக்கரம் நீட்டுவான் கதிர்காமக் கந்தன். நல்லைக் கந்தன் அலங்காரக் கந்தனாக அடியார் இதயத்தைக் கொள்ளை கொண்டவன் அன்னக்கந்தனாக செல்வச்சந்நிதியில் காட்சி கொடுத்தவண்ணம் இருக்கின்றான். வேண்டுவார் வேண்டுவதை ஈவான் எம் இறை எம் இதயத்தைக் கலங்க வைக்க அவன் மனம் இசையாது. முருகா என்று உள்ளம் உருகி அழைத்தால் ஓடோடி முன்வருவான். தந்தைக்கு உபதேசம் செய்த நாயகன். ஞான வித்தகன் தன்னையடைந்தோர்க்கு ஞானம் வழங்குபவன். ஈசனோடு ஞானமொழி பேசியவன். பகைவனாகிய சூரனையே ஞானமுறச் செய்தவன். முருகனுடைய அவதாரம் தேவர்களுக்கு அபயம் அளிக்க வந்த அவதாரமாகும். இதனைக் கச்சியப்பர்,

“அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய”

உலகமுய்யவேண்டி உதித்த பிரான் அன்பர்களின் அல்லல் போக்கி அருள்வான்.




வானம் சுருங்கில் தானம் சுருங்கும்.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| கே. குமாரசாமி | கரவெட்டிமத்தி | 1000. 00 |
| கோ. சஜீதா | சாவகச்சேரி | 500. 00 |
| வ. தங்கவடிவேல் | வவுனியா | 1000. 00 |
| சிவநாதன் திருக்குமரன் | இணுவில் | 10000. 00 |
| பா. சுந்தரம் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| க. குசலாதேவி | அளவெட்டி | 500. 00 |
| ஐ. பவித்திரா | பருத்தித்துறை | 5000. 00 |
| ஆ. சந்திரகுமார் | மீசாலை 1புட்டி அரிசி, மரக்கறி, | 1000. 00 |
| க. ஞானசீலன் | மாதகல் | 5000. 00 |
| திருமதி சு. விஜயகுமார் (இளை. ம.வ) | கோப்பாய் | 10000. 00 |
| சு. சுரேந்திரரெட்ணம் | கோப்பாய் | 5000. 00 |
| த. ரமேஷ் | புலோலி | 5000. 00 |
| க. சிவபாக்கியம் | புலோலி | 25000. 00 |
| திரு/திருமதி சீவரெத்தினம் பத்மாவதி நினைவாக | சங்கானை | 2000. 00 |
| திருமதி சற்குணராஜா சாந்தி | கனடா | 2000. 00 |
| நி. அட்சரா | அராலி | 3000. 00 |
| ப. பத்மலிங்கம் | இணுவில் | 1000. 00 |
| ஆ. தெய்வேந்திரம் | அச்சுவேலி | 1000. 00 |
| தே. சந்திரகுமாரி | பருத்தித்துறை | 10000. 00 |
| த. லலிதா | கரவெட்டி | 2000. 00 |
| நா. தில்லைநாதன் | இணுவில் | 1000. 00 |
| த. கெங்கா | உடுப்பிட்டி | 500. 00 |
| சி. புஸ்பவதி | உடுப்பிட்டி | 500. 00 |
| மு. பொன்னுத்துரை | மல்லாகம் | 2000. 00 |
| செல்வி S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| பி. கேதாரணி | சுவிஸ்லண்ட் | 3000. 00 |
| R. தவராஜா | குப்பிளான் 1மூடை அரிசி, | 2000. 00 |
| வ. ஆனந்தலிங்கம் | கனடா | 2000. 00 |
| தங்கராசா தங்கமணி | தம்பாலை | 1000. 00 |
| க. குணசிங்கம் | சாவகச்சேரி | 1000. 00 |
| K. கௌசிகன் | ஜப்பான் | 2000. 00 |
| S. சோதிநாதன் | கொழும்பு-11 | 5000. 00 |

பணத்தின் பலன் அனைத்தும் அது பயன்படுத்துவதில்த்தான் இருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| க. கனகராஜ் | கீதா ரேடிங் கம்பனி | கொழும்பு | 1000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | | மயிலிட்டி | 1000. 00 |
| ஐ. தங்கேஸ்வரன் குடும்பம் | | கொழும்பு | 5000. 00 |
| K. சிவரூபன் குடும்பம் | | கொழும்பு | 1000. 00 |
| மு. லோகநாதன் | | கொழும்பு | 10000. 00 |
| ந. குமுதினி | | கொழும்பு | 500. 00 |
| அ. ஜெயக்குமார் குடும்பம் | | பிரான்ஸ் | 15000. 00 |
| பி. சரண்யா | | வவுனியா | 1000. 00 |
| S. நாகேந்திரராஜா | | கனடா | 4000. 00 |
| திருமதி ராஜலெட்சுமி சண்முகலிங்கம் | | கனடா | 1000. 00 |
| ர. கமலலிங்கம் | | கனடா | 1000. 00 |
| வே. பரமேஸ்வரன் | | சிறுப்பிட்டி | 1000. 00 |
| பா. பாலச்சந்திரன் | | சுன்னாகம் | 1000. 00 |
| சி. ஸ்ரீரெங்கன் | | வசாவிளான் | 10000. 00 |
| K. சம்பந்தர் | | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| ஆ. புண்ணியமூர்த்தி | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| செ. பத்மலிங்கம் | | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| சுமதி சம்பந்தமூர்த்தி | | டுபாய் | 300. 00 |
| இராசரத்தினம் சுபாஸ்கரன் | | கொடிகாமம் (U.K) | 5000. 00 |
| K. ஜெயமோகன் | | கைதடி | 4000. 00 |
| K. சபாபதிப்பிள்ளை | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| இ. திருக்குமரன் | | மானிப்பாய் | 1000. 00 |
| ச. அஷ்மிதா | | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| ச. ஆதீஷன் | | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| திருமதி சரஸ்வதி தியாகராஜா | | U.K | 2மூடை அரிசி |
| மு. விநாயகமூர்த்தி | | மல்லாகம் | 1மூடை அரிசி |
| வெ. சோமஸ்கந்தராஜா | கல்வயல் | சாவகச்சேரி | 5000. 00 |
| க. முத்துக்குமாரசாமி | | தெல்லிப்பழை | 2000. 00 |
| கு. அக்ஷயா | | வவுனியா | 5000. 00 |
| திருமதி S. சிவசம்பு | | கொழும்பு | 500. 00 |
| அ. ஜெயக்குமார் குடும்பம் | | பிரான்ஸ் | 15000. 00 |
| பி. சரண்யா | | வவுனியா | 1000. 00 |
| K. கணேசன் குடும்பம் | | கொழும்பு | 1000. 00 |
| துர்க்கா நகை மாடம் | | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வீ. இராமலிங்க ஐயர் நினைவாக | | கெருடாவில் | 2500. 00 |
| வி. பொன்னுச்சாமி குடும்பம் | | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| சி. செல்வராணி | | கரவெட்டி | 10000. 00 |

(தொடரும்...

பணத்தை உங்கள் தெய்வமாக்கிவிட்டால் அது சைத்தான்போல உங்களை ஆட்டிப் படைக்கும்.

# மாதா பிதா

– திரு யூ.பி. ஆனந்தம் அவர்கள் –

உலகில் நம் தோற்றத்திற்குக் காரண கர்த்தாவாக இருப்பவர்கள் மாதா பிதாவே. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது ஔவையார் அமுதமொழி. மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது ஆன்றோர் வாக்கு. அ∴தாவது முதலில் மாதாவைக் காண் கிறோம். மாதா பிதாவை இனங்காட்டுகின்றார். பிதாவானவர் நம்மைக் குருவிடம் சேர்க்கிறார். குருவானவர் இறைபதம் பெற வழிகாட்டுகிறார். இதனையே ஈன்றுபுறந்தருதல் அன்னையர் கடமை என்றும் சான்றோனாக்குதல் தந்தையர் கடமை என்றும் கூறப்பட்டிருக்கிறது. தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

இவர்களில் மாதாவைப்பற்றிக் கூற விளைகையிலே அம்மா என்றால் அன்பு என்று கூறப்படுகிறது. தனது மனைவி கேட்டுவிட்டாள் என்று தாயினது இருதயத்தை வெட்டி எடுத்துச் செல்லும்போது கல் தடக்கி விழும் மகனைப் பார்த்து அந்த இருதயம் கேட்டதாம் "என்ன மகனே தடக்கி விழுந்து விட்டாயா? யாதாகினும் அடிபட்டு விட்டதா?" என்று. அவ்வளவு அன்புள்ளம் கொண்டவளே தாய். ஒரு பிள்ளைக்கு இரண்டு தாய்மார் உரிமை கொண்டாடியபோது பாதியாக வெட்டிக்கொடு எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. "இல்லை வெட்ட வேண்டாம் யாரிடமாவது சுகமாக என் மகன் இருந்தால் சரி" என்று கூறியதைக் கொண்டு உண்மைத் தாயை இனங் கண்டதாக கதையொன்றுண்டு.

"அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே"

என்பதும்

"ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தா வாங்கலாம்
அம்மாவை வாங்க முடியுமா"

என்ற பாடலடியும்,

"அன்னையைப் போல் தெய்வம் கண்டதுண்டோ"

என்பதுவும் அன்னையின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றன.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்று தாயையே முதன்மைப் படுத்துதல் காண்கிறோம்.

"தந்தை மகற்காற்றும் உதவி அவையகத்து
முந்தியிருப்பச் செயல்"

என்று கூறப்படுகிறது.

*தேவைக்கு மேலுள்ள பொருள் தேவையில்லாதவற்றை வாங்கவே பயன்படும்.*

"துள்ளித் திரியும் வயதில் துடுக்கடக்கி பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே" என்று வழிதவறிய ஒரு மகன் பாடுகிறான். ஆகவே எம்மை நல்வழிப்படுத்தி நலம் பெற வைப்பவர் தந்தையே.

ஆகவே, கண்கண்ட தெய்வங்களாகிய மாதா பிதாவை வணங்கி அவர்கள் வழி காட்டலிற் சென்று, அவர்களது மனங்கோணாது நடந்து அவர்கள் கடமைகளைச் செய்வோம். சிலர் வளர்ந்து கையில் சில காசு உழைக்கத் தொடங்கியதும் மாதா பிதாவைப் புறந்தள்ளி, மனைவி சொற்கேட்டு பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்ப்பதும் தற்காலத்தில் இடம்பெற்று வருகிறது. அவ்வாறுள்ளோர் அத்தகைய செயல் தமக்கு தம் மகனால் செய்யப்படும்போது உணருவர். எனவே மாதா பிதா வழிநின்று நல்வாழ்வு பெறுவோமாக.

## செந்தில் டுவல் தண்டால் வினைதனை அறுக்கும்

உண்டேன் உடுத்தேன் உறங்கினேன் விழித்தேன்
கண்டேன் மனம் மயங்கினேன் கணப் பொழுதுன்னை
வண்டார் புடைசூழ வனம் தேடும் பூவாகி
தொண்டர் இணைந் துணைந்து சார்த்தும் சரமதே.

சந்தமது தந்தும் துதிசெய்யும் மன மகிழும்
சொந்த மதும் வந்தும் துணை நின்றும் துயர்துடைக்கும்
எந்தனது முள்ளமது மேகாந்தமதும் கொள்ளும்
வந்தும் மனம் கொண்டும் வரம் பெற்றும் மனம் மகிழும்.

நின்றும் கிடந்தும் நடந்தும் உனைத் தேடும்
சென்றும் உவந்தும் கோலும் உன் வேலும்
நன்றும் தீதும் அகன்றும் பிணி தீர்க்கும்
என்றும் அகலும் வினையும் பிணியும் நின்திருத் தாள்பற்றின்.

சந்தமது கொள்ளும் பரமனடி பணிந்தால்
செந்தில் வேல் கண்டால் வினை தனை அறுக்கும்
வந்திப் பொழுது சந்நிதியான் அடி தொட்டால்
எந்தன் வினைதனை அறுக்கும் சந்நிதியான் கண்பட்டே!

-பொ. பாலேஸ்வரன்-

பிறர் குற்றங்களைக் காண முயல்பவன் அரை மனிதன்.

# கால்நடைகளைக் காக்கும் கணபதி (தில்லையம்பலப் பிள்ளையார்)

– திரு ஆர்.வீ.கந்தசுவாமி அவர்கள் –

மானிடராகப் பிறந்த எங்களைக் காப்பாற்ற நாம் பலபல தெய்வங்களை வணங்கி வருகின்றோம். ஆனால் யாழ் குடாநாட்டில் தென்மராட்சி, வடமராட்சி எல்லையில் இருந்து அருள்பாலிக்கும் தில்லையம்பலப் பிள்ளையார் கால்நடைகளைக் காப்பாற்றி அருள் புரிகின்றார்.



இக்கிராமத்தை சிலர் வடமராட்சிக்கு உரியது எனக் கூறுகின்றனர். ஆனால் இக்கிராமம் போர்த்துக்கேயர் காலத்தில் வரணி கோவிற்பற்றில் அடங்குகின்றது. கரப் பானுக்கு மேற்குப் பக்கமாக பல யார் தூரத்தில் இக் கிராமம் உள்ளது. கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் வரணியில் இருந்து உட்பக்கமாக $2^1/_2$ மைல் தூரத்திலும் பருத்தித்துறை செல்லும் அந்தணத்திடல் வீதியில் விராலி மடம் சந்தியில் இருந்து $1^1/_2$ மைல் தூரத்திலும் இவ் ஆலயம் இருக்கின்றது. சங்கிலியன் மன்னன் காலத்தில் திருவம்பலமுதலி என்பவர் தம்பான் என்னும் கிராமத் திற்கு அண்மையில் உள்ள அம்பலவாணக் குளக்கரை என்னும் இடத்தில் வசித்து வந்தார். இவர் ஒரு சிவபக்தர். இவர் சிவபூசை செய்து உணவு அருந்துவார். விநாய கரையும் சிதம்பரம் சென்று தில்லையம்பலத்தையும் வழிபடுவதும் இவர் வழக்கமாகும்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது சைவ ஆலயங்களை அழித்தார்கள். சைவ அனுட்டானங்களை தடை செய்தார்கள். ஆனால் திருவம்பல முதலி சைவ ஒழுக்கங்களையும் சிவபூசை யையும் மாறாது, தவறாது கடைப்பிடித்து வந்தார். இதனை சில சதிகாரர் மறை முகமாக தளபதிக்கு அறிவித்து விட்டனர். அதனை அறிந்த தளபதியும் அங்கு திரு வம்பலமுதலியார் சிவபூசை செய்து சைவ முறைப்படி உணவு உண்ணக் கண்டு கடும் கோபம் உற்று அப்போது விதிக்கப்பட்ட சட்டப்படி திருவம்பலமுதலிக்கு சிரச்சேத தண்டனையை வழங்குமாறு தனது படை களுக்கு உத்தரவிட்டான்.

அதன் பிரகாரம் திருவம்பலமுதலியை தற்போது ஆலயம் இருக்கும் காட்டுப்பகுதிக் குள் கொண்டு சென்று சிரசை வெட்டிய போது "தில்லையம்பலப் பிள்ளையாரே" எனக் கூறி சிவபதம் அடைந்தார். அவரது பூதவுடல் அவ்விடத்திலேயே சமாதியானது. அவ் விடமே இன்று அருள்பாலிக்கும் கீர்த்தி

*திறமை தானாக வராது நாம்தான் வளர்த்துக்கொள்ள வேண்டும்.*

வாய்ந்த ஆலயமானது என்னும் மரபுவழிக் கதைகள் உண்டு. இதற்கு முன்பு இவ்விடத்தில் ஆலயமிருந்தது என்பது ஆய்விற்குரியது. இவ்வாலயம் பண்பாட்டுச் சிறப்பு மிக்கது.

இவ்வாலயத்திற்கு வரணியிலிருந்து மட்டுமன்றி தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் எனப் பல இடங்களில் இருந்தும் தமது கால்நடைகளுக்கு வரும் நோய்களுக்கு நேர்த்தி வைத்து பொங்கல் இட்டு மோதகம் அவித்து அபிஷேக ஆராதனைகள் செய்கின்றனர். பசு கன்று ஈன்றவுடன் எடுக்கும் முதல் பாலைக் கொண்டு வந்து அபிஷேகம் செய்கின்றனர். மாட்டுப் பொங்கல் தினத்தில் இத்தலத்தில் விசேடமாக ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்து பொங்கல் வைத்து வழிபடுகின்றனர்.

வடமாகாண ஆளுநர் ஜெயிநோல்ட் குரே வடமாகாண உறுப்பினர் அகிலதாஸ் இவ்வாலயத்திற்கு விஜயம் செய்தபோது சின்னத்தம்பி கந்தப்பு என்னும் பூசகரினால் பிரசித்திபெற்ற இவ் ஆலயத்திற்கு மின்சாரம் வழங்குமாறு விடப்பட்ட கோரிக்கையின் பேரில் சென்ற ஆவணி மாதம் 2016ஆம் ஆண்டு 46 தூண்கள் போடப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது. வீதியும் செப்பனிடும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று இந்தியாவிலே கோவை மாநகருக்கு அருகில் செங்களிப்பாளையம் என்னும் ஊரில் கோமாளி நாயக்கர் புல்லாங்குழல் இசைத்து மாடுகளை மேய்த்து வந்தார். கால்நடைகட்கு கைவைத்தியம் செய்வதில் பெரு நிபுணர். கால்நடைகளில் பரிவும் இரக்கமும் கொண்டவர். அவரின் புல்லாங்குழல் இசையில் கால் நடைகள் மயங்கி அவரைச் சுற்றியே நின்று கொண்டிருக்குமாம்.

அவர் மின்னல் தாக்கி அவருடைய உயிர் பிரிந்த பிற்பாடு மாடுகள் கண்ணீர் சிந்தியபடி காணப்பட்டனவாம். அவர் இறந்த இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டு அவ்வூர் மக்கள் அங்கிருந்த வேப்பமரத்தடியில் நினைவாக ஒரு நடுகல் நாட்டி வழிபாடு செய்யத் தொடங்கினர். கால்நடைகட்கு வரும் நோய்கட்கு நேர்த்தி வைத்து பொங்கல் பூசை செய்கின்றனர். அபிஷேகம் செய்யும் தீர்த்தத்தை கால்நடைக்குத் தெளித்தாலே பூரண சுகம் பெறுகின்றன.

இதேபோன்று எமது யாழ் குடாநாட்டிலும் ஒரு தில்லையம்பலப் பிள்ளையார் கால்நடைகட்கு அருள்புரிவது பெருமையும் சிறப்புமாகும்.

---

## எது என்னுடையது?

துறவி ஒருவரிடம் பாடம் கற்க நான்கு சீடர்கள் வந்தனர். எல்லோரிடமும் அவர், "உங்கள் வீட்டிலிருந்து ஒரே ஒரு செம்பு மட்டும் கொண்டு வாருங்கள். மற்ற உபயோகங்களுக்கு ஆச்சிரமப் பொருள்களையே உபயோகித்துக் கொள்ளலாம்" என்றார். சீடர்கள், சில ஆண்டுகள் பயிற்சி பெற்றார்கள். துறவிக்கு முதுமை நெருங்கியதும், தனக்குப் பின் ஆசிரமப் பொறுப்பை ஒப்படைக்க, சீடர்கள் நால்வரில் தகுதியானவர் யார் என பரிசோதிக்க விரும்பினார். ஒருநாள் அவர்களை அழைத்து, "உங்கள் வீட்டிலிருந்து கொண்டுவந்த செம்பை எடுத்து வாருங்கள்" எனக் கட்டளையிட்டார். நால்வரில் மூவர் மட்டும் ஓடித் தங்கள் அறையில் இருந்த செம்பை எடுத்துவந்து குருவிடம் காட்டினர். நான்காவது சீடன் சொன்னான்; குருவே! நான் தங்களிடம் பாடம் கேட்க வந்த சில நாட்களிலேயே "நான், எனது" என்ற எண்ணம் போய்விட்டதே! ஆகவே என் வீடு என்று எதைச் சொல்வது? எங்கிருந்து எதை எப்படி எடுத்துவருவது" என்றான். குரு அவனிடமே ஆசிரமப் பொறுப்பை ஒப்படைத்தார்.

-பக்தி-

*தோல்வி என்பது உண்மையை நிலைநாட்ட ஏற்படும் அனுபவம்.*

# ஆச்சிரமம் கண்ட பெருவிழா (02-10-2016)

–தொகுப்பு: வல்வையூர் அப்பாண்ணா –

02-10-2016- ஞாயிற்றுக்கிழமை காலை வேளை. சந்நிதியான் ஆச்சிரமம் வழமைக்கு மாறான ஒருவித பரபரப்புடன் காணப்பட்டது. வழமையாக ஒலிக்கும் கம்பீரமான ஒற்றைக் குரலொலியைவிட அன்றைய தினம் இன்னும் பல திசைகளிலிருந்தும் ஒலித்த குரல்கள் ஆச்சிரமத்தின் பரபரப்பை அதிகரித்தது.

விழாக்குழுவின் செயற்குழுவில் ஆச்சிரமம் சார்பான இணைப்பாளராகச் செயற்பட்ட சி. நிலா அவர்களின் இணைப்பகம் அச்சுக்கூடத்தின் உள்ளே அமைந்திருந்தமையால், அச்சுக்கூடமே அதிகூடிய பரபரப்பு நிறைந்த இடமாகக் காணப்பட்டது.

"மங்கல வாத்தியம் வந்தாச்சா?"

"மேடை அலங்காரம் முடிந்ததா?"

"படப்பிடிப்பாளர்கள் ஆயத்தமா?"

"சந்நிதிக்கான அர்ச்சனைத் தட்டு தயாரா?"

"ஒலிவாங்கிகள் அனைத்தும் சரி பார்த்தாச்சா?"

இப்படிப் பல குரல்கள் பல திசைகளிலிருந்தும் எழுந்தன. அழைப்பிதழில் குறிப்பிட்ட நேரம் காலை 8 மணி நெருங்க நெருங்க பரபரப்பு மேலும் அதிகரித்தது. விழாக் குழுவினர், ஆச்சிரமத்துடன் அதீத ஈடுபாடு கொண்ட அன்பர்கள், சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள், ஞானச்சுடரின் கட்டுரையாளர்கள், கலை நிகழ்ச்சிகள் நடாத்த வந்த மாணவிகளும் - பெற்றோர்களும் என கணிசமானோர் ஆச்சிரம முன்றலில் - பூவரசு மரத்தடியில் ஒன்று கூடுகின்றனர்.

பல வாரங்களுக்கு முன்னரே அமைக்கப்பட்ட விழாக்குழு, பலமுறை கூடி விழாவினைச் சிறப்புற நடாத்தி முடிக்க வேண்டிய வழிவகைகள் பலவற்றையும் முடிவு செய்திருந்தனர். அதன்படி,

நேர்மையான உழைப்பில் கௌரவம் இருக்கிறது.

1) ஆச்சிரம சுவாமிகளுக்கான கௌரவிப்பும், "ஞானதானம்" நூல் வெளியீடும்
2) 225ஆவது "ஞானச்சுடர்" வெளியீடு
3) கட்டுரையாளர் கௌரவிப்பு

ஆகிய மூன்று முத்தான நிகழ்ச்சிகளும் சேர்ந்த "பெருவிழா" அன்றைய காலைப் பொழுதில் களைகட்ட ஆரம்பித்தது.

இதோ... மங்கல வாத்திய ஓசையுடன் சுவாமிகளின் பிரதிநிதியாக "குட்டியம்மா" என அனைவராலும் அழைக்கப்படுகின்ற சுவாமிகளின் பாரியார் "பரிமளாதேவி" சந்நிதிப் பெருமானின் அர்ச்சனைத் தட்டினைக் கையிலேந்திச் செல்ல, ஆச்சிரம சுவாமிகளுக்கு வழங்கப்படவிருந்த விருதினை- ஒரு சிறிய மஞ்சள் நிறப்பட்டு அணிவித்தபடி ஓர் அன்பர் எடுத்துச் செல்ல, ஆச்சிரம வாசலிலிருந்து ஊர்வலமாக சந்நிதி கோவில் நோக்கி நகர்ந்தது. ஊர்வலத்தில் பங்குகொண்ட அனைவரும் நேர்த்தியான- அழகிய ஆடை அணிகலன்களுடன் காணப்பட்டமையானது, செல்வச்சந்நிதியில் நாம் அடிக்கடி காணுகின்ற திருமண ஊர்வலக் காட்சியினை நினைவுபடுத்தியது.







செல்வச்சந்நிதியானின் சந்நிதானத்தில் மங்கல வாத்தியம் முழங்க அபிஷேகம் - பூசை - ஆராதனைகள் நடைபெற்றன. அன்றைய பூசையினை பாலசுப்பிரமணிய ஐயர் சார்பாக - அவரது சகோதரர் மகேந்திரம் ஐயர் சிறப்புற நடாத்தி வைத்தார். கோவிலில் அர்ச்சகரால் வழங்கப்பட்ட அர்ச்சனைத்தட்டு - பிரசாதம் முதலானவற்றுடன் சுவாமிகளுக்கு வழங்கப்படவிருந்த விருதினையும் எடுத்துக் கொண்டு சந்நிதியான் ஆச்சிரம வாசலை நோக்கி மங்கல இசை யுடன் நடைபவனி தொடர்கிறது.



சுவாமிகளுக்கு வழங்கப்படவிருந்த விருதின்மேலாக சிறிய மஞ்சள் நிறப்பட்டு சாத்தப்பட்டிருந்தமைபற்றி ஏற்கனவே குறிப்பிட்டேன். சந்நிதியான் சந்நிதானத்திலிருந்து மீண்டும் இந்த விருது எடுத்து வரப்பட்டபோது விருதானது அழகான கறுப்புக்கரை வைத்த செந்நிறப் பட்டாடை அணிவிக்கப்பட்டிருந்த அதிசயம் கண்டு - முருகன் திருவிளையாடலை நினைந்து அனைவரும் ஆனந்தம் அடைந்தனர்.

* * * * * * * * * * *


**ஒவ்வொரு வெள்ளியும் நடைபெறும் 63 நாயன்மார்களின் மகேஸ்வரபூசை நடைபெறும் முருகேசு சுவாமிகள் ஞாபகார்த்த மண்டபத்தின் தெற்கு ஓரத்தில் நடன நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டிய விசேட மேடை அமைக்கும் பணிகள் முதல்நாள் சனிக்கிழமையே நிறைவுபெற்று விட்டது. மேடையின் பின்புறமான சுவர்ப் பகுதியில் அலங்கார கணபதி வலது புறமாகவும், வள்ளி தேவசேனை சமேத முருகப் பெருமான் மயில் வாகனத்தில் இடது புறமாகவும் காணப்பட்ட பெரிய அளவிலான பதாதைகள் அனைவரையும் கவர்ந்தது. ஆச்சிரம வளாகம் முழுவதும் தோரணங்களால் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது.**


**பெருவிழா நடைபெற்ற நாள் 02.10.2016 ஞாயிற்றுக்கிழமை. 28.09 புதனன்று இரவு 8.30க்கு ஆரம்பமான ஞானச்சுடர் 225ஆவது மலரின் அச்சுப்பதிப்பு மறுநாள் 29.09 வியாழன் பகல் 2மணிவரை இடையீடின்றித் தொடர்ந்தது. அச்சுக்கூடத்தில் கடமையிலிருந்த சுதன்- சுகந்தன் இருவரும் தேநீர் மற்றும் உணவுக்காக எடுத்துக்கொண்ட அரைமணிநேர ஓய்வு வேளையில் மட்டும் அச்சியந்திரமும் நிறுத்தப்பட்டு ஓய்வு கொடுக்கப்பட்டது. விழாவிற்கு முதல்நாள் 01.10.2016 சனிக்கிழமை காலை 9.30 முதல் மாலை 6.30 மணிவரை "ஞானதானம்" சஞ்சிகைக்கான அச்சுப்பதிவு தொடர்ச்சியாக நடைபெற்று நிறைவெய்தியது. தொடர்ச்சியாகப் பலமணிநேரம் இடையே எவ்வித இடர்பாடுமின்றி வேலைகளை நிறைவேற்றித் தந்த முருகப்பெருமானின் கருணையை என்னவென்று சொல்வேன்!.**

* * * * * * * * * * *


செல்வச்சந்நிதியான் வாசலிலிருந்து புறப்பட்டு வந்த ஊர்வலத்தினருக்கு, உள்ளே பூவரச மரத்தின் பின்புறம்- மண்டப வாசலில் நிறைகுட வரவேற்பளிக்கப்பட்டது. இப்பொழுது ஆச்சிரம சுவாமிகளும் இணைந்துகொள்ள, சிவத்திரு வ. குமாரசாமி ஐயரும் அவரது பாரியாரும் சுவாமிகளுக்கும் பாரியாருக்கும் மலர்மாலை அணிவித்து - பொன்னாடை போர்த்தி முதல் மரியாதை அளித்து விழா நாயகனையும் - நாயகியையும் விழா மேடைக்கு

அழைத்துச் சென்றனர். மேடையில்.... சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் போஷகர்களான வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ தண்டபாணிக தேசிகர், வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ மனோகரக் குருக்கள் இருவரும் ஆச்சிரம சுவாமிகளுக்கு பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து ஆசியுரை வழங்கினர். பிரம்மஸ்ரீ மனோகரக்குருக்கள் சுவாமிகளின் தலையில் கிரீடம் சூட்டி அழகு பார்த்தார்.





மேடையில்... விழா நாயகன் - நாயகி இருவருடனும், ஆசியுரை வழங்க வந்திருந்த ஆச்சாரியப் பெருமக்களும், கந்தர்மடம் சிவகுருநாத குருபீடம் வேத வித்யாசாகர சுவாமிகள், சிவன் மேம்பாட்டு நிறுவனத் தலைவர் சுவாமி கலியுகவரதன், இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோர் நின்றிருக்க, சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்களால் பஞ்சபுராணம் ஓதப்பட்டது. சபையோர் அனைவரும் எழுந்து நின்று அமைதியாக மௌனமாகப் பிரார்த்தனை செய்தனர். தொடர்ந்து முருகேசு சுவாமிகளின் நினைவு மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த தனி மேடையில் உரும்பராய் சுந்தர நர்த்தன ஆலய மாணவிகளான ர. வைஷ்ணவி, சு. சுவஸ்திகா, பு. கயூனா, க. கிருசாலினி, ம. மருஜா ஆகிய ஐந்து மாணவிகள் கலந்துகொண்ட வரவேற்பு நடனம் நடைபெற்றது.



பிரதான மேடையில்... சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் முன்னாள் தலைவரும்-அன்றைய விழாக்குழுவின் தலைவருமாகிய திரு சி. நாகலிங்கம் அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. அன்றைய விழாவின் நோக்கம் - செயல் - கட்டமைப்பு ஆகியவற்றைப்பற்றி தெளிவாகக் கூறியதுடன், விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் அன்போடு வரவேற்று அமர்ந்தார்.







விசேட மேடையில் நடைபெற்ற யா/ வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளான செல்வி தயாளரூபினி குமாரசாமியின் கீர்த்தனையும், செல்வி தயாளநீதினியின் பேச்சும் சபையோரை வெகுவாகக் கவர்ந்தன.

*உழைத்துப் போராடாமல் வெற்றியை அடைய முடியாது.*

யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திரு அ. குமாரவேல் அவர்கள் பெருவிழாவிற்கான தலைமையுரை நிகழ்த்த அழைக்கப்பட்டார். விழாவின் நோக்கம், சுவாமிகளின் மறுப்பு, விழாக்குழு அன்பர்களின் தொடர்ச்சியான வற்புறுத்தல், நிபந்தனைகளுடனான சுவாமிகளின் சம்மதம், "ஞானதானம்" மலர் வெளியீடு, ஞானச்சுடர் 225ஆவது மலரின் சிறப்பு என அ. குமாரவேல் ஆசிரியரின் தலைமையுரை விளக்கமாக விரிந்து சென்றது.

* * * * * * * * * * *

**சுவாமிகளின் நிபந்தனையின் பிரதான அம்சம் என்ன?**

**"இப்பாராட்டு விழா சம்பந்தமாக விழாக் குழுவினருடன் தொடர்புகொண்டு ஆதரவு வழங்கிய அன்பர்களைத் தவிர தனிப்பட்ட முறையில் எவருக்கும் அழைப்பிதழ் அனுப்புவதைத் தவிர்க்கும்படியும், பத்திரிகை விளம்பரம் மட்டும் பொதுவானதாக இருக்கட்டும் என்பதுடன் விழாவிற்கான நிதி சேகரிப்பிலும் மேற்குறித்த வகையினர் தவிர்ந்த வேறு எவரிடமும் நிதி வசூலிக்கக்கூடாது" என்பதுவுமே சுவாமிகளின் பிரதான நிபந்தனையாக இருந்தது. இதற்கேற்றபடி அன்றைய விழா மண்டபத்திலும் ஆதீனங்கள் - ஆச்சிரமங்கள் - பீடங்கள் சார்ந்த சுவாமிகளும் நிர்வாகிகளும் அமைப்பாளர்களும் மற்றும் பொது மக்களுமே நிறைந்து காணப்பட்டனர். அதனால் அன்றைய பெருவிழா முற்றுமுழுதாக ஒரு சமய சார்பான பெருவிழாவாக மிளிர்ந்தது என்பதுவே உண்மையானது. விருது வழங்கலின் பின்னர் ஏற்புரையாற்றிய மோகன் சுவாமிகளும் மேற்குறித்த விபரங்களைத் தெளிவுபடுத்தியிருந்தார்.**

* * * * * * * * * * *

சுவாமிகளும் பாரியாரும் மேடையில் நிற்க, ஆச்சாரியப் பெருமக்களும் விழாக் குழுவினரும் சூழ்ந்திருக்க, கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரம சுவாமி ஸ்ரீமத் மகாதேவ கணேசானந்தா சுவாமிகள் - ஆச்சிரம சுவாமிகளின் சேவையினைப் பாராட்டி



படிப்பு என்ற மெழுகுவர்த்திக்கு ஆர்வமே திரி.

பொன்னாடை போர்த்தி- "ஞான தான வள்ளல்" எனும் விருதினையும் வழங்கிப் பேருரையாற்றினார். சுவாமிகளின் பணியினை அவர் வாழும் காலத்திலேயே ஏற்றுவதும்- போற்றுவதும் - நன்றி கூறுவதும் மனித சமுதாயத்திற்குக் கிடைத்த பெரும்பேறு எனக் கருதி, ஆச்சிரமத்தோடு தொடர்புபட்டுள்ள அனைத்து அன்புள்ளங்கள் சார்பாகவும், விழாக் குழுவினரின் ஏற்பாட்டில் சுவாமிகளுக்கு "ஞான தான வள்ளல்" எனும் உயர் கௌரவம் அளிக்கப்பட்டது. காலநேரமறிந்து ஆற்றவேண்டிய பணியினை விழாக்குழுவினர் சிறப்பாகச் செய்ததுடன், வழங்கப்பட்ட "ஞான தான வள்ளல்" எனும் பட்டமானது சுவாமிகளின் பணியினைச் சுட்டிநிற்கும் சிறப்பு அபாரமானது.

அமுதகலாஜோதி, லங்கா ரத்ன ஜோதி எனப் பல பட்டங்கள் ஏற்கனவே சுவாமிகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இன்றைய பெருவிழாவில் வழங்கப்பட்ட "ஞான தான வள்ளல்" எனும் விருதும் - பட்டமும் எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக அமைந்தது.

ஆச்சிரமம் சார்பாக இதுவரை வழங்கப்பட்டு வந்த அனைத்து விருதுகளும் "ஞான..." எனத் தொடங்கும் மரபு ஒன்றுண்டு. ஞான பண்டித இயல் அரசு, ஞான பண்டித ஆய்வரசு, ஞான பண்டித இசையரசு, ஞான பண்டித தமிழ்க் குரிசில், ஞான பண்டித கலாவித்தகி... போன்று ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட அனைத்து விருதுகளையும் உதாரணம் சொல்லலாம். ஆகவே இந்த மரபு மாறுடையாமல் சுவாமிகளுக்கு வழங்கப்பட்ட விருதும் "ஞான..." என ஆரம்பிக்கிறது. தானங்களில் சிறந்தது அன்ன"தானம்". அன்னத்தைத் தானமாக்கும் இந்த அறப்பணி வருடம் 365 நாட்களும் ஆச்சிரமத்தில் தொடர்கிறது. "வள்ளல்" என்பார் வாரிக் கொடுப்பவர். சுவாமிகளும் அன்னத்தைத் தானமாக வழங்கும் நிறைமனதுடை யோனாகையால் சுவாமிகளுக்கு வழங்கப்பட்ட "ஞான தான வள்ளல்" எனும் பட்டம் மிக மிகப் பொருத்தமானதே. சுவாமிகளுக்கு "ஞான தான வள்ளல்" என்றும், அன்றைய தினம் வெளியிடப்பட்ட விசேட மலருக்கு "ஞானதானம்" எனவும் பெயர் புனைந்த விழாக்குழுவினர் பாராட்டுக்குரியவர்களே. ஆச்சிரமத்துடன் ஆத்மார்த்தமான ஈடுபாடு கொண்ட சிலருடன் அறிவு புகட்டும் ஆசிரிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலரும் விழாக் குழுவில் அங்கம் வகித்த காரணத்தால் பொருள் பொதிந்த இவ்விரு பெயர்களும் தெரிவாகியிருக்கிறது.

* * * * * * * * * * *


**நேரம் 10.30 மணி. பெருவிழாவின் காலைப் பொழுதினில் இனிப்பான "கொழுக்கட்டை"யும் கடலட்டும், நெஸ்காப்பியும் அனைவருக்கும் வழங்கப்பட்டது. திருமண வைபவங்களில் தாலி கட்டும் நிகழ்வு நிறைவெய்தியதும் அனைவருக்கும் "கற்கண்டு" வழங்குவது இன்றைய வழமை. பகல் 12 மணியளவில் மேடையில் விழாவின் நாயகன் - நாயகிக்கான முதல் வாழ்த்தும் கௌரவமும் வழங்கப்பட்டதும் சபையோருக்குச் சுவையான "உழுத்தம்பிட்டு" (சில ஊர்களில் இதனை "ஆலங்காய்ப்புட்டு" என்று அழைக்கும் வழக்கமும் உண்டு.) வழங்கப்பட்டமை மிகப் பொருத்தமாக அமைந்தது. மாலை 3.00 மணிக்கு வடை- றோல்- கேக் சிற்றுண்டிகளுடன் சுடச்சுட தேநீரும் வழங்கி அசத்தினர். விழா வேளையின் விருந்தோம்பல் கண்டு சபையோர் வியப்படைந்தனர்.**

* * * * * * * * * * *

சுவாமிகளின் விருது வழங்கும் நிகழ்வினைத் தொடர்ந்து விழாக்குழுவின் சார்பாக கவிமணி க. ஆனந்தராசா அவர்களால் ஆக்கப்பெற்ற வாழ்த்துப் பாவினை அவரே வாசித்த பின்னர், நல்லை ஆதீன குரு முதல்வரும் - கந்தர்மடம் வேத வித்யா சாகர சுவாமிகள்

*சிந்திக்காமல் பேசத்தொடங்குவது குறி பார்க்காமல் அம்பை விடுவது போன்றது.*

இருவரும் இணைந்து “ஞான தான வள்ளல்” மோகனதாஸ் சுவாமிகளிடம் கையளித்தனர்.




சுவாமிகள் ஏற்புரை வழங்கவேண்டிய தருணம் வந்தது. ஆச்சிரமத்தின் ஆரம்பகால சிரமங்கள், சிரமமான வேளைகளில் கைகொடுத்து உதவியவர்கள், இன்றைய விழாக் குழுவினர் என அனைவருக்கும் தமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார் சுவாமிகள். ஏற்புரையின் பல இடங்களிலும் சுவாமிகள் மிக உணர்வுபூர்வமாகக் காணப்பட்ட காரணத்தால் நாத் தழுதழுக்க - பேசமுடியாமல் சங்கடப்பட்டமையையும் அவதானிக்க முடிந்தது. விழாக் குழுவினர் அனைவரையும் ஒன்றுசேர மேடைக்கு அழைத்து தம்முடனும்-பாரியாருடனும் புகைப்படமெடுத்து பெருமைப்படுத்திக் கொண்டார் சுவாமிகள்.


* * * * * * * * * *

சுவாமிகளின் பாரியார்பற்றி சில வரிகள் கூறவேண்டியுள்ளது. சுவாமிகளின் சகல செயற்பாடுகளுக்கும் உற்ற துணையாக - பக்கபலமாக இருக்கும் பாரியார் பரிமளாதேவி அவர்கள் அதிகாலை முதல் இரவுவரை ஆச்சிரம சமையலறையிலேயே தன் பொழுதைக் கழித்துவரும் காரணத்தால் ஆச்சிரமத்திற்கு வரும் பொதுமக்களாயினும் சரி, ஏன்?... ஆச்சிரமத்துடன் உளமாரப் பங்களிப்புச் செய்யும் பலருக்குக்கூட அம்மையாரைக் காணும் சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. பொதுவாக ஆச்சிரமத்தின் பணிபுரிவோர் ஓய்வுபெறும் மாலை வேளையில் மட்டும் சமையலறைக்கு வெளியே வந்து நடமாடுவதை சில சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறோம். காலமெல்லாம் அடுப்போடும் நெருப்போடும் மல்லுக்கட்டி நிற்கும் அம்மையாரையும் வெளியே கொண்டுவந்து சுவாமிகளோடு மேடையேற்றி கௌரவித்தமையானது விழாக்குழுவினரின் இன்னொரு சாதனையாகும். அம்மையாரின் சமையலறைப் பணியினை ஆச்சிரம ஆவணப்படத்தில் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

* * * * * * * * * *

மனிதன் தோல்வியின்மூலமே மேலும் புத்திசாலி ஆகின்றான்.

மீண்டும் மேடையில்... விழாக்குழுவினர் சார்பாக வாசித்து அளிக்கப்பட்ட வாழ்த்துப் பாவினைத் தொடர்ந்து, ஞானச்சுடர் கவிதையாளர் இரா. குகதாசனும், இரா செல்வவடிவேல் ஆசிரியரும் இணைந்து ஆக்கிய வாழ்த்துப்பா இரா. குகதாசன் அவர் களால் வாசிக்கப்பட்டு சுவாமிகளிடம் கையளிக்கப்பட்டது. இந்த வாழ்த்துப் பாவின் அச்சுப் பிரதிகள் சபையோருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்ததால் கவி தையின் உள்ளடக்கத்தினை சபையோர் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது. இதனைத் தொடர்ந்து சிவ. ஆறுமுகசாமி J.P அவர்கள், திருமதி சசிலேகா ஜெய ராஜன் அவர்கள், சைவப்புலவர் நித்திய தசீதரன் அவர்கள், தயாளினி குமாரசாமி அவர்கள், செல்வி சி. நிலா ஆகியோர் சுவாமிகளின் பணியினைப் பாராட்டும் தத்தமது உள்ளக் கருத்தினைக் கவிதையாக்கி வாசித்தளித்து மனநிறைவு பெற்றனர்.




மலர் மாலைகளுடனும், மலர்ச் செண்டுகளுடனும், பொன்னாடைகளுடனும் வரிசை யாக நின்றிருந்த ஆச்சிரம அபிமானிகள் - ஆண்களும் பெண்களுமாக- சுவாமிகளுக்கும் பாரியாருக்கும் அவற்றினை வழங்கி சுவாமிகளுடனும் - பாரியாருடனும் கூட நின்று புகைப்படமெடுத்து தமது உள்ளன்பை வெளிக்காட்டிக்கொண்டனர்.

மேடையிலே சுவாமிகளுக்கு விருது வழங்கும் வேளையிலே வருகை தந்த நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளை விழாக் குழுவினர் முறைப்படி மேடைக்கு அழைத்து வந்தனர். ஆதீனம் அவர்கள் மேடைக்கு வந்தவுடனேயே சுவாமிகளுக்கு மாலை அணிவித்து, நல்லை ஆதீனத்தின் பெருமைக்குரிய "ஒப்புரவாளர்" விருதினையும்



மன்னிக்கும் உள்ளத்தில் கடவுள் குடிகொண்டிருக்கின்றார்.

வழங்கி, தமது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் வழங்கினார். ஆதீனம் வழங்கிய பெறுமதிமிக்க - நீண்ட - எளிமையான உரையில் ஒரு அம்சம் அனைவரதும் கவனத்தையும் ஈர்ந்தது. நல்லை ஆதீனத்தின் சரித்திரத்திலே இதுவரை மூவருக்கு மட்டுமே உயர்ந்த "ஒப்புரவாளர்" விருது வழங்கப்பட்டுள்ளது. நான்காவதாக இந்த "ஒப்புரவாளர்" எனும் ஒப்பற்ற விருதினை தாம் வழங்குவதில் மிகுந்த மனநிறைவடைவதாக நல்லை ஆதீனம் அவர்கள் தமதுரையில் குறிப்பிட்டார்கள். இந்த ஒப்புயர்வற்ற விருதினை சுவாமிகள் பெற்றுக்கொண்டமை யானது, ஆச்சிரமத்தை உண்மையாக நேசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் கிடைத்த வெகுமதியாகக் கொள்ளப் படல் வேண்டும்.




விழாக்குழுவினரின் ஏற்பாட்டில், சுவாமிகளின் பாரியார் பரிமளாதேவி அவர்களுக்கு அன்னம் பொறிக் கப்பட்ட "தங்க மோதிரம்" வழங்கப்பட்டது. பெரியபுலம் மகா வித்தியாலய இளைப்பாறிய அதிபர் செல்வி அ. கந்தையா அவர்கள் விழா ஏற்பாட்டாளர்கள் சார்பாக அம்மையாருக்கு தங்க மோதிரத்தினை அணிவித்து வாழ்த்தினார்கள்.

ஆச்சிரமத்தோடு ஈடுபாடு கொண்டிருக்கும் அனைவராலும் அறியப்பட்ட "பபா சுவாமி" என்றழைக்கப்படும் திரு பொ. அருட்செல்வம் அவர்கள், மணிகளால் கோர்க்கப்பட்ட கிரீடத்தினை சுவாமிகளின் தலையில் அணிவித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

திருக்கேதீஸ்வரம் ஸ்ரீமத் சபாரெத்தினம் சுவாமிகளின் தொண்டர் சபையினரின் சார்பாக திரு தம்பு துரைராஜா அவர்களால் வழங்கப்பட்ட வேல் ஒன்று, திரு கணேசமூர்த்தி குடும்பத்தாரால் வழங்கப்பட்ட கேடயமும் பொன்னாடையும், திரு இ. கார்த்திகேசு அவர்கள் வழங்கிய வெள்ளியினால் இளைக்கப்பட்ட படிகமாலை, திரு ஆ. யோகராஜன் குடும்பத்தினரால் சுவாமிகளுக்கு வழங்கப்பட்ட ஒரு அடி உயரமான வேல் ஒன்று ஆகிய விருதுகள் ஆச்சிரம சுவாமிகளின்மீது அவர்கள் கொண்டிருக்கும் உளமார்ந்த பக்தியையும் அன்பையும் காட்டி நிற்கிறது.

சுவாமிகளின் கௌரவிப்பு மேடையில் நடைபெற்றுக்கொண்டிருந்த அதே வேளையில்-நேரத்தினைக் கருத்திற்கொண்டு - விழாக் குழுவினரின் ஏற்பாட்டில் தயாரிக்கப்பட்ட ஆச்சிரம நிகழ்வுகளின் ஆவணப்படம் பெரிய திரையில் விசேட மேடையில் ஒளிபரப்பாகியது. இறுவெட்டில் ஆச்சிரமத்தின் அன்றாட- வாராந்த - மாதாந்த- வருடாந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் நிழற்படமாகியிருந்தது. ஆச்சிரம மையத்துப் பூசையறையில் நடைபெறும் பூசை நிகழ்வுகள், பூவரச மரத்தடி வணக்கங்கள், தினசரி அன்னதான நிகழ்வு, வெள்ளிதோறும் நடைபெறும் மகேஸ்வர பூசை, கதிர்காம யாத்திரைக் குழுவினரின் பேருந்துப் பயணம், மனிதாபிமான உதவிகள், இலவச வைத்திய சேவை, ஆச்சிரம சமூகம் பார்த்தறியாத சமையலறைக் காட்சிகள், அச்சுக்கூடத்தில் "ஞானச்சுடர்" ஆக்கம் எனவும், இன்னும் பலவும் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆவணப்படமாக வெண்திரையில் ஓடிக்கொண்டிருந்தது.

*நாம் படிக்கப் படிக்க நம்மிடமிருக்கும் அறியாமையை அறிந்துகொள்கிறோம்.*

* * * * * * * * * * *

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போன்று "சுவாமிகள் தங்கும் இடம்" எனக் காணப்பிக்கப்பட்ட அறையைக் கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டனர். மேலே சீற் போடப்பட்ட பதிவான கூரைப்பகுதி, பழைய தகரக் கதவு, சுற்றிவர தகரத்தால் அடைக்கப்பட்டு ஒரு பழைய சேலையினால் மூடியிருந்த விறாந்தைப் பகுதி, உள்ளே - மரத்தினாலான ஒரு பழைய வாங்கு, ஒரு தலையணை, அந்தத் தலையணையின் மேலாக ஒரு துண்டு அல்லது போர்வை- இதுவே சுவாமிகள் தங்குமிடத்தின் விபரணம். சுவாமிகளின் தங்கும் அறையின் அமைப்பு- சுவாமிகள் எவ்வளவு எளிமையான- மிகச் சாதாரணமான வாழ்க்கை முறையினைக் கொண்டிருக்கிறார் என்பது கண்டு சபையோர் வியப்படைந்தனர்.

பெருவிழா நாயகன்- நாயகி இருவருக்குமான புத்தாடைகள் அனைத்தும் விழாக்குழுவினரின் அன்பளிப்பாக இருந்தது மட்டுமல்லாமல், ஆச்சிரமத்தின் பணியாளர்கள் அத்தனை பேருக்கும் புத்தாடைகள் வழங்கப்பட்டிருந்தன. சாதாரண நாட்களில் நேர்த்தியாக சாரமும் அரைக்கை பெனியனுடனும் தமது கடமைகளைக் கவனித்து வரும் பணியாளர்கள் அனைவரும், பெருவிழாவன்று பட்டுக்கரை வேட்டி- இளஞ்சிவப்பு நிறம் கொண்ட முழுக்கையுள்ள சேர்ட்- அதற்கும் மேலாக வேட்டிக்கு ஏற்றபடியான பட்டுச் சால்வை அணிந்து ஒவ்வொருவரும் "மாப்பிள்ளை"க்கோலத்தில் காணப்பட்டனர். வயது குறைந்தவர்களிலிருந்து- நடுத்தர வயதுக்காரர்வரை அனைவரும் ஒரேவித உடையில் நடமாடியது மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்தினரை வெகுவாகக் கவர்ந்தது. சுவாமிகளின் பிள்ளைகளையும் (பணி செய்வோர் அனைவரும் அவருக்குப் பிள்ளைகளே) புத்தாடை ஈந்து கௌரவப்படுத்திய விழாவின் ஏற்பாட்டாளர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

* * * * * * * * * * *

இப்பொழுது நேரம் 12.40க்கும் மேலாகிறது. சந்நிதியானின் மதியநேர பூசை முடிந்து - வழமைபோல- ஆச்சிரமத்தின் உள்ளே உணவருந்த வந்தவர்களுடன் கோவிலடியில் தங்கியுள்ள வழமையானவர்களும் உள்ளே வருகிறார்கள். அத்துடன் விசேட மேடையில் கலை நிகழ்ச்சிகள் நடாத்த வந்திருந்த சிறுமிகளின் வாடிய முகங்களும் ஆச்சிரம சுவாமிகளை "பந்தியை ஆரம்பிக்கலாம்" எனும் ஆணை பிறப்பிக்கக் காரணமாகிறது. முருகேசு சுவாமிகளின் ஞாபகார்த்த மண்டபத்தின் கிழக்காக இருக்கும் சிறு மண்டபத்திலும், சுவாமியறைக்கு முன்பாக இருக்கும் பரந்த மண்டபத்திலுமாக பாய்விரித்துப் பந்தி ஆரம்பமாகிவிட்டது. ஆணைக்குக் காத்திருந்தவர்கள்போல, பட்டு வேட்டியினை மடித்துக்கட்டியபடி பணியாளர்கள் பரபரப்பாக இயங்கினர். வெங்காயச் சம்பல், மைசூர் பருப்புக்கறி, உருளைக்கிழங்கு குழம்பு, பொரித்த கத்தரிக்காய் கூட்டு கறிகளுடன் "புரியாணி" அனைவருக்கும் மதியநேர உணவாக வழங்கப்பட்டது. உணவருந்தியதும் கோவிலிலிருந்து வந்தவர்கள் பெருமளவாக வெளியேற, விழாவிற்காக வந்திருந்தோர் மீண்டும் விழா மண்டபத்திற்குச் சென்று அமர்ந்து கொண்டனர்.

* * * * * * * * * * *

## விழாக் குழுவினர்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு சி. நாகலிங்கம் |
| உப தலைவர் | : | திரு க. நல்லையா |
| செயலாளர் | : | திரு ஆ. சிவநாதன் |
| பொருளாளர் | : | திரு துரை. கணேசமூர்த்தி |

*சிறிய தவறுகளைத் திருத்திக்கொள்ளாவிடில் பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது.*

செயற்குழு

உறுப்பினர்கள் : திரு செ. பரமேஸ்வரன்
திரு இரா. செல்வவடிவேல்
திரு த. கணேசமூர்த்தி
திரு க. ஆனந்தராசா
திரு சிவ. ஆறுமுகசாமி
திரு சி. ஆறுமுகானந்தன்
திருமதி சசிலேகா ஜெயராஜன்
திருமதி த. வசந்தகுமாரி
செல்வி சி. நிலா

* * * * * * * * * * *

மீண்டும் மாலைநேர நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. விசேட மேடையில், உரும்பராய் சுந்தர நர்த்தன பாடசாலை மாணவியர் 8 பேர் கலந்துகொண்ட கும்மி நடனம் இடம்பெற்றது. ர. அபிரா, பி. கயூரிகா, ர. தக்ஷயா, ஆ. தரணிகா, ஜெ. கர்ணிகா, ர. தாரிகா, சு. சுவிர்றிகா, க. திருஷா ஆகிய மாணவிகளே கும்மி நடனத்தில் பங்குகொண்டவர்களாவர்.





பிரதான மேடையில் சுவாமிகளின் கௌரவிப்பு நிகழ்வு ஒரு வழியாக நிறைவுக்கு வர, "ஞானதானம்" விசேட மலர் வெளியீடு இடம்பெற்றது. "ஞானதானம்" மலரின் அறிமுக உரையினை ஆசிரியர் இரா. செல்வவடிவேல் அவர்கள் ஆற்றினார். சுவாமிகளை இவ்விழாவிற்கு சம்மதிக்க வைக்க விழாக்குழுவினர் பட்ட சிரமங்களையும், சுவாமிகள் கூறிய அத்தனை நிபந்தனைகளையும் தாம் ஏற்றுக்கொண்டு ஏற்பாடுகளை ஆரம்பித்தமை பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். இதற்கிடையே "ஞானதானம்" விசேட மலர் சபையினர் அனைவருக்கும் வழங்கப்பட்டது. முதற் பிரதியினை விழாக்



குழுவின் செயலாளர் திரு ஆ. சிவநாதன் வழங்க, விழாக் குழுவின் தலைவர் சி. நாக லிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

"ஞானதானம்" விசேட மலர்பற்றியும் நான்கு வரிகள் கூறவேண்டியுள்ளது. "ஞானதானம்" மலரின் ஆசிச் செய்திகளையும், விழாவிற்கு அனுசரணை வழங்கிய அன்பர் களின் பட்டியலையும் தவிர்த்துப் பார்த்தால் கட்டுரை ரூபத்தில் 14 உள்ளடக்கங்கள் காணப்படுகின்றன. காரை எம்.பி அருளானந்தன் ஆசிரியர் ஒருவரைத் தவிர விழாக் குழுவினர் அனைவரும் தத்தமது ஆக்கங்களை வழங்கியுள்ளனர். இந்தக் கட்டுரையாளர்கள் ஒவ்வொருவரும் தாம் எவ்வாறு "ஆச்சிரம குழுமத்தில்" அல்லது "ஆச்சிரம சமூகத்தில்" ஒன்றிணைந்தோம் எனும் நீண்டகால தொடர்புகளைக் கோடிட்டுள்ளனர். இதில் சிலர் "ஆனந்தா ஆச்சிரம" கால அனுபவங்களையும், பலர் "அரசம்மா மட" காலத்து அனுபவங் களையும் தொட்டுக்காட்டியிருப்பது அவர்களுக்கு சுவாமிகளுடனான தொடர்புகளைத் துலாம்பரமாகக் காட்டி நிற்கிறது. சுருங்கக் கூறின்- சாதாரண வெளியீடுகளுக்கான வரை யறைகள்- சம்பிரதாயங்கள் ஆகியவற்றிலிருந்து "ஞானதானம்" வேறுபட்டு நிற்பது ஒரு தனித்துவமே. மலர்க்குழுவின் பணி போற்றுதற்கு உரியது.

சுவாமிகளின் மலையகப் பயண வேளைகளில் உதவிகள் பல புரிந்து உறுதுணை யாக எப்பொழுதும் இருந்து வருகின்ற பதுளை இலங்கை வங்கியின் இளைப்பாறிய முகாமையாளர் திரு கி. குலசேகரம் அவர்கள் வாழ்த்துரை நிகழ்த்தினார். அவர் பிறப்பால் வடபகுதியைச் சேர்ந்தவராயினும் 30 வருட மலையக அனுபவத்துடன் கூடிய யதார்த்தமான பேச்சு, மலையகத்தின் வித்தியாசமான கோணங்களை நமது பார்வைக்குக் கொண்டு வந்தது. சுவாமிகளின் மலையகப் பணிகளை வரிசைப்படுத்தி வாழ்த்தி நன்றிகூறி அமர்ந்தார் திரு கி. குலசேகரம் அவர்கள். மலையகம் தொட்டிலாகலை அறநெறிப் பாடசாலை ஆசிரியை செல்வி வெள்ளிமலர் சுவாமிகள் மலையகத்தில் ஆற்றிவரும் பணிகள்பற்றி அங்குள்ள அறநெறிப் பாடசாலைகளின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.



விசேட மேடையில் உரும்பராய் சுந்தர நர்த்தன பாடசாலை மாணவிகளான நீ. நிதர்ஷினி, ந. சதுஷா, சோ. டிலக்ஷனா, க. திருமகள் ஆகியோரின் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்று சபையோரின் பாராட்டுதலைப் பெற்றனர். பிர தான மேடையில், "ஞானச்சுடர்" ஆன்மிக- மாதாந்த சஞ்சிகையின் 225ஆவது மலர் வெளியீடு நடைபெற்றது. வெளியீட்டுரை வழங்கு வதற்காக அழைக்கப்பட்ட திரு சி. சிவஞான ராஜா அவர்கள் அற்புதமான கவிதை வடி விலேயே தமது வெளியீட்டுப் பணியினை நிறைவு செய்து அமர்ந்தார். மலர் வெளியீட்டின்போது



*உன் அயலானை நேசி ஆனால் வேலியை எடுத்துவிடாதே.*

சி. சிவஞானராஜா அவர்கள் வாசித்து வழங்கிய கவிதை இம்மலரின் வேறொரு பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. 225ஆவது மலரின் மதிப்பீட்டுரையினை திரு ச. லலீசன் அவர்கள் நிகழ்த்தினார். நிறைந்த வாழ்த்துக்களுடன் நீண்ட ஒரு மதிப்பீட்டுரையாக அமைந்தபோதும், அனைவரையும் சிந்திக்க வைக்க பிரதான அம்சம் ஒன்றிருந்தது. "சுவாமிகள்" என யாரை அழைக்கிறோம்? ஏன் அழைக்கிறோம்? அது எவ்வாறு திரு செ. மோகனதாஸ் அவர்களுக்குப் பொருந்தி வருகிறது? "மோகனதாஸ்" எனும் பெயர் எவ்வாறு "மோகன் சுவாமிகள்" என்றாயிற்று? எனும் விளக்கத்தை தமக்கே உரிய பாணியில் அழகுறப் புரிய வைத்தார் லலீசன் அவர்கள். அவரது மதிப்பீட்டுரையின் இறுதிப்பகுதி "ஞானச்சுடர்" மலருக்கு "மலர்க்கிரீடம்" சூட்டியது போன்று அமைந்தது.

* * * * * * * * * * *

**இந்நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி - அறிவிப்பாளராகப் பணிபுரிந்தவர் செல்வி தயாளினி குமாரசாமி ஆகும். தனது கணீர் என்ற குரலில்- தங்குதடையற்ற உச்சரிப்பில்- அழகு தமிழில் சபையில் அமர்ந்திருந்த அனைவரையும் தன்பால் கவர்ந்திழுத்து வெற்றிகொண்ட செல்வி தயாளினி குமாரசாமி பேராதனைப் பல்கலைக் கழகத்தின் 2ஆம் வருட மாணவியாகும் அவரது நிகழ்ச்சி வர்ணனையின் பாணி மிகச் சிறப்பு... நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது. "வளர்க..." என செல்வியை வாழ்த்துகிறோம்.**

* * * * * * * * * * *

பிரதான மேடையில் திரு சிவ. மகாலிங்கம், திருமதி நாச்சியார் செல்வநாயகம், சிவன் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக சுவாமி கலியுகவரதன் ஆகியோரின் வாழ்த்துரைகளும் இடம்பெற்றன.



ஆச்சிரம இலவச மருத்துவ சேவையினை திறம்பட ஆற்றிவரும் டாக்டர் திரு சி. சிவயோககுரு அவர்கள், மிகக் குறைந்த முன்னறிவிப்புடன் ஆச்சிரம ஆவணப் படத்தைத் தயாரித்து வழங்கிய சப்தமி கலையக உரிமை யாளர் திரு கோ. சத்யன் அவர்கள், சுவாமிகளுக்கு வழங்கிய "ஞான தான வள்ளல்" எனும் விருதினை வடி வமைத்து- ஆக்கித் தந்த கல்வியங்காடு ஆசிரியர் திரு மகேசு பார்த்திபன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி விருதுகள் வழங்கி சபையோர் முன்னிலையில் கௌரவிக்கப்பட்டனர்.


2014, 2015 ஆண்டுகளில் "ஞானச்சுடர்" சஞ்சிகைக்கு ஆக்கங்களை வழங்கிய கட்டுரையாளர்களும்- கவிதையாளர்களும் 109 பேராகும். அவர்களில் பலபேர் அன்றைய விழாவில் கலந்துகொள்ளவில்லையாயினும், வருகை தந்திருந்த கட்டுரையாளர்கள் சிலருக்கு, யாழ் சிவதொண்டன் நிலையத்தினை நிர்வகித்துவரும் இளம் துறவி சுவாமி முரளி அவர்களால் பொன்னாடை போர்த்தி- விருதுகள் வழங்கி கௌரவம் வழங்கப்பட்டது.

*ஒரு நல்ல நண்பன் நூறு இனத்தார்க்குச் சமம்.*

சபையில் கூடியிருந்த- ஆச்சிரமத்தோடு ஈடுபாடு கொண்டிருந்த- ஆச்சிரமத்தை உள்ளன்போடு விசுவாசிக்கின்ற பலரையும் அழைத்து, அவர்கள்மூலம் பல கட்டுரையாளர்களையும் கௌரவித்தமையானது, அன்று சுவாமிகள் கையாண்ட புதிய வித்தியாசமான நடைமுறையாக அமைந்ததுடன் சபையோரின் பாராட்டுதலையும் பெற்றது.









மாலைநேர தேநீர் இடைவேளையின் பின்னர், விசேட மேடையில் கம்பர்மலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவிகளான ஸ்ரீதரன் கேதுஷா, ஸ்ரீதரன் லக்ஷி, ரவீந்திரன் அபிநயா ஆகியோரின் நடன நிகழ்ச்சி இடம்பெற்றது.














பெருவிழாவின் இறுதி நிகழ்ச்சியாக சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் சார்பாக திரு கு. அருணகிரிநாதன் அவர்களும், விழாக்குழுவின் சார்பாக விழாக்குழுவின் செயலாளர் திரு ஆ. சிவநாதன் அவர்களும் நன்றியுரை வழங்க, மாலை 3.45 மணியளவில் ''ஆச்சிரமம் கண்ட பெருவிழா'' நிகழ்ச்சிகள் இனிதே நிறைவெய்தியது.

225ஆவது "ஞானச்சுடர்" சிறப்பு மலரில் யான் எழுதிய "மகத்தான மருத்துவ சேவை" எனும் ஆக்கத்தின் இறுதிப் பந்தியினை மீண்டும் இங்கு தருவது பொருத்தம் எனக் கருதுகிறேன். "முருகன் திருவருட் கடாட்சத்தினால் தங்குதடையின்றி நடைபெற்றுவரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் நித்திய அன்னப்பணியும் - மருத்துவப் பணியும்- இவை தவிர்ந்த ஏனைய சீரிய பணி களும் சிறப்புடன் நிறைவேற, "ஞான தான வள்ளல்" அருட்திரு மோகனதாஸ் சுவாமிகள் - பாரியார் இருவருக்கும், நிறைந்த சுகத்தையும்- நீடித்த ஆயுளை யும் செல்வச்சந்நிதி முருகன் அருள வேண்டும் எனப் பெருவிழாவில் பிரார்த் தித்து நின்ற அடியார் கூட்டத்துடன் யானும் ஒருவனாகக் கலந்து நிற்கிறேன்"



## சந்நிதி யானே எல்லாம் சரிவரப் பார்த்துக் கொள்வான்

சந்நிதி வேலா என்றால்
சகலதும் வெற்றி யாகும்
சந்நிதி வேலன் தாளே
சஞ்சலம் தீர்த்து வைக்கும்
சந்நிதி சென்று வந்தால்
சந்தோ ஷமேவந் துசேரும்
சந்நிதி யானே எல்லாம்
சரிவரப் பார்த்துக் கொள்வான்.

-வ. யோகானந்தசிவம்-

அதிஷ்டத்தை என்றும் நம்பாதே அது உன்னைச் சோம்பேறியாக்கும்.

# கார்த்திகைமாத வாராந்த நிகழ்வுகள்

04.11.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "சமயம் காட்டும் வழிகள்"

வழங்குபவர் :- திரு தங்கராசா தவனேசன் அவர்கள்

---

11.11.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

18.11.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

25.11.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

# கார்த்திகைமாத ஞானச்சுடர் வெளியீடு

வெளியீட்டுரை :- திரு ச. நவரத்தினராசவேல் அவர்கள்

[இளை. அதிபர்]

மதிப்பீட்டுரை :- திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்

[அதிபர்]

**227 ஆவது மலர்**

பதிவு இல. QD/160/NEWS/2016

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

